
# பிள்ளையார் புராணம்



சிவதொண்டன் நிலையம்
செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் புராணம்

மூலமும் உரையும்



சிவதொண்டன் நிலையம்,

செங்கலடி.

2000, தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : குரோத ஡ு (1904-05).
இப்பதிப்பு : பிரமாதி ஡ு தை மாதம் (2000).

வெளியீடு:

சிவதொண்டன் நிலையம்,

செங்கலடி.

அச்சிடல் தயாரிப்பு: காந்தளகம்

834, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி - 853 4505.
மின்னஞ்சல் : sachi@giasmd01.vsnl.net.in
மின்னம்பலம் : tamilnool.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

குரோதி வருடம் (1904-05) வெளியிடப்பெற்ற முதற்பதிப்பின்

# நூன்முகம்

ஆன்மாக்களாகிய நாமெல்லாம் இகபரசாதனங்களைப்பெறுதற்குச் செய்யுங்கிரியைகள் விக்கினமின்றி இனிதுசித்திக்கும் பொருட்டு முதலிற் பூசிக்கப்படுங்கடவுள் விநாயகக்கடவுளே. இக்காரணத் தானன்றோ விக்கினேசுரர் சித்திவிநாயகர் என்றற் றொடக்கத்தபெயர்கள் இப்பெருமானுக்கு நேர்ந்தன.

இந்த விநாயகப்பெருமானை மெய்யன்புடன் வழிபடுவோர் அநுட்டிக்கத்தக்க பிரதான விரதம் சதுர்த்திவிரதம், சட்டிவிரதம் என இருவகைப்படும்.

பாத்திரபதசுத்தத்து வரும் சுக்கிலபக்ஷசதுர்த்தியில் விநாயகக் கடவுளைக் குறித்தநுட்டிப்பது சித்திவிநாயகசதுர்த்தி விரதமெனப்படும். இது பெரும்பான்மை ஆவணிமாசத்திலும் சிறுபான்மை புரட்டாதி மாசத்திலும் வரும். இத்தினத்திலே விக்கினேசுரரைப் பூசித்து விசேஷமாக அறுகு சாத்தி மோதகாதி நிவேதனஞ்செய்து இயன்ற தானதர்மங்களைச் செய்து உபவாசமாயிருத்தல் வேண்டும். இரவு சந்திரதரிசனஞ்செய்தல் குற்றமாம்.

கார்த்திகை மாசத்துத் திருக்கார்த்திகையை அடுத்துவரும் கிருஷ்ணபக்ஷபிரதமைமுதல் மார்கழி மாசத்துச் சுக்கிலபக்ஷ ஷஷ்டியீறாக வரும் இருபத்தொரு நாட்களிலும் விநாயகப்பெருமானைக்குறித்து அநுட்டிப்பது விநாயகஷஷ்டி விரதமெனப்படும். விரதாரம்பதிதியாகிய பிரதமைக்கு ரோகிணியும் விரதாந்த திதியாகிய ஷஷ்டிக்குச் சதயமும் சேர்ந்து வருவது விசேஷமாம். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையினும் பெண்கள் இடக்கையினும் கட்டி முதல் இருபது நாளும் ஒவ்வொருபொழுது போசனஞ்செய்து இறுதி நாளாகிய சட்டியினன்று உபவாசமிருத்தல் வேண்டும்.

நாம் காட்டிய இவ்விரதங்களிரண்டும் இந்நூலிலும் கூறப்பட்டன. இவ்விரதங்களை விதிப்படி சிரத்தையோடு அநுட்டிப்பவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஷ்டசித்தி தப்பாது கிடைக்கும்.

இப்பெருமானைக்குறித்து அநுஷ்டிக்கும் விரதங்களும், அவற்றின் மகிமையும், அவற்றை அநுட்டித்தோர் பெருமையும் பிறவும் அகத்தியமுனிவர் முதலிய மகான்களாற் பல நூல்களில் விரித்துக்கூறப்பட்டுள்ளன. விரததினத்திலே அப்பெருமானுடைய சரித்திரங்களைப் படிக்க அல்லது கேட்க விரும்புவார்க்கு அவற்றையெல்லாம் வாசித்தலும் கேட்டலும் எளிதின் முடிதற் பாலனவல்ல. ஆதலின் அவற்றின் சுருக்கமாகிய இப்புராணம் இத்தேசங்களிலே முற்குறித்த விரதகாலத்துத் திருக்கோயின் முதலிய இடங்களில் வாசிக்கப்பட்டும் பொருள் சொல்லப்பட்டும் வருகின்றது.

ஆதலால் எவர்க்குமினிது விளங்குமாறு உரையியற்றி இந்நூலை வெளியிடலாயினம்.

பு. பொ. வை. தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிரமாதீச ஆண்டு கார்த்திகை மாதம் (1973)
பதிப்பிக்கப் பெற்ற
பிள்ளையார் புராணப் பதிப்பின் முன்பக்கம்.

உ

கணபதி துணை

# பிள்ளையார் புராணம்

மூலமும் உரையும்

யாழ்ப்பாணம் புலோலி கிழக்கு

**பொ. வைத்தியலிங்க உபாத்தியாயரால்**

இயற்றப்பட்டு

தும்பைநகர்

**ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளாற்**

பார்வையிடப்பட்ட

**உரையுடன்**

யாழ்ப்பாணம்

**ஸ்ரீ காந்தா அச்சகத்தில்**

அச்சிடப்பெற்றது.

பிரமாதீச ஆண்டு கார்த்திகை மாதம்.

1973.

விலை. 2.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாதீச ஆண்டு வெளியிடப்பெற்ற பிள்ளையார் புராணப்

# பதிப்புரை

மகபதி மருகன் முன்னோன் மலரடி வணங்கி யேத்தி
யகமகிழ் நோன்ப னுட்டித் தவர்களி லொருவ ரேனு
மிகபர வின்பு றாதோ ரிலையஃதி யற்றுந் தன்மை
சகமதிற் படிப்போர் கேட்போர் தழைத்தினி திருப்ப ரன்றே.

*-பிள்ளையார் புராணம்.*

'சிவாயநம' என்று சிந்தித்துத் திருவருள் பெருக்குபவர்களுக்குப் புராணங்கள் உறுதுணை அளிக்கின்றன. செந்தமிழ் மொழியில் தோன்றிய சைவ புராணங்கள் பல. அவற்றுள் பிள்ளையார் புராணமும் ஒன்றாகும்.

வேழமாமுகங்கொண்ட விநாயகப்பெருமானின் அநந்த குணங்களை அறிதலும் கேட்டலும் சிந்தித்தலும் ஆன்ம ஈடேற்றத்திற்குரியன. விநாயகர் விரதங்கள், விரதங்களை அநுட்டித்தவர்கள் பெற்றபேறு, விநாயகப்பெருமானின் திருவருட்செயல்கள் முதலான அருள்பெருக்கும் விடயங்கள் நிறைந்த நூல் பிள்ளையார் புராணம். ஈழநாட்டி லுள்ள விநாயகராலயங்களிலும், மடங்களிலும், பிள்ளையார்புராண படனம் நடந்து வருகின்றது.

பிள்ளையார் புராண படனஞ்செய்து வருகின்ற சைவ அன்பர்களுக்கு இந்நூற்பிரதி முட்டின்றிப்பெறும் வாய்ப்பை உன்னி தும்பைநகர் பிரம்மஸ்ரீ சோ. விசுவநாதஐயர் அவர்கள் தமது பதிப்பாக வெளிவந்த பிள்ளையார் புராணம் என்னும் இந்நூலை அச்சிட்டு வெளியிட எமக்கு உதவினார்கள்.

சைவசமய வளர்ச்சி கருதி அச்சிட உதவிய பிரம்ம ஸ்ரீ சோ. விசுவ நாதஐயர் அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. அச்சிடும் கடுதாசி உபகரணங்கள் சென்ற ஆண்டுகள் போலப் பெற்றுக்கொள்ளமுடியாத இந்நாளில் இந்நூல் வெளிவரத் தோன்றாத்துணையாய்நின்ற ஆனை முகனைப்பரவி அஞ்சலி செய்கின்றேன்.

ஸ்ரீ காந்தா அச்சகம், — மு. கணபதிப்பிள்ளை
*யாழ்ப்பாணம்.* — *15-12-73.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வெளியீட்டுரை

இருப்பினுள் வலியரேனும்
எழுத்தறி வில்லாரேனும்
மருப்பினாற் பாரதத்தை
வரைதனிற் பொறித்தான்தன்னை
விருப்பொடார்ச் சனையியற்றி
விரதமும் அநுட்டித்தன்னோன்
திருப்பதம் மறவாரென்றும்
திருவருள் பெறுவர்தாமே.

*-பிள்ளையார் புராணம்.*

விநாயகப் பெருமானை விரதமிருந்து வழிபாடாற்றித் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் இயற்றுப் பெற்றது பிள்ளையார் புராணம். இன்னும் குறிப்பாகக் கூறின், விநாயகசட்டி விரதத்தின்போது விநாயகப் பெருமானை விருப்பொடு பாடிப் பரவுதற் பொருட்டுக் குழைத்த சொன்மாலையே பிள்ளையார் புராணம் எனலாம். முன்னவன் சீர் விரிக்கும் தொன்னூற் பரவையினின்றும் நுண்மாண் நுழைபுலத்துடன் தக்கவற்றை ஆய்ந்தெடுத்துக் கலைநயம்படக் கதையாய்த் தொடுத்தமைத்தது இச்சொன்முத்துமாலை. இது தென்னாட்டில் தோன்றாது, இலங்கை நன்னாட்டில் தோன்றியது, இறை முன்னிலையில் புராணபடனம் நிகழ்த்தும் புராணபடனப் பண்பாட்டு வளம் போலும். இச்சீரிய புராணத்தைப் படிப்போரும் கேட்போரும் விநாயகசட்டி விரதத்தை விதிமுறை தவறாது பத்தி சிரத்தையுடன் அநுட்டித்து இட்ட சித்திகள் எய்துவர் என்பது திண்ணம்.

விழுமியது நுவலும் இப்புராணம் விருத்தப்பாவினால் இயன்றது. விருத்தப்பா சந்த இசையுடன் பாடுதற்கு இயைந்தது. சந்த இசை பத்தியைப் பெருக்குதற்கு உதவியாயமைவது. சந்த இசையை இனிதாய்ப் பேணும் பொருட்டே இப்புராணப் பாக்கள் சந்திபிரியாது இழுமென் ஓசையோடு பதிப்பிக்கப் பெற்று வருகின்றன. இப்பாக்களின் விழுப்பத்திற் கியைந்த உட்பொருள் விரிக்கும் வளமார்ந்த உரையொன்று முளது. உரையிலுள்ளவாறு பதம் பிரித்து, கொண்டு கூட்டி, பொருளுணர்ந்து பயன் சொல்லின் அஃதுவே சிறந்ததொரு புராண படனத்துக்குப் போதுவதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையுடனியன்ற பிள்ளையார் புராணத்தை, புலோலியூர் பொ. வைத்திலிங்க உபாத்தியாயர், குரோதி வருடத்தில் (1904-05) வெளியிட்டனர். காரைதீவு, பாலையடி விக்கிநேஸ்வரர் ஆலயத் திருப்பணி வெளியீடாக, 1938ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியான பிள்ளையார் புராண மூலமும் உரையும் என்னும் நூலின் பிரசுர விஞ்ஞாபனத்திலே இக்குறிப்பு உளது. இந்நூலிலே உபாத்தியாயரது முதற்பதிப்பில் இடம்பெற்ற உபோற்காதமும் இணைக்கப் பட்டிருக்கிறது. இவ்வுபோற்காதம் நாம் வெளியிடும் இந்நூலிலும் நூன் முகமாக அணிசெய்கிறது. பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் 1925ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற பிள்ளையார் புராணம் மூலமும் உரையும் என்னும் நூலும் எமது பார்வைக்குக் கிடைத்தது. இந்நூல்களிலெல்லாம் அச்சுப்பிழையினாலேற்பட்ட ஓரிரு வேறுபாடகளின்றி மற்றைப் பாடபேதமோ, உரைவேறுபாடோ காணப்பட்டில. வெளியீட்டாளர்கள் பக்குவமாக வெளியிடுவதில் மிகக் கருத்தாயிருந்தனர் எனத் தெரிகிறது.

பிள்ளையார் புராணத்தை அகவற்பாவாக யாத்ததே சுன்னாகம் வரத பண்டிதரது பிள்ளையார் கதையாகும். புராணத்தில் உள்ளவாதே கதையிலும் விடய அமைதி உள்ளதெனினும், சந்த இசையுடன் பாடிப்பரவுதற்கு வாய்ப்பாயிருப்பதும், உட்பொருள் விரிக்கும் வளமார்ந்த உரையுடைமையும் பிள்ளையார் புராணத்தின் சிறப்பியல்புகளாக உள்ளன. புராணபடனத்துக்கு இயைந்ததும் இதுவே. இதனையே முன்னாளில் விநாயக சட்டி விரத காலத்தில் பாடினர். இந்நாளிலும் விடயமுணர்ந்த கோயில்களிலெல்லாம் பிள்ளையார் புராண படனமே நிகழ்கின்றது.

ஆதலினாலே இப்புராணத்தை எல்லார்க்கும் எளிதாய்க் கிடைக்கும் வண்ணம் வெளியிடுவது சிவதொண்டாகும் என எண்ணினோம். ஏற்கனவே இந்நூலை வெளியிட்ட (15-12-73) அமரர் மு. கணபதிபிள்ளை அவர்களின் மைந்தரும், எமது உழுவலன்பருமான காந்தளக உரிமையாளர் எமக்கு மிக உதவியாக இப்பணியினைச் செய்தனர். அவருக்குக் குருவருள் பெருகுவதாக.

–சிவதொண்டன்
செங்கலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# பிள்ளையார் புராணம்

## மூலமும் உரையும்

### காப்பு

*(நேரிசை வெண்பா)*

நற்றவத்தி னம்பலத்து நம்பனிடத் தம்பிகைமுன்
பெற்றெடுத்த தந்திமுகப் பிள்ளையே - குற்றமலி
வன்மாலைத் தீர்க்க மருந்தென் றினிதியம்பு
நின்மாலைக் குக்காப்பு நீ.

**இதன் பொருள் :** *அம்பலத்து நம்பன் இடத்து அம்பிகை* - கனக சபையிலெழுந்தருளிய சிவபெருமானது வாமபாகத்தில் வீற்றிருக்கின்ற உமாதேவி, நல் தவத்தின் முன் பெற்றெடுத்திருக்கின்ற உமாதேவி; *நல் தவத்தின் முன் பெற்றெடுத்த தந்திமுக பிள்ளையே* - நல்ல தவத்தினால் முற்காலத்தில் பெற்றருளிய யானைமுகத்தினையுடைய (விநாயகக் கடவுளாகிய) புத்திரரே!; *குற்றம் மலி வல் மாலை தீர்க்க மருந்து என்று இனிது இயம்பும் நின் மாலைக்கு* - குற்றம் நிறைந்த வலிய (அஞ்ஞானமாகிய) மயக்கத்தை நீக்கத்தக்க அமிர்தசஞ்சீவி யென்று இனிமை பெறச் சொல்லுகின்ற தேவரீருடைய மாலையா யமைந்த இப்புராணத்திற்கு; *நீ காப்பு* - தேவரீரே காவலாகுக என்றவாறு.

விராட்புருடனது இருதயஸ்தானமாகிய சிதம்பரத்திலுள்ள கனக சபையிலே ஆன்மாக்களுய்யும்படி பஞ்சகிருத்தியத் திருநிருத்தஞ் செய்கின்ற நடேசப்பெருமானதும் சிவகாமியம்பிகையினதும் சிரேட்ட புத்திரராகலின் தந்தை தாயர்போன்று என் சிந்தையிலிருந்து கவிவழுக்களைகவென்பார், நற்றவத்தினம்பலத்து நம்பனிடத் தம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பெற்றெடுத்த தந்திமுகப்பிள்ளை என்றும், ஆன்மாக்களை அனாதியே பந்தித்த அஞ்ஞான மயக்கத்தையோட்டி மெய்ஞ்ஞானத் தெளிவைப்பயக்கு மருந்திந்நூலென்பார் வன்மாலைத் தீர்க்க மருந்தென் றினிதியம்பும்...மாலை என்றும், முற்செய்யுளினீற்றிற் சொல்லையே பிற்செய்யுளின் முதலில் இயைத்துப் பாடப்பட்ட தென்பார் மாலை என்றுங் கூறினார். நம்பன்-விரும்பப்படுபவன்; பழையோனெனினுமாம். அம்பிகை உலகத்துக்குத் தாய்.

## கடவுள் வாழ்த்து

*(அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)*

திருவரை தனிற்றோ லாடை
செறித்தகண் ணுதலை யந்த
மருவரை மதியஞ் சூடி
வளரெழில் வதுவை யாற்று
மொருவரை யரச னீன்ற
வுமையையவ் வுமைமுன் பெற்ற
விருவரை யுளத்தி லேவைத்
திடரொழித் தினிது வாழ்வாம்.

**இ-ள :** *திரு அரை தனில் தோல்ஆடை செறித்த கண்ணுதலை* - அழகிய அரையின்கண்ணே புலித்தோலாகிய வஸ்திரத்தைத் தரித்த சிவபெருமானையும்; *அந்த மருவு அரைமதியம் சூடி வளர் எழில் வதுவை ஆற்றும் ஒரு வரையரசன் ஈன்ற உமையை* - அந்த தன்னையே புகலென்றெடுத்துள்ள பாலசந்திரனை அணிந்தவராகிய சிவபெருமான் மிகுந்த அழகுபொருந்திய விவாகத்தைச் செய்துகொண்ட ஒப்பில்லாத இமயமலையரசன் பெற்ற உமாதேவியையும்; *அ உமை முன் பெற்ற இருவரை* - அந்த உமாதேவி முற்காலத்திற் பெற்ற (விநாயகக்கடவுளள் சுப்பிரமணியக்கடவுள் என்னும்) இருகுமாரரையும்; *உளத்திலே வைத்து இடர் ஒழித்து இனிது வாழ்வாம்* - மனசின்கண்ணேயிருத்தித் துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெற்று வாழுவாம் எ-று.

சிவபெருமானையும் உமாதேவியையும் விநாயகக் கடவுளையும் சுப்பிரமணியக் கடவுளையும் தியானித்தலால், இம்மாலையைச் சொற் குற்றம் பொருட்குற்றமுதலியன வாராவண்ணம் எளிதி னிறைவேற்றி, அதனால்வரும் பேரின்பத்தைப் பெறுவாமென நூலாசிரியர் தெய்வ வணக்கஞ் செய்தவாறு. மங்கலமொழி முதல் வகுக்க வேண்டுதலின் திரு என்னுஞ் சொல்லை முதலில் வைத்தார். கண்ணுதல் - நுதலிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணையுடையார். அந்த என்பது பண்டறி சுட்டாய்ச் சிவபெருமானை உணர்த்திநின்றது. மருவு இடைப்பிறவரல்; இதற்கிவ்வாறன்றி அந்தம் மருவு எனப் பிரித்துத் தேய்தலைப் பொருந்திய எனப் பொருள் கோடலுமொன்று. அரைமதியமென்பதில் அரை ஈண்டளவைச்சுட்டாது குறைவையுணர்த்தியது. சூடி என்பதில் இகரம் வினை முதல் விகுதி, வைத்தென்னும் வினையெச்சம் காரணப் பொருட்டு கடவுட்டியானஞ் செய்து தொடங்கிய காரியம் முட்டின்றி முடியுமென்னுந் துணிவுபற்றி இடரொழித்து என்றார். சிவபெருமானுக் கின்னும் பல குமாரருள ராயினும், விநாயகக்கடவுள் முதற் குமாரராதல் பற்றியும் அவரும் கந்தசுவாமியுமே அருண்மூர்த்திகளாதல்பற்றியும் இருவரை என்பதற்கு இச்செய்யுளுரையில் அவ்விரு வரையும் குறித்தது.

## *சிறப்புப்பாயிரம்*

வாழ்வுடைப் பொதிய வெற்பில்
வளர்சடை முனிவன் சொன்ன
சூழிமால லிபமு கத்துச்
சுந்தரன் கதையை முற்றுந்
தாழ்வுடைப் பரவை சூழ்ந்த
சகத்துளோர் துயரந் தீரு
மூழினில் விருத்த யாப்பான்
மாலையா வுரைக்க லுற்றேன்.

**இ-ள் :** *பொதியவெற்பில் வாழ்வு உடை வளர்சடை முனிவன் சொன்ன* - பொதியமலையில் வாழுகின்ற நீண்ட சடையையுடைய அகத்திய மகாமுனிவர் (முற்காலத்தில் விஸ்தாரமாகப்) பாடிய; *சூழி மால் இபமுகத்து சுந்தரன் கதையை முற்றும்* - முகபடாம்பொருந்திய பெரிய யானை வதனத்தையுடைய அழகராகிய விநாயகக்கடவுளது சரித்திரத்தை ஒருங்கே; *தாழ்வு உடை பரவை சூழ்ந்த சகத்து உளோர் துயரம் தீரும் ஊழினில்* - ஆழத்தினையுடைய சமுத்திரம்வளைந்த பூவுலகத்தின்கணுள்ள மாந்தர்களது துன்பம் நீங்கும்முறையால்; *விருத்தயாப்பால் மாலையா உரைக்கல் உற்றேன்* - விருத்தப் பாவினால் அந்தாதித்தொடையாகப் பாடத்தொடங்கினேன் எ-று.

அகத்தியமுனிவர் முற்காலத்தில் விஸ்தாரமாக இயற்றிய விநாயக சரித்திரத்தை உலகத்துள்ளோருய்யும் பொருட்டுச் சுருக்கி விருத்தப் பாவினாற் பாடினேனென்பதாம். விநாயகக் கடவுள் முகவழகிற் சிறந்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதலின் முகத்துச்சுந்தரன் என்றார். சுமுகன் என்னும் பெயர் இப்பெரு மானுக்கு வழங்குதற்குக் காரணமுமிதுவே.

## நூல்

உரைக்குமந் தரநா கத்தி
னுத்தர திசையிற் செந்தா
மரைக்கயஞ் செறியி ராச
மாநக ரந்த ணாளன்
விரைக்குழன் மனைவி யோடு
மிகத்தவ மியற்றி நின்றான்
றிரைக்கட லுடுத்த பூவிற்
சிறுவரைப் பெறுதல் வேண்டி

**இ-ள் :** *உரைக்கும் மந்தர நாகத்தின் உத்தரதிசையில்* - (புலவர்கள் விசேடித்துச்) சொல்லுகின்ற மந்தரமலையினது வடதிசையிலே; *செம் தாமரை கயம் செறி இராசமாநகர் அந்தணாளன்* - செந்தாமரைகள் பொருந்திய தடாகங்கள் நெருங்கிய இராசமாநகரத்தில் வாசஞ் செய்கின்ற பிராமணன் ஒருவன்; *சிறுவரை பெறுதல்வேண்டி* - புத்திரரைப் பெறவிரும்பி; *விரை குழல் மனைவியோடு* - வாசனை கமழுகின்ற கூந்தலையுடைய தன் பத்தினியுடனே; *திரை கடல் உடுத்த பூவில் மிகதவம் இயற்றி நின்றான்* - அலைபொருந்திய சமுத்திரத்தை ஆடையாகத் தரித்த இந்தப் பூவுலகத்தில் அதிகமாகத் தவத்தைச் செய்து நின்றான் எ-று.

சிவபெருமானுடைய விசேஷமான வாசஸ்தானங்களுள் மந்தரமு மொன்றாதலின் உரைக்குமந்தரம் என்றார். அவ்வந்தணர் புண்ணிய க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்பவரென்பதை விளக்க மந்தரநாகத்தின் உத்தரதிசையில் என்றும், பிராமணவருணத்தார்க்குத் தாமரை மலர் மாலையுரிமையுடைமையின் இவர்க்கவ்வூர் சிறந்ததென்னுங் கருத்தை விளக்க தாமரைக்கயஞ்செறி என்றும், அவரது வாசஸ்தானமாகிய இராசமாநகரை விசேடித்தார். இவ்வாழ்வின்பயன் புதல்வராதலாலும், பிதிர்சாபம் முதலியவைகளே அவரைப் பெறுதற்குத் தடையாமென்றும் அக்குற்றநீங்க மனைவியோடு தலயாத்திரை தீர்த்தயாத்திரைகள் விசேஷமாகச் செய்யப்பட வேண்டுமென்றும் சாஸ்திரங்களுணர்த்து தலாலும், அம்முனிவர் திரைக்கடலுடுத்தபூவில் மனைவியோடு மிகத் தவமியற்றினார். 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிநற் றவமி யற்றி
விப்பிரன் வருந்து நாளிற்
பூண்டிக முமையா ளெந்தை
பொற்பதந் தொழுதென் கோவே
மாண்டகு மனங்க சிந்தம்
மறையவன் றனக்கோர் பிள்ளை
காண்டகு வடிவிற் றோன்றக்
கருணைசெய் தருணீ யென்றாள்.

**இ-ள் :** *விப்பிரன்வேண்டி நல்தவம் இயற்றி வருந்தும் நாளில்* - அந்த அந்தணாளன் விரும்பி நல்ல தவத்தைச் செய்து வருந்துகின்ற நாட்களிலே; *பூண் திகழ் உமையாள் எந்தைபொன் பதம் தொழுது* - ஆபரணங்கள் (தரிக்கப்பெற்று) விளங்காநின்ற உமாதேவியார் எம்பரம பிதாவாகிய சிவபெருமானது அழகிய பாதங்களைக் கைதொழுது; *என் கோவே* - என் பிராணநாயகரே!; *நீ மாண் தகு மனம் கசிந்து* - தேவரீர் மாட்சிமை சிறந்த திருவுள்ளம் இரங்கி; *அ மறையவன் தனக்கு ஓர் பிள்ளை காண் தகு வடிவில் தோன்ற கருணை செய்தருள் என்றாள்* - அந்த அந்தணாளனுக்கு ஒரு குழந்தை காட்சிக்குத்தகுந்த சுந்தர ரூபத்தோடு தோற்றும்படி கிருபைபாலித்தருள்க என்று வேண்டினார் எ-று.

பொற்பதம் என்பதற்குப் பொன்போலச் சிறந்த திருவடியெனினு மாம். மறையவன் றனக்கு என்பதில் தன் சாரியை. 2

என்றலு மவனுக் கில்லை
புதல்வரிப் பிறப்பி லென்று
மன்றிறை யுரைப்பக் கேட்டு
மலைமகள் வருந்திப் பின்னுங்
கொன்றையஞ் சடையோ யென்னைக்
குறித்தொரு மதலை தன்னை
வென்றியந் தணற்கு நல்க
வேண்டுமென் றிசைத்த லோடும்.

**இ-ள் :** *என்றலும்* - உமதேவியார் இவ்வாறு வேண்டுதலும்; *மன்று இறை* - கனகசபேசராகிய சிவபெருமான்; *அவனுக்கு இப்பிறப்பில் புதல்வர் இல்லை என்று உரைப்ப* - அந்த அந்தணாளனுக்கு இச்சனனத்திலே சிறுவர் பிறத்தல் இல்லையென்று சொல்ல; *மலைமகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கேட்டு வருந்தி* - பார்வதிதேவியார் அதனைக் கேட்டு மனம்வருந்தி; *பின்னும்* - பின்னவரும் (சிவபெருமானைப் பார்த்து); *கொன்றையம் சடையோய்* - கொன்றைப் பூமாலையைத் தரித்த சடைமுடியை உடையவரே!; *என்னைக்குறித்து வென்றி அந்தணற்கு ஒரு மதலை தன்னை நல்க வேண்டும் என்று இசைத்தலோடும்* - என்பொருட்டாக வெற்றியையுடைய அவ்வந்தணாளனுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும் எ-று.

மக்கட்பேற்றிற்குத் தடையாய கன்மங்களைத் தமது தவத்தினாற்றொலைத்தனரென்பதுபோதர வென்றியந்தணன் என்றும், கன்மந் தொலைந்த வழியும் மக்கட்பேற்றிற்கியைந்த புண்ணிய மெய்தாமையானும், அப்புண்ணியத்தைத் தரவல்ல பெருந்தவ முற்றுதற்கு அவ்வந்தணர் சக்தியற்று வருந்துதலானும், தனக்காகக் கொடுத்தருள்க என்று வேண்டினரென்பதுபோதர என்னைக் குறித்தொரு மதலைதன்னை நல்கவேண்டும் என்றும் கூறினார். கொன்றை ஆகுபெயர். அம் சாரியை. இதுவும் பிற்செய்யுளுமொருதொடர். 3

இசைக்கரும் பெண்சொ லோகோ
விப்படிப் பெரிதென் றங்க
மசைத்துமை கலங்க நோக்கி
யம்புலி மௌலி சொல்லும்
பசைக்கருத் துடையோ யந்தப்
பழமறைத் துவசன் மின்னாத்
திசைக்குவ லயத்தி னீபோய்ச்
செனியென வருளிச் செய்தான்.

**இ-ள்:** *அம்புலி மௌலி* - பாலச்சந்திரனை அணிந்த சடைமுடியையுடைவராகிய சிவபெருமான்; *ஓகோ இசைக்க அரும் பெண்சொல் இப்படி பெரிது என்று அங்கம் அசைத்து* - ஆகா! சொல்லுதற்கரிய பெண்சொல்லானது இத்துணைப் பெரிதாயிற்றென்று தலையசைத்து; *உமை கலங்க நோக்கி சொல்லும்* - உமாதேவியார் மனக்கலக்கமுற நோக்கஞ்செய்து திருவாய் மலர்ந்தருளுவார் (எவ்வாறெனில்); *பசை கருத்து உடையோய்* - பரிவுமிக்க சிந்தையையுடைய தேவியே!; *நீ திசை குவலயத்தில் போய் அ பழ மறைத்துவசன் மின்னா செனி என அருளிச்செய்தான்* - நீ திக்குகளமைந்த பூவுலகத்திற் சென்று அந்தப் பழைய வேதத்தைக் கொடியாகவுடைய பிராமணனது மகளாகப் பிறப்பாய் என்று திருவாய்மலர்ந்தருளினார் எ-று:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகோ வியப்பில்வந்தது. அங்கமென்றதீண்டுத்தமாங்கத்தை. மின் ஆகுபெயர். இசைக்க மின்னாக என்னும் வினையெச்சங்கள் கடைக்குறையாயின. செனி என்பது ஆய்விகுதி தொக்குவந்த முன்னிலையொருமை வினைமுற்று. 4

செய்தவ வுமையா ளஞ்சித்
திருவுளந் தளர்ந்து கண்ணீர்
பெய்துயிர்த் தடியேன் சொன்ன
பிழைபொறுத் தருள் கவந்தப்
பொய்தரு பிறவி யாகா
தெனக்கெனப் புலவர் கோமான்
மெய்தரு கருணை கூர்ந்து
விளம்புமெல் லியலை நோக்கி.

**இ-ள் :** *செய்தவ உமையாள் அஞ்சி* - செய்கின்ற தவத்தையுடைய உமாதேவியார் (பெருமான் சினந்து கூறிய அம்மொழியைக் கேட்டுப்) பயந்து; *திருவுளம் தளர்ந்து கண்ணீர் பெய்து உயிர்த்து* - மனஞ்சோர்ந்து கண்ணினின்றும் நீர் சிந்திப் பெருமூச்செறிந்து; *அடியேன் சொன்ன பிழை பொறுத்து அருள்க* - ஸ்வாமி! நுமதடியேன் அறியாது சொல்லிய பிழையைச் சகித்து அருள் செய்வீராக; *பொய்தரு அந்த பிறவி எனக்கு ஆகாது என* - பொய்யுணர்வைப் பயக்கும் அந்த மானுடப்பிறவி (நுமது சத்தியாகிய) எனக்குத் தகாதென்று கூற; *புலவர்கோமான்* - தேவநாயகராகிய சிவபெருமான்; *மெய் தரு கருணைகூர்ந்து மெல்லியலை நோக்கி விளம்பும்* - மெய்ஞ்ஞானத்தைப் பயக்குங்கிருபை மிகுந்து மெல்லிய சாயலையுடைய உமாதேவியாரைப் பார்த்துத் திருவாய் மலர்ந்தருளுவார் எ-று.

பொய் - அஞ்ஞானம்; மெய்-மெய்ஞ்ஞானம். அஞ்ஞானத்தைத் தரும் பிறவியிலமுத்திய வழியும் திருமணஞ்செய்தாட்கொள்வோமென வாக்களித்தலின் மெய் தருகருணை என்றார். பொய்தரு பிறவியென் பதற்கு நீர்க்குமிழிபோனிலையற்ற பொய்ப் பிறவியெனவும், மெய்தரு கருணை என்பதற்கு மனவாக்குக்காயங்கள் ஒருவழிப்படச் செய்யும் மெய்க்கருணை எனவும் பொருள் கொள்ளினுமாம். 5

நோக்குமா னவன்பாற் றோன்றி
நுவலிள மதியும் வேத
வாக்கியுந் திருவும் போல
வளருநாள் யாமே போந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கிய மணஞ்செய் துன்னைப்
பண்டுபோ லாள்வ நீபோய்த்
தேக்கிய மறையோன் றன்பாற்
செனியென விடையு மீந்தான்.

**இ-ள் :** *நோக்கும் மானவன்பால் தோன்றி* - (தேவியே!) நம்மைநோக்கித் தவஞ்செய்கின்ற மனுடனாகிய அவ்வந்தணாள னிடத்துப்போய்ப் பிறந்து; *நுவல் இளமதியும் வேதவாக்கியும் திருவும் போலவளருநாள்* - வியந்து சொல்லப்படுகின்ற பாலசந்திரனையும் வேதமொழிப் பயிற்சியையுடைய சரசுவதியையும் இலக்குமியையும் போல வளருகின்ற நாட்களில்; *யாமே போந்து பாக்கியமணஞ்செய்து உன்னை பண்டுபோல் ஆள்வம்* - நாமாகவேவந்து மங்கலக் கிரியையாகிய திருமணத்தைச்செய்து உன்னை முன்போல ஆள்வோம்; *நீ போய் தேக்கிய மறையோன்றன்பால் செனி என விடையும் ஈந்தான்* - நீ பூவுலகத்திற் சென்று நிறைந்த வேதாத்தியயனத்தையுடைய அவ் வந்தணாளனிடத்துப் பிறப்பாயாக என்று அனுமதியையுங் கொடுத்தார் எ.று.

ஏகாரம் - பிரிநிலை. பின்னைய உம்மை இறந்ததுதழீஇயது. 6

விடைகொடு கவுரி யந்த
விப்பிரன் மனையா மன்னப்
பெடைவயிற் றுதித்து வாலப்
பிறையென வளர்ந்து நல்ல
நடைமுதற் பயின்று வேதநான்கு
முற்றுணர்ந் தாள்வை வேல்
படைவிழி யாட்குப் பேதைப்
பருவம்வந் துற்ற காலை.

**இ-ள் :** *கௌரி விடைகொடு அந்த விப்பிரன்மனை ஆம் அன்னப்பெடை வயிற்று உதித்து* - உமாதேவியார் அனுமதி பெற்றுக் கொண்டு சென்று (முற்குறிக்கப்பட்ட) அந்த அந்தணாளனுடைய மனைவியாகிய பெடையன்னத்தைப்போலும் நடையழகியினது உதிரத்தினுற்பவித்து; *வாலபிறை என வளர்ந்து* - பாலசந்திரனைப்போல நாடோறும் வளர்ந்து; *நல்ல நடை முதல் பயின்று* - சிறந்த நடை முதலியவற்றைப் பழகி; *வேதம் நான்கும் உற்று உணர்ந்தாள்* - நான்கு வேதங்களையும் ஆராய்ந்து அறிந்தாள்; *வை வேல் படை விழியாட்கு* - கூரிய வேலாயுதத்தைப்போன்ற கண்களையுடைய அம்கட்கு; *பேதைப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பருவம் வந்து உற்ற காலை* - பேதைப்பிராயமாகிய ஏழாமாண்டு வந்தபொழுது எ-று.

நடைபயிலுதற்கியையச் சிறப்புநோக்கி முன் அன்னப்பெடை வயிற்றுதித்தெனவைத்தார். நான்குமென்பதிலும்மைமுற்று, ஆசிரியரன்றித் தெய்வீகவுணர்வினாலுணர்ந்தாளென்பது போதர உற்றுணர்ந்தாள் என்றார். முற்றுணர்ந்தாளெனப் பிரித்துச் சந்தேக விபரீதமின்றிப் பொருண்முழுவதையும் அறிந்தாளெனினுமாம். இதுமுதனான்கு செய்யுளொருதொடர். 7

உற்றபெண் ணமுதை யொக்க
லொருவனுக் குதவத் தம்முட்
பெற்றவ ரியம்ப லோடும்
பிறைநுத லதனைக் கேளா
மற்றொரு மனிதன் செய்யும்
மணந்தனுக் கிசையே னவ்வீ
றற்றமே லவர்க்குத் தேவி
யாவனென் றகத்தி லெண்ணி.

**இ-ள் :** *உற்ற பெண் அமுதை ஒக்கல் ஒருவனுக்கு உதவ* - தமக்கு மகளாகப்பொருந்திய பெண்ணரசியை உறவினனாகிய ஒரு புருஷனுக்குத் தத்தஞ்செய்து கொடுக்கும்படி; *பெற்றவர் தம்மில் இயம்பலோடும்* - பிதாமாதாக்கள் தம்முட் பேசுதலும்; *பிறை நுதல் அதனை கேளா* - பாலசந்திரன் போன்ற நெற்றியையுடைய உமாதேவியார் அவ்வார்த்தையைக்கேட்டு; *மற்று ஒரு மனிதன் செய்யும் மணந்தனக்கு இசையேன்* - (பெற்றார்களே!) பரமபதியன்றிப் பிறனாகிய ஒரு மனிதன் செய்யும் பாணிக்கிரகணத்திற்குச் சம்மதப் படேன்; *அ ஈறு அற்ற மேலவர்க்கு தேவி ஆவன் என்று அகத்தில் எண்ணி* - அந்தப் பிறப்பிறப்பற்ற முதல்வராகிய சிவபிரானுக்கு நான் மனைவியாவேனென்று தன் மனத்திற் சிந்தித்து எ-று.

பெண்ணமுது பெண்களுள்ளே அமுதுபோற் சிறந்தவள். ஈறற்றவர் என்றதனால் பிறப்பற்றவர் என்பதும் பெறப்பட்டது. பிறைநுதல் அன்மொழித்தொகை. 8

எண்ணருங் காத லுற்றே
னென்றலும் பயந்தோ ருள்ளத்
தண்ணலை நினைந்து தம்மு
ளதிசயித் தணங்கே யந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணனன் மனைவி யார்தன்
மற்றுனக் கெளிதோ வென்னப்
பண்ணருந் தவஞ்செய் தேனேற்
பசுபதி யெனைக்கண் பார்த்து.

**இ-ள் :** *எண் அரும் காதல் உற்றேன் என்றலும்* - அளவிடுதற்கரிய ஆசையைக் கொண்டேனென்று கூறுதலும்; *பயந்தோர் உள்ளத்து அண்ணலை நினைந்து தம்முள் அதிசயித்து* - (அத்தேவியினது) பெற்றோர்களிருவரும் மனத்தின்கண்ணே சிவபெருமானை நினைத்துத் தம்முள்ளே ஆச்சரியமுற்று; *அணங்கே* - நங்கையே!; *அந்திவண்ணன் நல் மனைவி ஆதல் உனக்கு எளிதோ என்ன* - செக்கர் மேகத்தினிறம் போலுஞ் செந்நிறத்தையுடையவராகிய சிவபெருமானுக்கு நல்ல பத்தியினாதல் உனக்கு இலகுவாகுமா என்று வினாவ; *பண் அரும் தவம்செய்தேனேல் பசுபதி எனை கண்பார்த்து* - (உமாதேவியார் அவர்களைப் பார்த்து, பெற்றார்களே!) செய்தற்கரிய தவத்தை நான் செய்தேனாயின் ஆன்மநாயகராகிய சிவபெருமான் என்னைத் திருநோக்கஞ்செய்து எ-று.

எண்ண பண்ண என்பன ஈறுதொக்கன. பசுவர்க்கத்தவராகத் தம்மகளை யெண்ணுதலால், பதிப்பொருளாகிய சிவபெருமானின் பெருமையையும் மகளின் பேதைமையையும் உற்றுநோக்கி அதிசயித்தனர் எனக. மற்று அதை ஒ எதிர்மறை. 9

பார்க்கிடைப் பிறவா தெற்குப்
பரிந்தருள் செய்யு மென்றாள்
சீர்க்கயல் விழியா யத்தன்
சிந்தையி னினைந்து தங்கள்
வார்க்கன முலைப்பி ராட்டி
மலிதவ மியற்ற வேண்டித்
தார்க்கணங் கமழ்பூம் பன்னசாலை
யொன்ற மைத்தார் மன்னோ.

**இ-ள் :** *பார்க்கு இடை பிறவாது எதற்கு பரிந்து அருள் செய்யும் என்றாள்* - பூமியிற் பிறவாமல் எனக்கு இரங்கிக் கருணை செய்வார் என்று கூறினார்; *சீர் கயல் விழி ஆய் அத்தன் சிந்தையில் நினைந்து* - சிறப்புப்பொருந்திய கயல் மீன்போன்று கண்களையுடைய (உமா தேவியாரது) மாதாவும் பிதாவும் தம் மகள் கூறிய வசனத்தை மனத்திற் சிந்தித்து; *தங்கள் வார்கனம்முலை பிராட்டி மலி தவம் இயற்ற வேண்டி* -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மகளாகிய கச்சையணிந்த கனத்த தனங்களையுடைய உமாதேவியார் நிறைந்த தவத்தைச் செய்தற்குத் தாமும் விருப்புற்று; *தார் கணம் கமழ்பூ பன்னசாலை ஒன்று அமைத்தார்* - மலர்க் கூட்டங்கள் கமழுகின்ற பொலிவாகிய பன்னசாலை ஒன்றைச் செய்தார்கள் எ-று.

மன் ஒ அசை. பன்னசாலை - இலைகளால் வேயப்பட்ட குடிசை. 10

அமைத்தசாலை யில்வந் தெய்தி
யருமறை விதிவ ழாம
லுமைத்திரு மன்று ளாடு
மொருவனை மனத்தி லெண்ணி
யிமைத்தி லளாகி யோகத்
திருந்துவெம் புலனைச் செற்றுக்
கமைத்திறங் கொடுசித் தாந்தக்
கடலிடைக் குளித்து மாதோ:

**இ-ள் :** *அமைத்த சாலையில் உமை வந்து எய்தி* - தம் பெற்றாரமைத்த தவச்சாலையில் உமாதேவியார் வந்துசேர்ந்து; *அரு மறை விதி வழாமல் திருமன்றுள் ஆடும் ஒருவனை மனத்தில் எண்ணி* - அரிய வேத விதியினின்றுந் தவறாமல் அழகிய கனக சபையின்கண்ணே திருநடனஞ் செய்கின்ற ஒப்பற்ற சிவபெருமானைத் தம் மனத்திற் சிந்தித்து; *இமைத்திலள் ஆகி யோகத்து இருந்து வெம்புலனை செற்று* - கண்ணிமையாதவளாகி யோக நிலையிலிருந்து (அதற்குத் தடையாய) கொடிய ஐம்புலன்களை அடக்கி; *கமைத்திறம் கொடு* - பொறுமை பொருந்தி; *சித்தாந்த கடலிடை குளித்து* - மன ஒடுக்கத்தாலுண்டாகிய சிவானந்த வெள்ளத்திலமுந்தி எ-று.

மாது, ஒ அசைகள். உமை திரு என்பது எதுகைநோக்கி உமைத்திரு என விகாரமாயிற்று. சித்தாந்தம் என்பதற்கு நிச்சயிக்கப்பட்ட முடிவு எனப் பொருள்கொண்டு, வேத முதலிய நூல்களால் நிச்சயித் துரைக்கப்படும் அருட்கடலாகிய பரம சிவனிடத்து எனினுமாம். இது முதன்மூன்று செய்யுள் ஒரு தொடர். 11

மாதவ மியற்று நாளின்
மாதருந் தவத்தை யீசன்
காதலித் தறிவோ மென்னக்
கண்ணுதல் வடிவ நீத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதவே தியர்கு லத்து
விருத்தனென் றிசைப்பக் கையிற்
போதமுங் குடையுந் தண்டும்
புனித நெற்றியில் வெண்ணீறும்.

**இ-ள் :** *மாதவம் இயற்றும் நாளில்* - உமாதேவி பெரிய தவத்தைச் செய்யுங்காலத்தில்; *ஈசன் மாது அரும் தவத்தை அறிவோம் என்ன காதலித்து* - சிவபெருமான் அந்த உமாதேவியினது செய்தற்கரிய தவத்தைப் பரீக்ஷித்தறிவோமென்று விரும்பி; *கண்ணுதல் வடிவம்நீத்து* - நெற்றிக் கண்ணையுடைய தமது ரூபத்தைமாற்றி; *வேதவேதியர்குலத்து விருத்தன் என்று இசைப்ப* - வேதத்தை அத்தியயனஞ்செய்கின்ற பிராமணனது குலத்திலுள்ள வயோதிகரென்று கண்டோர் சொல்லும்படி; *கையில் போதமும் குடையும் தண்டும்* - கையிலே ஞானசாத்திரப் புத்தகமும் குடையும் ஊன்றுகோலும்; *புனித நெற்றியில் வெண்ணீறும்* - பரிசுத்தமாகிய நெற்றியின்கண்ணே வெண்ணிறம் பொருந்திய விபூதியும் எ-று. -ஈசன் உலகத்தை ஆளுகிறவர். 12

நீற்றொளி பரந்த மெய்யு
நிறைதரு நரையுங் கூனிக்
காற்றுணை நடுங்க லோடுங்
கயல்விழிச் சாலை மேவ
நாற்றிசை பரவுந் தைய
னல்லவ னடியிற் றாழ்ந்து
போற்றியஞ் சலிப்ப வந்த
பூசுர னயந்து கூறும்.

**இ-ள் :** *நீற்று ஒளி பரந்த மெய்யும்* - விபூதியின் பிரகாசம் விரிந்த திருமேனியும்; *நிறை தரு நரையும்* - நிறைந்த நரை மயிரும்; *கூனி கால் துணை நடுங்கலோடும்* - சரீரம் வளைந்து இரண்டு கால்களும் நடுங்குதலும் ஆகிய இவ்வமைதியையடைய விருத்த வேஷத்துடனே; *கயல் விழி சாலை மேவ* - கயல்மீனைப்போலும் கண்களையுடைய உமாதேவியாரின் தவச்சாலையையடைய; *நால் திசையும் பரவும் தையல்* - நான்கு திசைகளிலுள்ளாருந் துதிக்கின்ற உமாதேவியார்; *நல்லவன் அடியில் தாழ்ந்து போற்றி அஞ்சலிப்ப* - நன்மையையடைய அப்பெரியவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதித்துக் கை குவித்து நிற்ப; *வந்தபூசுரன் நயந்து கூறும்* - அவ்விடத்தில் வந்த கிழப்பிராமணர் விரும்பி அவ்வுமாதேவியை நோக்கிச் சொல்லுவார் எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல்விழி அன்மொழித்தொகை. கயல் விழிக்குப்பிறழ்ச்சியாலும் வடிவினாலும் ஒக்குமென்க. வணங்கத்தக்க மகாசாது வடிவமாதலின் நல்லவன் என்றார். நற்றவனெனப்பாடமோதுவாருமுளர். 13

கூறருந் தவமி யற்றக்
குறித்ததென் புகனீ யென்னத்
தேறருங் கருணை வெள்ளிச்
சிலம்பருக் குரிமை யாகும்
பேறெனக் கமைய வென்னப்
பெரியவ னகைத்துச் சொல்லு
மாறிலுத் தமகு லத்து
மறையவன் புதல்வி கேட்டி.

**இ-ள் :** *நீ கூறரும் தவம் இயற்றகுறித்தது என்புகல் என்ன* - பெண்ணே! நீ சொல்லுதற்கரிய தவத்தைச்செய்ய எண்ணியது எதற்காக அதனைக் கூறுக என்று சிவபெருமான் வினாவ (உமா தேவியார் அதனைக்கேட்டு அவ்விருத்தரூபரைநோக்கி, ஐயரே) ; *தேறு அரும் கருணை வெள்ளிச் சிலம்பருக்கு* - (அபக்குவர்களால்) தெளிந்துணர்தற் கரிய கிருபையையுடைய கைலாசபதிக்கு; *உரிமை ஆகும் பேறு எனக்கு அமைய என்ன* - மனைவியாகின்ற வரம் எனக்கு பொருந்துதற்கா மென்று சொல்ல; *பெரியவன் நகைத்து சொல்லும்* - விருத்த தபோதன வேஷதாரியாகிய சிவபெருமான் அதனைக் கேட்டுச் சிரித்து (உமா தேவியை நோக்கி) இவ்வாறு சொல்லுவார்; *மாறு இல் உத்தம குலத்து மறையவன் புதல்வி கேட்டி* - ஒப்பில்லாத உயர்குலத்திலுதித்த பிராமணனது புத்திரியே கேட்பாயாக எ-று. 14

கேட்டிரு மடந்தை தன்னிற்
கிளரொளி படைத்த நீவெண்
மாட்டினி லேறித் தாரு
வனத்திடை மனைக டோறு
மோட்டினி லிரந்த பித்தற்
குரிமையென் றிருப்ப நெஞ்சில்
வேட்டதெ னந்தோ நின்னை
விதித்தது மிதற்கோ வேதா.

**இ-ள் :** *கேழ் திரு மடந்தை தன்னில் கிளர் ஒளி படைத்த நீ* - செந் நிறத்தையுடைய இலக்குமிதேவியினின்றுமிக்க தேககாந்தியையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ; *வெண்மாட்டினில் ஏறி தாரு வனத்திடை மனைகள் தோறும் ஓட்டினில் இரந்த பித்தற்கு உரிமை என்று இருப்ப* - வெண்ணிறம். பொருந்திய இடபவாகனத்திலேறித் தாருகவனத்தின் கண்ணேயுள்ள வீடுகடோறும் சிரகபாலத்திலே பிக்ஷையேற்ற பித்தனுக்கு மனைவி யாயிருக்கும்படி; *நெஞ்சில் வேட்டது என்* - மனதில் விரும்பியது என்ன அறியாமை; *அந்தோ* - ஐயோ; *வேதன் நின்னை விதித்ததும் இதற்கோ* - பிரமா (அற்புதமான இவ்வழகோடும்) உன்னைப் படைத்ததும் இதற்காகவா எ-று.

''காந்தனது பேரழகு தான் விரும்பும் பெண்'' என்பது நீதிநூற்றுணி பாதலால், இலக்குமிபோன்ற ரூபவதியாகிய உனக்கு எருதேறிக் கபாலத் திலேற்கும் பித்தன் கணவனாதற்குத் தகவுடையனல்ல னென்பதை விளக்குதற்குத் திருமடந்தை தன்னிற்கிளரொளி படைத்த நீ என்றார். 15

வேதியன் றவத்தால் வந்தாய்
வேடனெச் சிலையுண் டின்ன
சாதியென் றிலாத வற்குத்
தலைவியா வதிலென் பால்வந்
தீதிழைத் திருத்த னன்காம்
யானொரு விருத்த னேனுஞ்
சோதிமின் னிடையா யென்னச்
சுரிகுழ லதற்கு நாணி.

**இ-ன் :** *சோதி மின் இடையாய்* - ஒளிபொருந்திய மின்போலும் இடையையுடைய பெண்ணே! நீ; *வேதியன் தவத்தால் வந்தாய்* - உனது பிதாவாகிய அந்தணாளனது தவத்தினாற் பிறந்தாய் (அத்துணைப் பெருமையையுடைய நீ); *வேடன் எச்சிலை உண்டு இன்ன சாதி என்று இல்லாதவற்கு தலைவி ஆவதில்* - வேடுவகுலத்திற் பிறந்த கண்ணப்பநாயனாரது எச்சிலைப் புசித்து இன்னசாதியென்று வருணநிச்சயமில்லாதிருப்பவனுக்கு மனைவியாதலினும்பார்க்க; *யான் ஒரு விருத்தனேனும் என்பால் வந்து ஈது இழைத்து இருத்தல் நன்காம் என்ன* - நான் ஒரு வயோதிகனாயினும் என்னிடத்தில் வந்து இவ் விவாகத்தை நடத்திக்கொண்டிருப்பது நல்லதாமென்று கூற, *சுரி குழல் அதற்கு நாணி* - சுரித்த கூந்தலையுடைய உமாதேவி அவ்வாசகத்திற்கு வெட்கமுற்று எ-று.

ஆவதில் என்பதில் ஐந்தனுருபு எல்லைப்பொருட்டு. சுரி குழல் அன்மொழித்தொகை. உயர்குலப் பிராமணனுடைய அருமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வியாகிய நீ சாதிநெறியில்லாத பித்தனை விவாகஞ்செய்வதினும் பிராமண விருத்தனாகிய என்னை மணந்து கோடல் குலமுறைக்குத் தகுதியெனப் பெருமான் கூறினார். வேடனெச்சிலுண்ட சரித்திரத்தை ''பல்லினாலதுக்கிநாவிற். பழகிய வினிமைபார்த்துப் படைத்தவிவ் வமுதுசால வழகிது நாயனீரேயமுது செய்தருளுமென்றார்'' என்னுந் திருத்தொண்டர் பெரியபுராணச் செய்யுளாலுணர்க. 16

நாணொடு மியற்றி நின்ற
நற்றவ நெறியை நீத்துப்
பேணுமென் மொழியா ரோடும்
பெற்றவர் மனையிற் செல்லப்
பூணுறு தோழி மார்முன்
போயவர்க் குரைத்தா ரன்னோர்
காணரு மறையோன் றன்னைக்
கடிதினிற் கொணர்தி ரென்றார்.

**இ-ள் :** *இயற்றி நின்ற நல் தவ நெறியை நீத்து* - உமாதேவி தான் செய்துகொண்டிருந்த நல்ல தவமுறையைவிடுத்து; *நாணொடும் பேணும்மெல் மொழியாரோடும் பெற்றவர் மனையில் செல்ல* - வெட்கத்துடனே தம்மையுபசரிக்கின்ற மெல்லிய வசனத்தையுடைய தோழிகளுடன் கூடப் பிதாமாதாக்களின் வீட்டிற் பிரவேசிக்க; *பூண் உறு தோழிமார் முன்போய் அவர்க்கு உரைத்தார்* - ஆபரணத்தையணிந்த தோழிப்பெண்கள் முந்திப்போய்த் (தவச்சாலையினிகழ்ந்த சம்பவங்களைப்) பெற்றாருக்குக் கூறினார்கள்; *அன்னோர் காண் அரும் மறையோன்றன்னை கடிதினில் கொணர்திர் என்றார்* - அப்பெற்றார்கள் காணுதற்கரிய அவ்வேதியனை விரைவில் (இங்கே) அழைத்து வருவீராக என்று கூறினார்கள் எ-று.

விருத்தர் கூறிய வசனத்தினால் நாணம் விளைந்தமையே காரணமாகத் தவத்தை நிறுத்திப் பெற்றார் மனையிற் புகுதலின் 'நாணொடும் செல்ல' என்றார். 17

என்றலு மவர்போய்த் தேவ
ரீர்மனை வருக வென்ன
மன்றலங் குழல்வந் தென்னை
யழைத்திடின் வருவே னென்னச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிள மடவா ரிந்தச்
செய்திமற் றவர்பாற் சொல்ல
நன்றெனா மகளே நீயந்
நற்றவர் கொணர்தி யென்றார்.

**இ-ள் :** *என்றலும்* - என்றிவ்வாறு பெற்றார் கூறுதலும்; *அவர் போய் தேவரீர் மனைவருக என்ன* - அத்தோழியர்கள் அவ்விருத்தர்முன் சென்று ஸ்வாமி! எமது கிருகத்துக்கு எழுந்தருள்க என்று பிரார்த்திக்க, (அதுகேட்ட விருத்தர்); *மன்றல் அம் குழல் வந்து என்னை அழைத்திடின் வருவேன் என்ன* - வாசனைகமழுகின்ற அழகிய கூந்தலையுடைய அக்கன்னிகை வந்து என்னை அழைத்தால் நான் வருவேனென்று கூற; *இளம் மடவார் அவர்பால் சென்று இந்த செய்திசொல்ல* - இளம் பிராயத்தினையுடைய தோழிப்பெண்கள் அதுகேட்டு அப்பெற்றோரிடத்துப்போய் இந்நிகழ்ச்சியைக் கூற; *நன்று எனா* - (பெற்றார்) நல்லதென்று இயைந்து; *மகளே நீ அ நல் தவன் கொணர்தி என்றார்* - புதல்வியே நீ அந்த நல்ல தபோதனரை இங்ஙன மழைத்துவாவென்றுரைத்தார் எ-று.

மற்று அசை. மன்றலங்குழல் அன்மொழித்தொகை. அம் சாரியையெனினுமாம். 18

என்றசொற் கிசையா தன்னை
யிணங்கிய வதனம் பார்த்து
மன்றிறை யவனை யல்லான்
மனிதனை வணங்கே னென்னப்
பொன்றிடு மனித னேனும்
புவியிலந் தணனே யாயிற்
சென்றெதிர் பணித லென்றுஞ்
சிறுவருக் கமைத்த வன்றே.

**இ-ள் :** *என்ற சொற்கு இசையாது அன்னை இணங்கியவதனம் பார்த்து* - பெற்றார் இவ்வாறு சொல்லிய மொழிக்கு உமாதேவியாகிய புதல்வி இணங்காமல் தாயினது பற்றுமிக்க முகத்தைப் பார்த்து; *மன்று இறையவனை அல்லால் மனிதனை வணங்கேன் என்ன* - சபாநாயகராகிய பெருமானையன்றி மனிதனை நான் நமஸ்கரிக்க மாட்டேனென்று கூற (தாய் பின்னும் புதல்வியைநோக்கி); *பொன்றிடும் மனிதனேனும் அந்தணனேயாயின்* - சின்னாளிலிறக்கும் மானுடனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினும் அவன் பிராமணனேயாயின்; *எதிர்சென்று பணிதல் புவியில் சிறுவருக்கு என்றும் அமைந்த ஆறு* - அவனைக் கண்டமாத்திரத்தில் முன்னிலையிற் சென்று வணங்குதல் பூவுலகத்திற் பாலருக்கு எப்போதும் நிர்ணயித்த நெறியாம் எ-று.

இடு பகுதிப்பொருள் விகுதி.

19

அமைத்ததென் றவடாய் சொல்ல
வணங்கதை யறிவோ மென்று
கமைத்திறங் கொண்டு போந்து
கமலமார் சிரனைப் போற்றி
யெமைத்தரு தாதை பாலி
னெழுந்தருள் கெனக் கொணர்ந்து
சமைத்தபொற் பீட மீதிற்
சசிதர னாக வைத்தே.

**இ-ள் :** *அவள் தாய் அமைத்தது என்று சொல்ல* - அவ்வுமாதேவி யினது தாய் அச்செயல் சாஸ்திரோக்கதமென்றுகூற; *அணங்கு அறிவோம் என்று கமை திறம் கொண்டு போந்து* - உமாதேவி அதுகேட்டு நாமதனைச் சோதித்தறிவோமென்று பொறுமைத்தன்மை பொருந்திப்போய்; *கமலம் ஆர்சிரனை போற்றி* - கங்கையையணிந்த சிரசையுடைய ஈசராகிய பிராமணரைத் துதித்து; *எமை தரு தாதை பாலின் எழுந்தருள்க என கொணர்ந்து* - நம்மைப் பெற்ற பிதாவினிடத்தில் வருவதற்கு எழுந்தருள்க என்று கூறி அழைத்துவந்து; *சமைத்த பொன் பீடம் மீதில் சசிதரன் ஆக வைத்து* - உண்டாக்கிய சுவர்ணாசனத்தின்மேற் சந்திரசேகரராகத் தியானித்திருத்தி எ-று

ஏ ஈற்றசை. எம்மையென்பதெமையெனத்தொக்கது. எழுந்தருள்க என்றதில் ஈற்றகரமுந்தொக்கது.

20

வைத்தபி னவன்பொற் பாத
மலரினை யெண்ணெய்க் காப்பிட்
டுத்தம வடிதே னெய்பா
லொப்பிலைந் தமிர்த மாட்டிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமெய் முழுது மிக்க
சுகந்தங்க ளணிந்த பின்னர்
நத்தில காதி சாத்தி
நறுமல ரனைத்துந் தூவி.

**இ-ள் :** *வைத்தபின்* - ஆசனத்திருத்தியபின்பு; *அவன் பொன்பாத மலரினை எண்ணெய்க்காப்பு இட்டு* - அவரது அழகிய பாததாமரை களிடத்து எண்ணெய்க்காபபுச்சாத்தி; *உத்தமவடி தேன் நெய் பால் ஒப்பு இல் ஐந்தமிர்தம் ஆட்டி* - உத்தமமாகிய வடிக்கப்பெற்ற தேனும் நெய்யும் பாலும் ஒப்பற்ற பஞ்சாமிர்தமும் ஆகிய இவற்றை அபிஷேகஞ் செய்து; *சுத்தமெய் முழுதும் மிக்க சுகந்தங்கள் அணிந்தபின்னர்* - சுத்தமாகிய திருமேனியெங்கும் மேன்மைபொருந்திய வாசனைத் திரவியங்களைச் சாத்தியபின்பு; *ந திலகாதி சாத்தி* - உயர்வான பொட்டு முதலியவற்றைச்சாத்தி; *நறுமலர் அனைத்தும் தூவி* - வாசனை பொருந்திய புஷ்பங்களெல்லாவற்றையும் அவர்மேற் சொரிந்து எ-று.

மலரினை என்பதுருபுமயக்கம். ந என்பதுயர்வுப் பொருட்டு நக்கீரன் என்பதிற்போல. 21

தூவிய பின்ன ரன்னஞ்
சுவையுட னளித்துத் தூப
தீபமு மெடுத்துப் போற்றி
செய்திடு மளவி லெந்தை
யாவலோ டுமைகண் காண
வந்தண னுருவ நீத்து
மூவரி லொருவ னான
முழுமுத லுருவங் கொண்டான்.

**இ-ள் :** *தூவிய பின்னர்* - (மலர்களைச்) சொரிந்தபின்பு; *சுவை உடன் அன்னம் அளித்து* - அறுசுவைப் பதார்த்தங்களுடன் அன்னத்தை நிவேதித்து; *தூபதீபமும் எடுத்து போற்றிசெய்திடும் அளவில்* - தூபதீபங் களையுங் காட்டிப் (பூசாந்தத்தில்) தோத்திரஞ் செய்யும்பொழுது; *எந்தை அந்தணன் உருவம் நீத்து* - எம் பரமபிதாவாகிய சிவபிரான் பிராமண வேடத்தை ஒழித்து; *உமை கண் ஆவலோடு காண* - உமா தேவியா ருடைய கண்கள் ஆசையோடு தரிசிக்குமாறு; *மூவரில் ஒருவன் ஆன முழுமுதல் உருவம் கொண்டான்* - திரிமூர்த்திகளுள் முதல்வராய்நின்ற பரமசிவன் சுயரூபத்தைக் கொண்டருளினார் எ-று.

சுவை ஆகுபெயர். ஈண்டு ஒருவன்=முதல்வன். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுத லுருவங் கொண்ட
மூர்த்தியைப் பணிந்து வானோர்
பொழிமலர் மழையிற் றோய்ந்து
பூவையுண் மகிழ்ந்து கண்டு
விழிமலர் களித்து நிற்ப
வேதியன் றுணைவி யோடு
செழுமதி முடித்த நாதன்
றிருவடி சென்னி சேர்த்தான்.

**இ-ள் :** *பூவை முழுமுதல் உருவம் கொண்ட மூர்த்தியை பணிந்து* - உமாதேவியார் சிவவடிவத்தைக்கொண்ட சிவபெருமானை வணங்கி; *வானோர் பொழி மலர்மழையில் தோய்ந்து* - தேவர்கள் பொழிந்த புஷ்பமழையில் முழுகி; *உள் மகிழ்ந்து கண்டு* - அகமகிழ்ந்து தரிசித்து; *விழி மலர் கழித்து நிற்ப* - கண்மலர்கள் மதர்ப்புற்றுநிற்க; *வேதியன் துணைவியோடு செழுமதி முடித்த நாதன் திருவடி சென்னிசேர்த்தான்* - பிதாவாகிய அந்தணாளன் (அதுகண்டு) தன்மனைவியுடன் செழுமை யாகிய பாலசந்திரனைச் சடைமுடியிலணிந்த இறைவராகிய சிவ பிரானது திருப்பாதங்களைச் சிரமேற்கொண்டான் எ-று.

பூவை ஆகுபெயர்.

23

சென்னிசேர்த் திறைஞ்ச லோடுந்
திசைமுக னெடுமா லும்பர்
பன்னியர் புடையிற் சூழப்
பார்ப்பதி யென்னு மந்தக்
கன்னியைக் கொன்றை சூடி
கமலவே தியன்செய் யோம
வன்னிமுன் வதுவை செய்ய
வரன்முறை வழாம லீந்தான்.

**இ-ள் :** *சென்னி சேர்த்து இறைஞ்சலோடும்* - பெற்றார்கள் சிவ பெருமானது பாதங்களைச் சிரமேற்சூடி வணங்குதலும் (அச்சமயத்தில்); *திசைமுகன் நெடு மால் உம்பர் பன்னியர் புடையில் சூழ* - நான்கு முகங்களையுடைய பிரமதேவரும் நெடிய வடிவத்தையுடைய விஷ்ணு மூர்த்தியும் ஏனைத்தேவர்களும் அவர்களது மனைவியரும் பக்கத்தில் வந்துசூழ; *பார்ப்பதி என்னும் அந்த கன்னியை* - உமாதேவியாகிய அந்தக் கன்னிகையை; *கொன்றைசூடி* - கொன்றை மலர்மாலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யணிந்த சிவபெருமான்; *கமலவேதியன் செய் ஓம வன்னி முன் வதுவை செய்ய* - செந்தாமரை மலராசனராகிய பிரமதேவரமைத்த ஓமாக் கினியின் முன்னிலையிற் பாணிக்கிரகணஞ் செய்யும்படி; *வரன்முறை வழாமல் ஈந்தான்* - வரன்முறை தவறாது அவ்வந்தணாளன் தாரா தத்தஞ்செய்தான் எ-று.

அந்தணன் மனைவியுடன் சிவபெருமானை வணங்கும்பொழுது பிரமா முதலியோர் வந்தனரெனவும், அப்போது அவ்வந்தணன் பிரமாவை ஆசாரியராகக்கொண்டு கன்னிகையைத் தத்தஞ்செய் தானெனவுங் கூறுக. சூடி என்பதில் இகரம் வினை முதல்விகுதி. கொன்றை ஆகுபெயர். 24

ஈந்தபி னமல னுஞ்சை
யெனும்பதிக் குமையி னோடு
போந்திடு நெறியில் வேழம்
பிடியொடு மாடல் கண்டே
வாய்ந்தநின் றலைகு னிந்து
வருகென வனிதை நோக்கி
யாய்ந்தது புரிது மென்ன
வரனுமாங் கிசைந்து செய்தான்.

**இ-ள் :** *ஈந்தபின்* - தத்தஞ்செய்து கொடுத்தபின்பு; *அமலன் உமையினோடு உஞ்சை எனும் பதிக்கு போந்திடும் நெறியில்* - மலரகிதராகிய சிவபெருமான் உமாதேவியினுடன் அவந்திநகரத்திற்குப் போம்வழியிலே; *வேழம் பிடியொடும் ஆடல் கண்டு* - களிற்றியானை பிடியானையுடன் கிரீடைசெய்தலைக்கண்டு; *வாய்ந்த நின் தலை குனிந்து வருக என* - பெண்ணே நீ சிறந்த உனது தலையைக்குனிந்து வருகஎன்று சிவபெருமான்கூற; *வனிதைநோக்கி ஆய்ந்து அது புரிதும் என்ன* - உமாதேவி பார்த்து (யாமும்) அப்படிப் புணர்வோமென்று கூற; *அரனும் ஆங்கு இசைந்து செய்தான்* - சிவபெருமானும் அவ்வாறே உடன் பட்டுப்புணர்ந்தார் எ-று.

யானையுருக்கொண்டு புணர்ந்தாரென்க. 25

செய்தலு மவர்போ லுண்மைத்
தெய்வமா வுருக்கொண் டைந்து
கைதரு வடிவங் கொண்ட
கற்பக மென்ன வுள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்தரு மன்பி னோர்க்காங்
கிதமலி மதமும் மாரி
பெய்தரு கரிமு கத்துப்
பிள்ளையொன் றுதித்த தம்மா.

**இ-ள் :** *செய்தலும்* - அவ்வாறுபுணர்தலும்; *அவர் போல் உண்மை தெய்வ மா உரு கொண்டு* - (சிவபிரானும் உமாதேவியுமாகிய) அவ்விரு வரையும்போல மெய்மையாகிய தெய்வீகமார்ந்த பெரியதிருவுருவத்தை வகித்து; *ஐந்து கை தருவடிவம் கொண்ட கற்பகம் என்ன* - ஐந்துகைகள மைந்த ரூபத்தையெடுத்த கற்பகவிருக்ஷமென்னும்படி; *உள்ளத்து எய்து அரும் அன்பினோர்க்கு* - மனத்திலமைந்த சிறந்த அன்பினையுடைய அடியாராகிய பயிருக்கு; *இதம் மலி மும் மத மாரி பெய்தரு கரிமுகத்து பிள்ளை ஒன்று உதித்தது* - நன்மைமிகுந்த கருணையாகிய மும்மத மழையைப்பெய்கின்ற யானைமுகத்தையுடைய குழந்தையொன்று உற்பவித்தது எ-று.

அம்மா வியப்பு. மதமும்மாரி என்பது மும்மதமாரி என மாற்றி இயைக்கப்பட்டது. யானைமுகத்திற்கியைய அருளை மும்மதமாரியாக உருவகித்தார். கேட்டபொருளைக் கொடுப்பதாகலின் கற்பகத்தை விநாயகக்கடவுளுக்குவமித்தார். 26.

உதித்தபா லனைக்கண் டெந்தை
யுமையுடன் வியந்து வாழ்த்தி
மதித்தொரு பாசத் தோடு
மழுவுமொன் றளித்தோ ராலின்
கதித்தநன் னிழலில் வாழக்
கடவையென் றிருத்தி யென்றுந்
துதித்தவர் வினைக டீர்த்துத்
துணைசெயென் றருளிப் போனார்.

**இ-ள் :** *உதித்த பாலனை எந்தை உமையுடன் கண்டு வியந்து வாழ்த்தி* - உற்பவித்த அந்தப்புத்திரரை எம்பரமபிதாவாகிய சிவ பெருமான் உமாதேவியுடன்பார்த்து அதிசயித்து ஆசீர்வதித்து; *மதித்து ஒரு பாசத்தோடு மழுவும் ஒன்று அளித்து* - சிந்தித்து ஒருபாசத்தையும் ஒருமழுப்படையையும் அவருக்குக்கொடுத்து; *ஒரு ஆலின் கதித்த நல் நிழலில் வாழக்கடவை என்று இருத்தி* - ஒரு ஆலமரத்தினுடைய விசேஷித்த நல்ல நிழலிலே வாசஞ்செய்யக்கடவாயென்று இருத்தி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்றும் துதித்தவர் வினைகள் தீர்த்து துணை செய் என்று அருளி போனார்* - எஞ்ஞான்றும் உன்னைத்தியானித்த அடியவரின் தீவினைகளை நீக்கி அவர்க்குதவிசெய்க என்று அநுக்கிரகித்து அப்பாற் சென்றார் எ-று. 27

போனவ ருஞ்சை யென்னும்
புரத்திடை யமர்ந்த நாளிற்
றானவக் கயமு கன்செய்
சாற்றரு மிடுக்க ணாலே
வானவ ரணுகி நந்தி
மலரடி வணங்கி யேத்தி
ஞானநா யகன்பா னாங்க
ணண்ணிய தியம்பு கென்றார்

**இ-ள் :** *போனவர் உஞ்சை என்னும் புரத்திடை அமர்ந்த நாளில்* - சென்ற அவ்விருவரும் அவந்திநகரத்தில் தங்கியிருந்த காலத்தில்; *கயமுக தானவன் செய் சாற்ற அரும் இடுக்கணால்* - சுயமுகாசுரன் செய்த சொல்லுதற்கரிய துன்பத்தால்; *வானவர் அணுகி நந்தி மலர்அடி வணங்கி ஏத்தி* - இந்திரன் முதலிய தேவர்கள் போய் நந்திதேவரது செந்தாமரைமலர் போலுந் திருவடிகளை வணங்கித்துதித்து; *ஞான நாயகன் பால் நாங்கள் நண்ணியது இயம்புக என்றார்* - ஞானமுதல் வராகிய சிவபெருமானிடத்து நாங்கள் வந்து நிற்றலைச் சொல்லுக என்று விண்ணப்பஞ்செய்தார்கள் எ-று.

சாற்ற இயம்புக என்பன ஈறுதொக்கன. 28

என்றலுஞ் சிலாதன் மைந்த
னெம்பிரான் பாதம் போற்றிக்
குன்றெறி வச்சி ரக்கைக்
குரிசிலோ டமரர் யாருஞ்
சென்றி வணடைந்தா ரென்று
செப்பலுந் தருதி யென்ன
வன்றவ னருளாற் சென்றாங்
கரனடி போற்றி னாரே.

**இ-ள் :** *என்றலும்* - இவ்வாறு தேவர்கள் பிரார்த்தித்தலும்; *சிலாதன் மைந்தன் எம்பிரான் பாதம் போற்றி* - சிலாத முனிவரது புத்திரராகிய திருநந்திதேவர்போய் எம்பெருமானாகிய சிவபிரானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதங்களை வணங்கித்துதித்து; *குன்று எறி வச்சிரகை குரிசிலோடு அமரர் யாருஞ் சென்று இவண் அடைந்தார் என்று செப்பலும்* - மலைகளின் சிறகையரிந்த வச்சிராயுதத்தைத் தரித்த கையையுடைய இந்திரனும் மற்றைய தேவர்களெல்லோரும் இவ்விடத்தில் வந்து சேர்ந்தார்களென்று விண்ணப்பஞ் செய்தலும்; *தருதி என்ன* - (சிவ பெருமான் அதுகேட்டு நந்தியே! அத்தேவர்களை இங்கே) கொணர்வாயாக என்று ஆஞ்ஞாபிக்க; *அன்று அவன் அருளால் ஆங்கு சென்று அரன் அடி போற்றினார்* - அப்பொழுது அந்த நந்திதேவருடைய அனுமதிப்படி அவர்கள் உட்பிரவேசித்துச் சிவபெருமானுடைய பாதங்களை வணங்கித் துதித்தார்கள் எ-று.

ஏ அசை. முன்னொருகாலத்தில் அசுரர்க்காக மேலெழுந்து பறந்து உயிர்களையழித்த மலைகளின் சிறகை இந்திரன் வச்சிராயுதத்தா ரிந்தானாதலின் 'குன்றெறிவச்சிரக்கைக்குரிசில்' என்றார். 29

போற்றலுஞ் சுரரே யீங்குப்
புகுந்ததெக் குறையா லென்றாங்
கேற்றிருங் கொடியோன் கேட்ப
விந்திரன் வணங்கிக் கூற்றால்
மாற்றரும் படையால் வல்ல
மனிதரா லமர ரால்வெஞ்
சீற்றமார் விலங்கி னாலுஞ்
சிதைந்திடா வரம்பெற் றுள்ளான்.

**இ-ள் :** *போற்றலும்* - துதித்தலும்; *ஏற்று இரும் கொடியோன்சுரரே ஈங்குபுகுந்தது எக்குறையால் என்று கேட்ப* - பெரிய இடபக்கொடியை யுடைய சிவபெருமான் (அவர்களை நோக்கி) தேவிர்காள்! நீவிர் ஈண்டு நம்மைக்காணவந்தது என்ன குறையினால் என்று வினாவ; *இந்திரன் வணங்கி* - (அதனைக்கேட்ட தேவர்களுள்) இந்திரன் (அப்பெருமானை) நமஸ்கரித்து ஸ்வாமி; *கூற்றால்* - யமனாலும்; *மாற்று அரும்படையால்* - விலக்குதற்கரிய படைக்கலங்களாலும்; *வல்ல மனிதரால்* - வலிய மனிதர்களாலும்; *அமரரால்* - தேவர்களாலும்; *வெம் சீற்றம் ஆர் விலங்கி னாலும் சிதைந்திடாவரம் பெற்றுள்ளான்* - கொடிய கோபம் நிறைந்த மிருகங்களாலும் அழியாத வரத்தைப் (தேவரீரிடத்து முன்னே) பெற்றிருக்கின்றவன் எ-று.

ஆங்கு அசைநிலை. இது முதலிருசெய்யுளொருதொடர். 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரத்தினாற் கயமு கத்து
வல்லசு ரேச னெம்மை
யிரக்கமற் றியற்றுந் தீமை
யின்னவென் றியம்பொ ணாதாற்
கரத்திடை முளரி யேந்துங்
கடவுணீ காத்தி யென்னப்
புரத்தினை நகைத்தீ யூட்டும்
புங்கவன் வெருவ லென்றான்.

**இ-ள் :** *கயமுகத்து வல் அசுரேசன்* - கயமுகனாய வலிய அசுரத் தலைவன்; *வரத்தினால் இரக்கம் அற்று எம்மை இயற்றும் தீமை இன்ன என்று இயம்பொணாது* - (தான்பெற்ற) வரத்தினால் தயையின்றி எமக்குச் செய்யுந்தீமைகள் இத்துணையனவென்று (நம்மாற்) சொல்லு தற்கியலாவாம்; *கரத்திடைமுளரி ஏந்தும் கடவுள் நீகாத்தி என்ன* - திருக்கையில் அக்கினியைத் தாங்கிய ஸ்வாமி! தேவரீர் அடியேங்களைக் காத்தருள்க என்று பிரார்த்திக்க; *புரத்தினை நகை தீ ஊட்டும் புங்கவன் வெருவல் என்றான்* - முப்புரங்களைச்சிரிப்பாலாகிய அக்கினியையூட்டி யெரித்த சிவபெருமான் (அவர்களைநோக்கி நீவிர்) பயப்படாதிருங்கள் என்று திருவாய்மலர்ந்தருளினார் எ-று:

எம்மை என்னும் இரண்டாம் வேற்றுமையை நான்காம் வேற்றுமை யாகத்திரித்துப் பொருளுரைக்கப்பட்டது. ஆல் அசை. ஒணாதென்ப திடைக்குறை. முற்காலத்தில் முப்புரங்களைத் தகித்து அருள் செய்த வாறே கயமுகனையுமழித்துத் தேவர்க்கருள்புரியத் துணிந்தமையின் புரத்தினை நகைத்தீயூட்டும்புங்கவன் என்று விசேடித்தார். 31

வெருவர லிலாத நல்ல
வேழமா முகனை நோக்கிப்
பொருவில்சா ரதரோ டேகிப்
போரினை யியற்ற மிக்க
கருவரை யனைய வந்தக்
கயமுகா சுரனை வென்று
திருவரு டேவர்க் கீந்து
செயத்தொடு வருக வென்றான்.

**இ-ள் :** *வெருவரல் இலாத நல்ல வேழ மாமுகனை நோக்கி* - (சிவபெருமான் பகைவர்க்கு) அஞ்சாத நன்மை பொருந்திய பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பார்த்து; *பொரு இல் சாரதரோடு ஏகி போரினை இயற்றி* - (மைந்தனே! நீ) ஒப்பற்ற பூதவீரரோடு போய் யுத்தத்தைச் செய்து; *மிக்க கருவரை அனைய அந்த கயமுகாசுரனை வென்று* - மிகவுங்கருமையானை மலையைநிகர்த்த (வடிவத்தையுடைய) அந்தக் கயமுகாசுரனை வெற்றிகொண்டு; தேவர்க்கு *திருவருள் ஈந்து செயத்தொடும் வருக என்றான்* - தேவர்களுக்கு அனுக்கிரகத்தைச்செய்து வெற்றியுடனே மீண்டு வருக் என்று ஆஞ்ஞாபித்தார் எ-று. 32

என்றபோ திருகை கூப்பி
யெந்தையை விடை பெற்றேகிக்
குன்றுபோல் வளர்ந்து நின்ற
குறட்படைத் தலைவர் சூழக்
கன்றிய மனத்து வெய்ய
கயமுகத் தவுணன் வைகும்
வன்றிறற் புரிசை சூழ்ந்த
மதங்கமா புரத்தைச் சேர

**இ-ள் :** *என்றபோது எந்தையை இரு கை கூப்பி விடைபெற்று* - இவ்வாறு ஆஞ்ஞாபித்தபொழுது (விநாயகக்கடவுள்) எம் பரம பிதாவாகிய சிவபெருமானை இரண்டு கைகளாலுந்தொழுது அநுமதி பெற்று; *குன்று போல் வளர்ந்து நின்ற குறள்படை தலைவர் சூழ ஏகி* - மலையைப்போல வளர்ந்து நின்ற பூதசேனாதிபர்கள் தம்மைச் சூழப்போய்; *கன்றிய மனத்து வெய்ய கயமுகத்து அவுணன் வைகும்* - முறுகியமனத்தையுடைய கொடிய கயமுகாசுரன் வாசஞ்செய்கின்ற; *வன் திறல் புரிசை சூழ்ந்த மதங்கமாபுரத்தை சேர* - மிக்கவலிமைபொருந்திய மதில் சூழ்ந்த மதங்கமாபுரியை அடைய எ-று.

குன்றுபோல் வளர்தலாவது : புருஷாகிருதிக்குவேண்டிய பருமையும் நீட்சியும் அமையாது குறுத்துப்பருத்திருத்தல், வன் திறல் என்பன ஒருபொருட்சொற்கள், இதுமுதன்மூன்றுசெய்யுளொரு தொடர். எந்தை எம் தந்தை என்பதன்மரூஉ. 33

சேர்ந்திடு மெல்லை சேனை
தீயவ னகரத் துள்ள
கூர்ந்தவே லவுணர் யாருங்
குலைகுலைந் தோட மோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்திடு மமையத் தந்த
நிலைமையைக் கயமு கற்குச்
சார்ந்திடு தூதர் சொல்லத்
தழலென வுருத்துச் சீறி

**இ-ள் :** *சேர்ந்திடும் எல்லை* - மதங்கமாபுரத்தையணுகிய பொழுது, *சேனை* - (தூசிப்படையான) பூதசேனைகள்; *தீயவன் நகரத்து உள்ள கூர்ந்த வேல் அவுணர் யாரும் குலைகுலைந்து ஓட மோதி* - கொடிய கயமுகாசுரனுடைய பட்டணத்தில் வசிக்கின்ற கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய அசுரர்களெல்லாரும் நிலைகுலைந்துபயந் தோடும்படி தாக்கி; *நேர்ந்திடும் அமையத்து* - எதிர்க்கும்பொழுது, *சார்ந்திடு தூதர் அந்த நிலைமையை கயமுகற்கு சொல்ல* - கண்டு வந்ததூதர்கள் அந்த யுத்தாரம்பத்தைக் கயமுகாசுரனுக்குச்சொல்ல; *தழல் என உருத்து சீறி* - அவன்கேட்டு அக்கினிபோலக் கோபித்துச் சீறி எ-று.

நகர்க்காவலரென்பதைச் சுட்டுதற்குக்கூர்ந்த வேலவுணர் என்றார். 34

சீறரி யாச னத்துச்
செறிந்திடு மிருக்கை நீங்கி
மாறிலெஞ் சேனை முற்றும்
வல்லையிற் றருதி ரென்று
கூறின னெழுந்தவ் வெய்ய
கொற்றவன் வாயில் சென்றான்
வீறுசே ரவுண வெள்ள
மிக்கொருங் குற்ற தன்றே.

**இ-ள் :** *அ வெய்ய கொற்றவன்* - அந்தக்கொடிய கயமுகாசுரனாகிய அரசனானவன் (தூதரைநோக்கி); *மாறு இல் எம்சேனை முற்றும் வல்லையில் தருதிர் என்று கூறினன்* - ஒப்பற்ற நமது சேனைகளெல் லாவற்றையும் விரைவில் அழைத்துக்கொணர்மின் என்று ஆஞ்ஞாபித்து; *சீறு அரி ஆசனத்து செறிந்திடும் இருக்கை நீங்கி எழுந்து வாயில் சென்றான்* - கோபிக்கின்ற சிங்கங்களாற்றாங்கப்படுகின்ற ஆசனத்தில மைத்த இருக்கையை விட்டுஎழுப்பி முதற்கடைவாயிலை அடைந்தான் (அப்பொழுது); *வீறு சேர் அவுண வெள்ளம் மிக்கு ஒருங்கு உற்றது* - பெருமைபொருந்திய அசுரசேனாவெள்ளம் பெருகி ஒருங்கே வந்தது எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினனென்னும் வினைமுற்றை வினையெச்சமாக்கிப் பொருள் கொள்ளப்பட்டது. அன்று ஏ அசைநிலைகள். 35

அன்றவர் தானை முற்று
மணைந்தவா றரசற் கோதக்
குன்றன தேரை யிங்ஙன்
கொணர்கென வலவ னுய்ப்பப்
பொன்றிகழ் திணிதோள் வேந்தன்
பொருக்கென விவர்ந்து போகிக்
கன்றிய மனத்தி னோடுங்
கணபதி முன்னுற் றானே.

**இ-ள் :** *அன்று அவர் தானை முற்றும் அணைந்தவாறு அரசற்கு ஓத* - அப்பொழுது அவ்வசுரசேனைகளெல்லாம் வந்து கூடிய தன்மையைத் (தூதுவர்களள்) கயமுகாசுரனுக்குச் சொல்ல; *குன்று அன்ன தேரை இங்ஙன் கொணர்க என* - (அதுகேட்ட கயமுகாசுரன் சாரதியைநோக்கி), மலையைநிகர்த்த (நமது) தேரை ஈண்டுக்கொணர் வாயாக என்று ஆஞ்ஞாபிக்க; *வலவன் உய்ப்ப* - (அதுகேட்ட) சாரதி (தேரைமுன்) கொணர்ந்து நிறுத்த; *பொன் திகழ் திணி தோள் வேந்தன் பொருக்கென இவர்ந்து போகி* - அழகுவிளங்குகின்ற செறிந்த புயங்களை யுடைய கயமுகாசுரன் விரைவாக (அத்தேரில்) ஏறிப்போய்; *கன்றிய மனத்தினோடும் கணபதி முன் உற்றான்* - முறுகியமனத்தினுடனே விநாயகக்கடவுளின் முன்னிலையையடைந்தான் எ-று.

ஏ அசை. அவர் என்பதற்கு அத்தூதுவர் எனப்பொருள் கூறினுமாம். அன என்பதிடைக்குறை. பொன் என்பதை ஆகுபெயராக்கி வாகு வலயமெனக்கூறினும் பொருந்தும். கொணர்க என்பதினீறுதொக்கது. 36

உற்றதோர் வேலை பூத
ரொலிகட லென்ன வார்த்துச்
செற்றமோ டவுண சேனை
சிந்திட வடர்த்தல் காணூஉ
மற்றொரு தனுவை வாங்கி
வன்கய முகத்தன் பூதர்
பிற்றரப் பொருது பின்னெம்
பிரானொடும் பெரும்போர் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *உற்றது வேலை* - (இவ்வாறு) அணுகியசமயத்தில்; *பூதர் ஒலி கடல் என்ன ஆர்த்து* - பூதவீரர்கள் ஒலிக்கின்ற சமுத்திரத்தைப் போல் ஆரவாரித்து; *செற்றமோடு அவுணசேனை சிந்திட அடர்த்தல் வல்கயமுகத்தன் காணூஉ* - கோபத்துடன் அசுரசேனைகள் சிதையும்படி நெருக்கிப்பொருதலை வலியகயமுகாசுரன்கண்டு; *ஒரு தனுவை வாங்கி* - ஒருவில்லை (எடுத்து) வளைத்து; *பூதர் பின் தர பொருது* - பூதவீரர்கள் புறங்காட்டும்படி போர்செய்து; *பின் எம் பிரானொடும் பெரும் போர் செய்தான்* - (அவர்களைவென்றபின்) எம்பெருமானாகிய விநாயகக்கடவுளோடும் பெரியயுத்தத்தைச் செய்தான் எ-று.

ஓர் மற்று அசைநிலைகள். 37

செய்தது கண்டே யெந்தை
சிந்துர முகத்து வெய்யோன்
கையுறு படையான் மாளான்
கண்ணுதல் வரம் பெற்றுள்ளான்
மையல்செய் திவனை வேறல்
வழக்கென மனத்தி னோர்ந்து
துய்யகோ டொடித்து வஞ்சன்
சோர்ந்திடு மாறு விட்டான்.

**இ-ள் :** *எந்தை செய்தது கண்டு* - எம்பரமபிதாவாகிய விநாயகக் கடவுள் (அவன்) செய்தபோரைப்பார்த்து; *சிந்துரமுகத்து வெய்யோன் கண்ணுதல் வரம் பெற்றுள்ளான்* - கொடியகயமுகாசுரன் சிவபெருமானது வரத்தைப் பெற்றவன் ஆதலால், *கை உறு படையால் மாளான்* - நங்கையிற் பொருந்திய படைக்கலங்களால் இறவான்; இவனை *மையல் செய்து வேறல் வழக்கு என மனத்தில் ஒர்ந்து* - இவனை மாயஞ்செய்து வெல்லுதல் முறையாமென்று மனத்தில் உய்த்துணர்ந்து; *துய்ய கோடு ஒடித்து வஞ்சன் சோர்ந்திடுமாறு விட்டான்* - பரிசுத்தமாகிய (தமதுஒரு) கொம்பை முரித்து வஞ்சகனாகிய கயமுகன் வாட்டங்கொள்ளும்படி செலுத்தினார் எ-று.

ஏ அசை. மையல்செய்துவெல்லுதலென்றிச்செய்யுளிற் சுட்டியது படைக்கலநிரையுளடங்காத வேறொன்றைச் செலுத்தி வெல்லுதலை.

விட்டிடு தந்தஞ் சென்று
வெய்யவன் மருமம் போழ்ந்து
மட்டலர் கங்கை யாடி
வந்துமுன் னோன்கை யுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டலன் வீழ்ந்து மைய
லூற்றுப்பி னாகு வாகிக்
கிட்டின னெந்தை முன்னங்
கிளர்செருப் புரிய வெண்ணி

**இ-ள் :** *விட்டிடு தந்தம் சென்று வெய்யவன்மருமம் போழ்ந்து* - (விநாயகக்கடவுள்) செலுத்திய கொம்பு போய்க் கொடியவனாகிய கயமுகாசுரனது மார்பைப்பிளந்து; *மட்டு அலர் கங்கை ஆடி வந்து முன்னோன் கைஉற்றது* - வாசனைவிரிந்த கங்கைநதியிலே ஸ்நானஞ் செய்துவந்து முதல்வராகிய விநாயகக்கடவுளது கையிலிருந்தது; *ஒட்டலன் வீழ்ந்து மையல் உற்று பின் ஆகு ஆகி* - பகைவனாகிய கயமுகாசுரன் விழுந்து மயங்கிப் புன்பு மூஷிகமாகி; *கிளர் செரு புரிய எண்ணி எந்தை முன்னம் கிட்டினன்* - மூளுகின்ற போரைச்செய்ய நினைத்து எம் பரமபிதாவாகிய விநாயகக்கடவுளுக்கு எதிரே பின்னும்நெருங்கினான் எ-று. 39

எண்ணிய துணர்ந்தெங் கோமா
னினிதருட் பார்வை நல்கி
வண்ணமென் பிடரி லேறி
வாகன மாகி நம்மைத்
திண்ணமாய்ச் சுமத்தி யென்னத்
தெருள்பெறீஇ முன்னாள் யான்செய்
புண்ணிய மென்னோ வென்னாப்
போற்றியே சுமந்த தன்றே.

**இ-ள் :** *எம் கோமான் எண்ணியது உணர்ந்து இனிது அருட் பார்வை நல்கி* - எங்கள் தலைவராகிய விநாயகக்கடவுள் (கயமுகாசுரன்) எண்ணிய கருத்தை அறிந்து நன்றாகக் கிருபா நோக்கஞ்செய்து; *வண்ணமெல் பிடரில் ஏறி* - அழகிய மென்மையாகிய பிடரில் எழுந்தருளி; *வாகனம் ஆகி திண்ணமாய்நம்மை சுமத்தி என்ன* - (மூஷிகமே நீ) வாகனமாய் வலிமைகொண்டு நம்மைச் சுமப்பாய் என்று ஆஞ்ஞாபிக்க; *தெருள் பெறீஇ* - (அம் மூஷிகம் முன்னுள்ள அஞ்ஞானம் நீங்க) மெஞ்ஞானத்தைப் பெற்று; *முன்நாள் யான் செய் புண்ணியம் என்னோ என்னா* - முற்காலத்திலே நான் (இப்பெருமானைச் சுமக்கும் படி) செய்தபுண்ணியம் யாதோவென்று (மதித்து); *போற்றி சுமந்தது* - (அவரைத்) துதித்துச் சுமந்தது எ-று.

அன்று ஏ அசைநிலைகள், ஒ வியப்பு. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றவ ணின்ற தேவ
ரைங்கரக் கடவுட் போற்றி
யின்றிப முகவற் செற்றா
யாமெலா முய்ந்தோ மெந்தாய்
நன்றிகொ ளுனது மேன்மை
நாஞ்சொல வெளிதோ வென்னாச்
சென்றவ னடியிற் றாழத்
திருவரு ணல்கி னானே.

***இ-ள் :*** *அன்று அவண் நின்ற தேவர்* - அப்போது அவ்விடத்து (யுத்தநிகழ்ச்சியைப்பார்த்து) நின்ற தேவர்கள்; *ஐங்கர கடவுள் போற்றி* - ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக் கடவுளைத்துதித்து; *எந்தாய்* - எம்பரமபிதாவே; *இன்று இபமுகவன் செற்றாய்* - இற்றைத்தினத்திலே கயமுகாசுரனைச்சங்கரித்தீர்; *யாம் எலாம் உய்ந்தோம்* - (அதனால்) நாங்களெல்லாம் உய்யப்பெற்றோம்; *நன்றி கொள் உனது மேன்மை நாம் சொல எளிதோ என்னா* - நன்மைபொருந்திய தேவரீரது மகிமை நாம் சொல்லுதற்கு எளிதாமா என்று புகழ்ந்து; *சென்று அவன் அடியில் தாழ* - (அவர்முன்னிலையிற்) போய் அவரது பாதங்களில் விழுந்து வணங்க; *திருவருள் நல்கினான்* - அப்பெருமான் (அவரவர்க்கேற்ற) கருணையைச் செய்தார் எ-று.

எலாம் சொல் என்பன இடைக்குறைகள், எந்தை என்னுஞ் சொல்ஆய் என்னும் விழியுருபேற்று என்தாய் என வந்தது. ஓ எதிர்மறை. ஓ ஈற்றசை. 41

நல்கிவல் லபையை வேட்டு
நணுகியே திருச்செங் காட்டி
லல்லுறழ் கண்டன் றன்னை
யாகமப் படிபூ சித்தே
கல்விசே ரறிஞர் போற்றுங்
கணபதீச் சரம தென்னுந்
தொல்பெய ரதற்குண் டாக்கிச்
சொல்லருங் கயிலை யுற்றான்.

***இ-ள் :*** *நல்கி வல்லபையை வேட்டு திருச்செங்காட்டில் நணுகி* - விநாயகக்கடவுள்) திருவருளைச்செய்து (பின்) வல்லபாம் பிகையைத் திருமணஞ்செய்து திருச்செங்காடு என்னுந்தலத்திற்குப் போய்; *அல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உறழ் கண்டன் தன்னை ஆகமப்படி பூசித்து* - (அங்கே) இருள் போன்ற(கரிய) கண்டத்தையுடைய சிவபெருமானை ஆகம விதிப்படி தாபித்துப் பூசைசெய்து; *அதற்கு கல்வி சேர் அறிஞர்போற்றும் கணபதீச்சரமது என்னும் தொல்பெயர் உண்டாக்கி* - அத்தலத்திற்குக் கல்விபொருந்திய ஞானிகள் துதிக்கின்ற கணபதீச்சரம் என்னும் பழைய பெயரை அமைத்து; *சொல் அரும் கயிலை உற்றான்* - சொல்லுதற்கரிய (மகிமையையுடைய) கைலாசமலையை அடைந்தார் எ-று.

திருச்செங்காடு என்பது விநாயகப்பெருமான் கயமுகனைச் சங்கரித்தபோது அவ்வசுரனது மார்பினின்றும் இரத்தவெள்ளம் பாய்ந்து தங்கிச் சிவந்தமையால் வந்தபெயர். கணபதீச்சுரம் என்பது முற்சுட்டிய தலத்தில் விநாயகப்பெருமான் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்த திருக்கோயில். கணபதி ஈச்சுரம்=கணபதியினாற்றாபிக்கப்பட்ட சிவனை யுடையது. வல்லபாம்பிகையைத் திருமணஞ்செய்த சரித்திரத்தைப் பார்க்க அப்புராணத்தில் வல்லபைகணேசர் திருவவதாரப் படலத் தாலுணர்க.

42

உற்றிடக் கணங்கட் கெல்லா
    மொருதனி முதன்மை நல்கி
வெற்றிகொள் படைகள் சூழ
    மேலைவாய் நகரத் தேகிக்
கொற்றமோ டிருத்தி யென்று
    குன்றவில் லுடையோன் கூறக்
கற்றவர் கரும முன்னாங்
    கணபதி யிருந்த காலை.

**இ-ள் :** *உற்றிட* - (விநாயகப் பெருமான் கைலாசமலையில்) வந்து சேர; *குன்றவில் உடையோன்* - மகாமேருமலையாகிய வில்லை யுடைய சிவபெருமான்; *கணங்கட்கு எல்லாம் ஒரு தனி முதன்மை நல்கி* - கணத்தவர்களுக்கெல்லாம் விசேடமான ஒப்பற்ற தலைமையை (அவருக்குக்) கொடுத்து; *வெற்றி கொள் படைகள் சூழ மேலை வாய் நகரத்து ஏகி* - (குமாரனே! நீ) வெற்றிபொருந்திய பூதசேனைகள் சுற்ற (இக்கோயிலின்) மேற்குக் கோபுர வாயிலிலுள்ள நகரத்திற் போய்; *கொற்றமோடு இருத்தி என்று கூற* - அங்கே வெற்றியுடன் இருப்பாயாக என்று திருவாய் மலர்ந்தருள; *கற்றவர் கருமம் முன் ஆம் கணபதி இருந்த காலை* - அறிஞர் செய்யுங் கிரியைகளின் முதலிற் பூசிக்கப்படுகிற விநாயகக் கடவுள் (பிதாவின் அனுமதிப்படி அந்நகரத்திற்குபோய்) இருந்தபொழுது எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி கணங்களுக்குத்தலைவர். கணத்தலைமைகொடுத்தமையை உணர்த்தியதனால் அதற்கேற்பக் கணபதி என்னும் பெயரையும் இச்செய்யுளில் வைத்தார். 43

காலைய துணர்ந்து தேவர்
கணபதிக் குரிய நோன்பென்
றேலவா வணிமா தத்தி
னியைந்தசுக் கிலபக் கத்தி
னாலதாந் திதியி னோற்று
நறைமலர் தூவிப் போற்றும்
வேலையங் கதனி லெந்தை
வெளிப்பட நிருத்தஞ் செய்தான்.

**இ-ள் :** *தேவர் காலையது உணர்ந்து* - தேவர்கள் சமயம் பார்த்து; *ஆவணி மாதத்தின் இயைந்த சுக்கிலபக்கத்தில் நாலது ஆம் திதியில்* - ஆவணிமாதத்தில்வந்த சுக்கிலபக்ஷசதுர்த்தியில் கணபதிக்கு உரிய நோன்பு என்று ஏல நோற்று விநாயகக்கடவுளுக்குரிமையான விரதமென்று தகவு பெற அனுட்டித்து (முடிவிலே); *நறை மலர் தூவி போற்றும் வேலை அதனில்* - சுகந்தபுஷ்பங்களைச்சொரிந்து தோத்திரஞ் செய்கின்ற அச்சமயத்தில்; *எந்தை வெளிப்படநிருத்தம் செய்தான்* - எம்பரம பிதாவாகிய விநாயகக்கடவுள் அத்தேவர்களெல்லோருந் தரிசிக்குமாறு திருக்கூத்தாடினார் எ-று.

காலையது நாலது என்பவற்றில் அதுபகுதிப்பொருள்விகுதி. 44

செய்திடு நிருத்தங் கண்டே
தேவர்கண் மகிழ்ந்து போற்ற
மையல்சேர் மதிய வன்றன்
வடிவினை நகைத்த வேலை
யெய்திய வகந்தை யானீ
சிரித்தனை பழிபா வங்கள்
வெய்துற வடைவா ருன்னை
மேவுமித் தினத்திற் கண்டோர்.

**இ-ள் :** *தேவர்கள் செய்திடும் நிருத்தம் கண்டு மகிழ்ந்து போற்ற* - தேவர்கள் (விநாயகக்கடவுள்) செய்த திருக்கூத்தைத் தரிசித்து மனமகிழ்ந்து துதிக்க; *மையல் சேர்மதி அவன் தன் வடிவினை நகைத்த வேலை* - அறியாமை பொருந்திய சந்திரன் அவருடைய திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுருவத்தைப் பார்த்து பரிகசித்தபொழுது; *நீ எய்திய அகந்தையால் சிரித்தனை* - (விநாயக்கடவுள் சந்திரனைப் பார்த்து) நீ (உன்னிடத்துப்) பொருந்திய கர்வத்தினாற் சிரித்தாய் (ஆதலால்); *மேவும் இ தினத்தில் உன்னை கண்டோர்* - (வருடந்தோறும்) வ்ருகின்ற இத்தினத்திலே உன்னைப் பார்த்தவர்கள்; *பழி பாவங்கள் வெய்துறவு அடைவார்* - வசையையும் பாவங்களையும் துயரங்களையும் எய்துவார்கள் எ-று.

ஏ அசை. இது முதன்மூன்று செய்;யுளொருதொடர். 45

கண்டக ராவா ரென்றே
கரிமுகக் கடவுள் சீறி
விண்டனி லுலவு வெள்ளை
விதுவினைச் சபித்த காலை
யண்டர்கள் வெருவி யைய
னாருமித் தினத்திற் கோபங்
கொண்டன னெனவே யெண்ணிக்
கூறரு மருளைக் கண்ணி

**இ-ள் :** *கரிமுகக் கடவுள் சீறி* - யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுள்கோபித்து; *கண்டகர் ஆவார் என்று* - (உன்னைக் கண்டோர்) கீழ்மக்களாவாரென்று; *விண் தனில் உலவுவெள்ளைவிதுவினை சபித்த காலை* - ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற வெள்ளிய சந்திரனைச்சபித்த பொழுது; *அண்டர்கள் வெருளி* - தேவர்கள் பயந்து; *ஐயன் ஆரும் இ தினத்தில் கோபம் கொண்டனன் என எண்ணி* - எம்பரமபிதாவாகிய இவர் நிகழ்கின்ற இத்தினத்திலே கோபமுற்றாரென்றுநினைத்து; *கூற அரும் அருளை கண்ணி* - சொல்லுதற்கரிய கிருபையைப்பெறவிரும்பி எ-று.

ஏகாரங்கள் அசைநிலைகள். 46

கண்ணருட் கிருபை நல்குங்
கடகரி முகற்குப் பூசை
பண்ணியே தவத்தின் மிக்க
பண்ணவ ருவகை கூர்ந்தே
யெண்ணுமார் கழிமா தத்தி
னிசைந்தபூ ருவபக் கத்தி
னண்ணிய சதய நாளிற்
சட்டிநன் றென்று நோற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *தவத்தின் மிக்க பண்ணவர்* - தவத்தினால் மேம்பட்ட தேவர்கள்; *கண் அருள் கிருபை நல்கும் கட கரி முதற்கு பூசை பண்ணி* - கண்ணோட்டமாகிய கிருபையைத் தருகின்ற மதத்தைப் பிலிற்றுகின்ற யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குப் பூசைசெய்து; *உவகை கூர்ந்து* - (அப்பூசைக்கு விநாயகக்கடவுள் செய்த கருணையினால்) மகிழ்ச்சிமிகுந்து; *எண்ணும் மார்கழிமாதத்தின் இசைந்த பூருவபக்கத்தில் நண்ணிய சதயநாளில் சட்டி நன்று என்று நோற்றார்* - மதிக்கத்தகுந்த மார்கழிமாதத்திற் பொருந்தி வருகிற பூர்வபக்ஷத்திலமைந்த சதய நக்ஷத்திரத்துடன் சம்பந்தித்த சட்டி விசேடமானதென்று நிச்சயித்து அத்தினத்தில் விரதமனுட்டித்தார்கள் எ-று.

கண்ணருட்கிருபை இருபெயரொட்டு. ஏகாரங்கள் அசை நிலைகள். விநாயகப்பெருமானுக்கு கருணாவெள்ளமே மதமாதலால் கண்ணருட்கிருபைநல்குங் கடகரிமுதற்கு என்றார். சட்டி இருதினங்களில் வியாபித்திருக்கும்போது சதயசம்பந்தமான சட்டியைக் கொள்ளவேண்டு தலின் சதயநாளிற் சட்டி என்றார். 47

நோற்றிடுங் காலத் திந்த
நுவலரும் விரத மண்ணிற்
றோற்றிய காதை யொன்று
சொல்லுவன் குருகு லத்தி
னாற்றல்சேர் பாண்டுமைந்த
ரைவரென் றுரைக்கு மன்னோர்
தோற்றுதே வகிதன் மைந்தன்
றுணைப்பதந் தொழுது சொல்வார்.

**இ-ள் :** *தோற்றிடும் காலத்து* - (இவ்வாறு தேவர்கள்) அனுட்டிக் குங்காலத்தில்; *நுவல் அரும் இந்த விரதம் மண்ணில் தோற்றிய காதை ஒன்று சொல்லுவன்* - சொல்லுதற்கரிய இந்தவிரதம் பூவுலகத்திற் பிரசித்தியான சரித்திரமொன்றை (யான்) சொல்லுவேன்; *குருகுலத்தில் ஆற்றல் சேர் பாண்டுமைந்தர் ஐவர் என்று உரைக்கும் அன்னோர்* - குரு குலத்திற் பிறந்த வலிமைமிகுந்த பஞ்சபாண்டவரென்று புகழ்ப் படுகின்ற அவர்கள்; *தோற்று தேவகிதன் மைந்தன் துணை பதம்தொழுது சொல்வார்* - பூவுலகத்திலுற்பவித்த தேவகியின் புதல்வராகிய கிருஷ்ண மூர்த்தியினுடைய இரண்டு பாதங்களையும் வணங்கி (அவருக்கு இவ்வாறு) விண்ணப்பஞ்செய்வார்கள் எ-று.

அன்னோர் பண்டறிசுட்டு. 48.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லருஞ் சமரில் வாகை
சூடவு நினைந்த வெல்லா
மொல்லையிற் றரவு மேம்பா
டுற்றுவாழ்ந் திடவு மேற்ற
நல்லதோர் விரத மொன்று
நவிலுதி யென்று போற்றக்
கல்லினான் மாரி காத்த
கடனிற வண்ணன் கூறும்.

**இ-ள் :** *சொல்ல அரும் சமரில் வாகை சூடவும்* - (நாங்கள்) சொல்லுதற்கரியபோரிலே வெற்றி பெறவும்; *நினைந்த எல்லாம் ஒல்லையில் தரவும்* - எண்ணிய சித்திகளெல்லாவற்றையும் விரைவில் தரவும்; *மேம்பாடு உற்று வாழ்ந்திடவும் ஏற்ற நல்லது விரதம் ஒன்று நவிலுதி என்று போற்ற* - மேன்மை பொருந்தி வாழவுந்தக்க நல்லவிரத மொன்றைச் சொல்லியருள வேண்டுமென்று பிரார்த்திக்க; கல்லினால் மாரி காத்த கடல் நிற வண்ணன் கூறும்-கோவர்த் தனகிரியாகிய குடையினால் மழைபடாது பசுக்களைக்காத்த கடல் போலுங் கருநிறம் பொருந்திய திருமேனியையுடையகிருஷ்ணமூர்த்தி அவர்களைநோக்கி இவ்வாறு கூறுவார் எ-று.

ஓர் அசைநிலை. நிறவண்ணன் இருபெயரொட்டுப் பண்புத் தொகை. நந்தகோபன் இந்திரனுக்குச் செய்யும் பூசையைக் கிருஷ்ண மூர்த்தி ஏற்றமையைக்கண்டு இந்திரன் கோபித்துப் பசுக்களையழிக்கும் படி ஏழு மேகங்களையுமேவி ஏழுதினம்வரையும் ஓயாது கன்மழை பெய்வித்தானெனவும் அதுகண்ட கிருஷ்ணமூர்த்தி பசுமந்தைகள் இடையூறடையாவண்ணம் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துக் காத்தாரெனவும் விஷ்ணுபுராண முதலியவற்றிற் கூறப் படுதலால், கல்லினான் மாரிகாத்த கடனிறவண்ணன் என்றார். 49

கூறுசேர் மதியஞ் சூடுங்
குழகன்முன் னாளிற் றந்தோன்
மாறிலா தவர்கள் கோடி
வயங்கொளி தயங்கு மெய்யோன்
வீறுசேர் கயமு கத்தோன்
விளங்குமைங் கரத லத்தோ
னீறுசேர் நுதலோர் போற்றி
னினைத்தது முடிப்ப னன்னோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *கூறுசேர் மதியம் சூடும் குழகன் முன்னாளில் தந்தோன* - பாலசந்திரனைத் தரித்த அழகராகிய சிவபெருமான் முற்காலத்திற் பெற்ற குமாரர்; *மாறில் ஆதவர்கள் கோடிவயங்கு ஒளி தயங்கும் மெய்யோன்* - ஒப்பில்லாத கோடி சூரியர்கள்கூடிப் பிரகாசித்தாற் போன்ற ஒளிமிகுந்த திருமேனியையுடையவர்; *வீறுசேர் கயமுகத்தோன்* - பெருமைபொருந்திய யானை முகத்தையுடையவர்; *விளங்கும் ஐங்கரதலத்தோன்* - பிரகாசிக்கிற ஐந்து திருக்கரங்களையுடையவர்; *அன்னோன்* - (முற்குறித்த இலக்கணங்களையுடைய) அந்த விநாயக் கடவுள்; *நீறு சேர் நுதலோர் போற்றின் நினைத்தது முடிப்பன்* - விபூதியையணிந்த நெற்றியையுடைய அடியார்கள் துதித்தால் அவர் களெண்ணியவற்றை நிறைவேற்றுவார் எ-று. 50

அன்னவன் றன்னைப் போற்று
　　மடைவெமக் கருடி யென்ன
மன்னுமா வணிமா தத்தின்
　　மதிவளர் சதுர்த்தி தன்னி
னன்னர்வெண் டரள நந்தூர்
　　நறும்புன லதனி லாடிச்
சொன்னதோர் நியம முற்றுந்
　　துகளற முடித்துப் பின்னர்.

**இ-ள் :** *அன்னவன்றன்னை போற்றும் அடைவு எமக்கு அருடி என்ன* - (இவ்வாறுகூறிய கிருஷ்ணமூர்த்தியைப் பாண்டவர் பார்த்து ஸ்வாமீ) அக்கடவுளை வழிபடும் முறையைச் சிறியேங்களுக்கு உப தேசித்தருள்கவென்று வேண்ட (அந்தக்கிருஷ்ணமூர்த்தி அவர்களை நோக்கி அன்பர்களே); *மன்னும் ஆவணிமாதத்தில் மதிவளர் சதுர்த்தி தன்னில்* - நிலைபெற்ற ஆவணிமாதத்தில்வரும் சுக்கிலபக்ஷ சதுர்த்தியில்; *நன்னர்வெண் தரளம் தந்து ஊர் நறும் புனல் அதனில் ஆடி* - நன்மை பொருந்திய வெள்ளிய முத்துக்களையுடைய சங்குகள் சஞ்சரிக்கின்ற வாசனைபொருந்திய தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்து; *சொன்னது நியமம் முற்றும துகள அற முடித்து* - விதிக்கப்பட்ட நித்தியானுட்டான முழுவதையும் குற்றந்தீரச் செய்துமுடித்து; *பின்னர்* - அதன்பின்பு எ-று.

இது முதல் ஐந்து செய்யுளொருதொடர். ஓர் அசைநிலை. 51.

முடிவிலைங் கரனைப் பொன்னால்
　　வெள்ளியால் முறையிற் செய்த
லடைவதாந் தகுதி யில்லோ
　　ரானதோர் மண்ணி னாலுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமுறச் செயலாங் கோயி
றிருமெழுக் கிட்டுத் தீபம்
வடிவுற வேற்றிப் பட்டால்
வயங்குற விதானஞ் செய்து.

**இ-ள் :** *முடிவு இல் ஐங்கரனை பொன்னால் வெள்ளியால் முறையில் செய்தல் அடைவது ஆம்* - அழிவில்லாத விநாயக மூர்த்தியைப் பொன்னினால் அல்லது வெள்ளியினால் விதிப்படி செய்வது முறையும்; *தகுதி இல்லோர் ஆனது ஓர் மண்ணினாலும் திடம் உற செயலாம்* - அவ்வாறு செய்யத் தகுதியற்ற தரித்திரர்கள் தகுந்த ஒப்பற்ற மண்ணினா லேனும் உறுதிப்படச் செய்யலாம் (செய்தபின்னர்); *கோயில் திரு மெழுக்கு இட்டு* - அவருடைய ஆலயத்தை மெழுகி; *வடிவு உற தீபம் ஏற்றி* - சிறப்புப்பொருந்த விளக்கேற்றி; *பட்டால் வயங்குற விதானம் செய்து* - பட்டு வஸ்திரத்தினால் விளங்கும்படி மேற்கட்டியமைத்து எ-று.

ஆனதோர்மண் என்றது புற்றுமண் முதலியவற்றை. செயலாமென் பதிடைக்குறை. அடைவது என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. 52

செய்யநன் முளரி யாதி
செழுமலர் மாலை யாலே
யையன துறையு ளெங்கு
மழகுற வலங் கரித்துக்
கையுறு மோத கம்பால்
கனிந்தமுப் பழமெள் ளுண்டை
யெய்துறு பண்டம் யாவு
மின்புறக் கொணர்ந்தி ருந்து.

**இ-ள் :** *செய்ய நல் முளரி ஆதி செழு மலர் மாலையால்* - நல்ல செந்தாமரைப் புஷ்ப முதலிய செழுமையான (அன்றலர்ந்த) புஷ்பங்களாற்றொடுக்கப்பட்ட மாலையினால்; *ஐயனது உறையுள் எங்கும் அழகு உற அலங்கரித்து* - விநாயகக்கடவுளினது திருக்கோயில் முழுவதையும் அழகு பொருந்தச் சிறப்பித்து; *கை உறு மோதகம் பால் கனிந்த முப்பழம்எள்ளுண்டை* - (எம்பெருமானது) திருக்கரத்திற் பொருந்துமியல்பினையுடைய மோதகமும் பசுப்பாலும் பழுத்த (வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் என்னும்) மூன்று பழங்களும் எள்ளுருண்டையும்; *எய்துறு பண்டம் யாவும் இன்பு உற கொணர்ந்து இருந்து* - சேரவேண்டிய மற்றும் பொருள்களும் ஆகிய எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றையும் மகிழ்ச்சிபொருந்தக்கொண்டுவந்து இருந்து எ-று. 53

ஏ-அசைநிலை.

இரும்பழுக் காயு டன்வெள்
ளிலையாதி பதார்த்தம் யாவும்
விரும்புறு திருமு னாக
மிகக்குவித் துபசா ரத்திற்
பொருந்துறு தூப தீபம்
புகலுமந் திரத்தாற் றந்து
வரந்தரு கென்று வேழ
வதனனை வணங்கி யன்பால்.

**இ-ள் :** *இரும் பழுக்காயுடன் வெள்ளிலை ஆதி பதார்த்தம் யாவும்* - பெரியபாக்கினுடனே வெற்றிலை முதலாகிய பதார்த்தங்களெல்லாவற்றையும்; *விரும்புறு திருமுன் ஆக மிக குவித்து* - விரும்புகின்ற (அப்பெருமானது) சந்நிதானத்திலே பொருந்துமாறு அதிகமாகக்குவித்து; *உபசாரத்தில் பொருந்துறு தூபதீபம் புகலும் மந்திரத்தால் தந்து* - சோடசோபசாரங்களுள்ளேயமைந்த தூபதீபங்களைச் சொல்லப்படுகிற மந்திரங்களுடனே கொடுத்துப்பூசித்து; *வரம் தருக என்று வேழவதனனை அன்பால் வணங்கி* - விரும்பியபேற்றைத்தந்தருள்க என்று யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளை அன்பினுடன் நமஸ்கரித்து எ-று

தருக என்பதன் ஈறுதொக்கது. சோடசோபசாரங்களாவன:- ஆவாகனம், தபானம், சன்னிதானம், சன்னிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், செபசமர்ப்பணம், ஆராத்திரிகம் என்பனவாம். இவற்றைச்சுருக்கித் தசோபசாரம், பஞ்சோபசாரம் எனவும் வழங்குவர். 54

அன்னநோன் பியற்றி யெந்தை
யருளடைந் துய்ந்தார் தம்மை
யின்னரென் றுரைக்க வெம்மா
லியலுமோ வரன்மு னோற்று
மன்னுமுப் புரந்தீ யிட்டான்
மருத்துவ னிவனைப் போற்றி
வின்மலி கரத்து வெய்ய
விருத்திரா சுரனைக் கொன்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *அன்ன நோன்பு இயற்றி எந்தை அருள் அடைந்து உய்ந்தார் தம்மை* - அந்தச் சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து எம்பரம பிதாவாகிய விநாயகப் பெருமானுடைய கிருபையைப் பெற்று உய்ந்த வர்களை; *இன்னர் என்று உரைக்க எம்மால் இயலுமோ* - இத்துணை யினரென்று வரையறுத்துச்சொல்லுதற்கு நம்மால்முடியுமா (முடியா தென்பதாம்); *அரன் முன் நோற்று மன்னும் முப்புரம் தீயிட்டான்* - சிவபெருமான் முற்காலத்திலனுட்டித்து நிலைபெற்ற முப்புரங்களை எரித்தார்; *மருத்துவன் இவனை போற்றி வில் மலி கரத்து வெய்ய விருத்திராசுரனை கொன்றான்* - தேவேந்திரன் இக்கடவுளை (முற்கூறிய வாறு) வழிபட்டு வில்லைத்தரித்த கையையுடைய கொடிய விருத்திரா சுரனை அழித்தான் எ-று. 55

செற்றமி லகலி கைப்பேர்த்
திருந்திழை முன்னா ணோற்றே
யுற்றநற் கொழுநற் சேர்ந்தா
ளுறுதம யந்தி நோற்று
நற்றவ நளனைச் சேர்ந்தா
ணாலிரு வசுக்க ணோற்றே
யிற்றதஞ் சீர்பெற் றுய்ந்தார்
தசரத ராம னோற்றே.

**இ-ள் :** *செற்றம் இல் அகலிகை பேர் திருந்து இழைமுன்னாள் நோற்று* - கோபமில்லாத அகலிகையென்னும் பெயரையுடையபெண் முன்னாளிலே இவ்விரதத்தையனுட்டித்து; *உற்ற நல்கொழுநன் சேர்ந்தாள்* - பொருந்திய நல்ல நாயகராகிய கௌதமமுனிவரைச் சேர்ந்தாள்; *உறு தமயந்தி நோற்று நல் தவநளனை சேர்ந்தாள்* - முற்காலத்திலிருந்த தமயந்தியனுட்டித்து நல்ல தவத்தையுடைய நளராசனைச் சேர்ந்தாள்; *நாலிரு வசுக்கள் நோற்று இற்ற தம் சீர்பெற்று உய்ந்தார்* - அட்டவசுக்களனுட்டித்து அழிந்த தமதுசிறப்புகளைப் பின்னும்பெற்றுய்ந்தார்கள்; *தசரத ராம னோற்று* - தசரதராசனது புத்திரராகிய ஸ்ரீராமசுவாமி இதனை அனுட்டித்து எ-று.

ஏகாரங்கள் அசைநிலைகள், திருந்திழை அன்மொழித்தொகை, இது முதலிரண்டு செய்யுள் ஒருதொடர். அட்டவசுக்களாவார்:- தரன் துருவன் சோமன் ஆபன் அனிலன் அனலன் பிரத்தியூஷன் பிரபாசன் என்பவர்களாம். 56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோதக வரக்கர்ச் செற்று
நுண்ணிடைச் சீதை தன்னை
யாதர வுடனே பெற்றங்
கரசளித் திருந்தான் மிக்க
மாதவப் பகீர தன்றான்
வருந்தியந் நாளி னோற்றுக்
காதலிற் கங்கை தன்னைக்
காசினி தனிற்கொண் டுய்த்தான்.

**இ-ள் :** *நோதக அரக்கர் செற்று* - வருந்தும்படி (இராவணன் முதலிய) இராக்கதர்களைச் சங்கரித்து; *நுண் இடை சீதை தன்னை ஆதரவு உடனே பெற்று* - நுண்மையாகிய இடையினையுடைய சீதாதேவியை அன்பினுடன் சிறைமீட்டு; *அங்கு அரசளித்து இருந்தான்* - அந்த அயோத்திநகரத்தில் இராச்சிய பரிபாலனஞ் செய்திருந்தார்; *மிக்க மா தவ பகீரதன் அந்நாளில் வருந்தி நோற்று* - மிகுந்த பெருந் தவத்தை யுடைய பகீரதராசன அக்காலத்தில் வருந்தியனுட்டித்து; *காதலின் கங்கை தன்னை காசினிதனில் கொண்டு உய்த்தான்* - ஆசையினாலே தேவகங்கையைப்பூமியிற் கொண்டுவந்து விட்டான் எ-று.

ஏ தான் என்பன அசைநிலைகள். அங்கென்பதீண்டயோத்தியை யுணர்த்தியது. நோற்று செற்று பெற்று அளித்து இருந்தான் என முற்செய்யுளும் இச்செய்யுளும் இசைந்துமுடிந்தன. 57

உய்க்கும்வேற் சிசுபா லன்றா
னுருக்குமணிப் பேர் மின்னைப்
புக்கெடுத் தேகு மெல்லைப்
புகுந்தியா னடுபோர் செய்தம்
மைக்குழற னையும் பெற்றேன்
மாமுகன் றனையர்ச் சித்தே
மிக்கநோன் பிதனை யார்க்கும்
விளம்பரி தென்று கூறி.

**இ-ள் :** *உய்க்கும் வேல் சிசுபாலன் புக்கு உருக்குமணி பேர் மின்னை எடுத்து ஏகும் எல்லை* - (பகைவர்மீது) செலுத்துகின்ற வேலா யுதத்தையுடைய சிசுபாலனென்பவன்வந்து உருக்குமணி யென்னும் பெயரையுடைய என்பெண்ணைக்கவர்ந்து செல்லும் பொழுது; *யான் மாமுகன்றனை அர்ச்சித்து* - யான் யானைமுகக் கடவுளைப் பூசித்து;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*புகுந்து அடு போர் செய்து* - போய்க் கொலைத் தொழில் பொருந்திய யுத்தத்தைச் செய்து; *அமைகுழல் தனையும் பெற்றேன்* - அந்தப் பெண்ணையும் மீட்டேன்; *மிக்க நோன்பு இதனை யார்க்கும் விளம்ப அரிது என்று கூறி* - மேலாகிய இந்தவிரதத்தின் பெருமையை எவராலாயினும் சொல்லி முடித்தல் அருமையாம் என்று சொல்லி எ-று.

இதுமுதல் இருசெய்யுள் ஒருதொடர். தான் ஏ அசைகள். மின் ஆகுபெயர். மைக்குழல் அன்மொழித்தொகை. மைக்குழறனையும் என்றதில் உம்மை எச்சம். 58

கூறுமிவ் விரதந் தன்னைக்
குறைவிலன் போடு நோற்றால்
மாறிலா மனத்தி லுற்ற
வண்ணமே முடியு மென்று
தேறுதே வகிதன் மைந்தன்
செப்பிய துணர்ந்தங் கன்னோர்
வீறுசேர் விரத நோற்று
மேவினர் விழைந்த பேறே.

**இ-ள் :** *கூறும் இ விரதம் தன்னை குறைவில் அன்போடு நோற்றால்* - சொல்லப்படுகின்ற இந்தச் சதுர்த்தி விரதத்தைக் குறை வில்லாத பத்தியுடனே அனுட்டித்தால்; *மாறு இலர் மனத்தில் உற்ற வண்ணமே முடியும் என்று* - விகாரமில்லாத மனத்தின்கண்ணே எண்ணியவாறே சித்தியாம் என்று; *தேறு தேவகி தன் மைந்தன் செப்பியது அன்னோர் உணர்ந்து* - மனந்தெளிந்த தேவகியின் புத்திரராகிய கிருஷ்ணமூர்த்தி சொல்லிய வார்த்தையை அந்தப் பாண்டவர்கள் கேட்டறிந்து; *வீறு சேர் விரதம் நோற்று விழைந்த பேறு மேவினர்* - பெருமைபொருந்திய இவ்விரதத்தையனுட்டித்து இட்ட சித்திகளைப் பெற்றார்கள் எ-று.

ஏகாரமிரண்டனுள் முன்னையது தேற்றம்: பின்னையது அசை நிலை. மாறிலாமனமாவது காமமுதலிய குற்றங்களில்லாத மனம். இலா என்பது கடைக்குறை. விழைந்தபேறெனச்சுட்டிய சித்திகளெவை யென்பதைப் பிற்செய்யுளாலுணர்க. 58

பேறில்கண் ணிலிகு மாரர்
பெரும்படைத் தளமும் வென்று
மாறிலந் நூறு மைந்தர்
வாழ்வையு மொழித்துப் பின்னர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுதா னீக்கி யந்தக்
குருநாடு முழுது மாண்டு
வீறுசேர் வைகுண் டத்து
மேவிவீற் றிருந்தா ரன்றே.

**இ-ள் :** *பேறு இல் கண்ணிலி குமாரர் பெரும் படைத்தளமும் வென்று* - (நெடுங்காலம் அரசியல்செய்தற்குரிய) புண்ணியப்பேறில்லாத திருதராட்டிரனது புதல்வராகிய துரியோதனாதியரது பெரிய சேனாவியூகங்களையும் வெற்றிகொண்டு; *மாறு இல் அ நூறு மைந்தர் வாழ்வையும் ஒழித்து* - ஒப்பில்லாத அந்த நூறு வீரர்களது வாழ்நாளையும் முடித்து; *பின்னர் கூறு நீக்கி அந்த குருநாடு முழுதும் ஆண்டு* - அதன்பின்பு (அந்த நூற்றுவர்க்குரிய) பாகங்களை நீக்கி அந்தக்குருதேசமெல்லாவற்றையும் அரசுசெய்து; *வீறு சேர் வைகுண்டத்து மேவி வீற்றிருந்தார்* - (முடிவில்) பெருமை பொருந்திய வைகுண்டலோகத்திற்போய் வீற்றிருந்தார்கள் எ-று.

தான் அன்று ஏ அசைநிலைகள் 60

அன்றியின் னமுமோர் காதை
யறைகுவ னசுரர் கோமான்
றன்றிருத் தனயை மாயை
தவநெறி நிற்குங் காசி
பன்றனைப் புணரச் சூரன்
பருத்தகாத் திரஞ்சேர் சிங்கன்
றுன்றுதோன் முகனென் றோது
துணைவரோ டுதித்து மாதோ.

**இ-ள் :** *அன்றி இன்னமும் ஓர் காதை அறைகுவன்* - முற்கூறிய சரித்திரங்களேயன்றி இன்னுமொரு சரித்திரத்தைச் சொல்வேன் (எவ்வாறெனில்); *அசுரர் கோமான் தன் திருதனயை மாயை* - அகரேந்திரனது சிறந்த புதல்வியாகிய மாயவள்; *தவநெறி நிற்கும் காசிபன்தனை புணர* - தவவழியில் நிலைபெற்றிருந்த காசிபமுனிவரை (மயக்கிச்) சேர; *சூரன்* - சூரபன்மனானவன்; *பருத்த காத்திரம் சேர் சிங்கன் துன்று தோல்முகன் என்று ஓது துணைவரோடு உதித்து* - பருத்த தேகத்தையுடைய சிங்கமுகாசுரனும் நெருங்கிய யானைமுகத்தையுடைய தாரகாசுரனும் என்று சொல்லப்படுகின்ற இந்தச் சகோதரரோடும் தோற்றி எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாது ஒ அசைகள்,இது முதலிருசெய்யுளொருதொடர். 61

மாதவ மியற்றிப் பெற்ற
மாவர மதனாற் றேவர்
நோதக வுறவ ருத்தி
நுவலருஞ் சுவர்க்கந் தீக்கப்
போதவ னாதி யான
புலவர்வெண் கயிலை மன்னு
நாதனை வணங்கிச் சூரா
னலிந்தன மருணீ யென்றார்.

**இ-ள் :** *மா தவம் இயற்றி பெற்ற மா வரம் அதனால்* - மகத்தாகிய தவத்தைச் செய்து பெற்ற பெரிய வரத்தினாலே; *தேவர் நோதகவு உற வருத்தி நுவலரும் சுவர்க்கம் தீக்க* - தேவர்கள் துயரத்தைக்கொள்ளும்படி வருத்திச் சொல்லுதற்கரிய (பெருமைவாய்ந்த) சுவர்க்கலோகத்தை எரிக்க; *போதவன் ஆதி ஆன புலவர் வெண் கயிலை மன்னும் நாதனை வணங்கி* - செந்தாமரைப் புஷ்பாசனராகிய பிரமா முதலாகிய தேவர்கள் (அத்துயரத்தைத் தீர்க்கவெண்ணி) வெள்ளிய கைலாசமலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானையடைந்து வணங்கி; *சூரால் நலிந்தனம் அருள் நீ என்றார்* - ஸ்வாமி! சூரபன்மனாலே நாங்கள் வருந்தினோம்; (அவ்வருத்தம் நீங்குமாறு) தேவரீர் அருள் செய்க என்று பிராத்தித்தார்கள் எ-று.

நுவல் முதனிலைத் தொழிற்பெயர். அருள் ஆய்விகுதி புணர்ந்து கெட்ட ஏவல்வினைமுற்று. 62

என்றலு மிறைவன் கேட்டே
யிரக்கமி லசுரர் மாள
வென்றுமைத் துறக்க மீது
விளங்கவைத் திடுமா றென்போ
லொன்றிய குமர வேளை
யுதவுது நீர்போ மென்னச்
சென்றன ரமர ரெல்லாந்
திருவுளச் செயலை யெண்ணி.

**இ-ள் :** *என்றலும்* - என்றிவ்வாறு சொல்லுதலும்; *இறைவன் கேட்டு* - சிவபிரான் கேட்டு; *இரக்கம் இல் அசுரர்மாள வென்று உமை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*துறக்கமீது விளங்க வைத்திடுமாறு* - தயை இல்லாத அவுணர்கள் இறக்கும்படி வெற்றிகொண்டு உங்களைச் சுவர்க்க லோகத்தில் (முன்போற்) சிறப்புப்பொருந்த வைக்கும்படி; *என்போல் ஒன்றிய குமரவேளை உதவுதும் நீர் போம் என்ன* - என்னைப்போல இறைமைக் குணங்களமைந்த குமாரசுவாமியைத் தோற்றுவிப்போம் நீர் (உமது இருப்பிடங்களுக்குச்) செல்லுங்களென்றருள்செய்ய; *அமரரெல்லாம் திருவுளச்செயலை எண்ணி சென்றனர்* - தேவர்களெல்லோரும் (அதனைக் கேட்டுச்) சிவபெருமானுடைய திருவுளச்செயலை நினைத்துக் கொண்டு போனார்கள் எ-று.

ஏ அசை. குமரவேள் இருபெயரொட்டுப்பண்புத்தொகை. விளங்க வைத்தலாவது அரசியல் முதலிய பழைய அதிகாரங்களில் நிறுத்தல். 63

எண்ணிய விமையோ ரொன்னா
ரிடுக்கணிற் சிலநாட் போக்கி
வண்ணமு தங்கித் தேவை
வருகவென் றழைத்து நீபோ
யண்ணற னிடத்தி லெங்கள
லக்கணோ தென்ன வன்னோன்
கண்ணுத லிடத்தே செல்லிற்
காயுமோ தெரியா தென்றான்.

**இ-ள் :** *எண்ணிய இமையோர்* - (முற்கூறியவாறு) நினைத்துப் போன தேவர்கள்; *ஒன்னார் இடுக்கணில் சில நாள் போக்கி* - பகைவராகிய அசுரர்களாற் செய்யப்பட்ட துன்பத்திலே சிலகாலத்தைக் கழித்து; *வண்ண முது அங்கிதன்னை வருக என்று அழைத்து* - அழகிய பழைய அக்கினிதேவனை வருவாயாக என்று அழைத்து; *நீ அண்ணல் தன் இடத்தில் போய் எங்கள் அலக்கண் ஒது என்ன* - நீ சிவபெருமானிடத்திற்போய் எங்கள் வருத்தத்தை முறையிடுவாயாக என்று வேண்ட; *அன்னோன்* - அவ்வக்கினிதேவன்; *கண்ணுதல் இடத்து செல்லின் காயுமோ தெரியாது என்றான்* - சிவபெருமானிடத்து யான் போனால் (ஒருபோது) கோபிப்பாரோ நான் அறியேன் என்று அச்சமொழி கூறினான் எ-று.

அண்ணல்-பெருமையிற் சிறந்தவர். ஏ அசை. ஓ ஐயப் பொருட்டு, நெற்றிக்கண் அக்கினிமயமாதலாலும் அவ்வக்கினி தன்னையுந்தகிக்கும் பேரழலாதலாலும் அச்சுறுதலின் ஈண்டுக் கண்ணுதல் என விசேடித்தார். 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிதரு மிமையோ ரெண்ணிச்
சிவனுத னயனத் தோங்கு
மெரியுநீ கரத்து நின்னை
யேந்தின னெரிநீ செல்கென்
றரியயற் கரியோன் றன்பா
லமரர்கள் விடுப்ப வேகிப்
பரிவுட னிறைவன் முன்புபணிந்து
விண் ணப்பஞ் செய்தான்.

**இ-ள் :** *தெரிதரும் இமையோர் எண்ணி* - அக்கினிதேவனுடைய வாக்கைக் கேட்டறிந்த தேவர்கள் சிந்தித்து; *சிவன் நுதல் நயனத்து ஓங்கும் எரியும் நீ* - சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலுள்ள மகிமையையுடைய அக்கினியும் நீயே; *கரத்தும் நின்னை ஏந்தினன்* - ஒரு திருக்கரத்திலும் உன்னைத் தாங்கினார் (ஆதலால்); *எரி நீ அரி அயற்கு அரியோன் தன்பால் செல்க என்று அமரர்கள் விடுப்ப* - அக்கினியே நீ விஷ்ணு பிரமா என்னும் இருவர்க்கும் (அடிமுடிகளைத் தேடியறிதற்கு) அரியவரான சிவபெருமானிடத்து (நங்குறையை விஞ்ஞாபித்தற்குப்) போவாயாக என்று தேற்றித் தேவர்கள் அனுப்ப; *இறைவன் முன்பு ஏகி பரிவுடன் பணிந்து விண்ணப்பஞ் செய்தான்* - அவன் சிவபெருமானது திருமுன்னிலையிற்போய் அன்பினுடன் நமஸ்கரித்துத் தேவர்கள்படுந் துயரத்தை விஞ்ஞாபனஞ்செய்தான் எ-று.

செல்க என்னும் வியங்கோள் ஈறுதொக்கது. 65

செய்தலு மிறைவ னெற்றி
செறிதரு விழி யினின்று
மெய்தரு பொறிக ளாறு
விரைவுட னல்கி யங்கி
கைதனிற் கொடுப்ப வன்னோன்
கருணையாற் றாங்கி நொந்து
மைதிக முருவங் கொண்ட
வாயுவின் கரத்தி லீந்தான்.

**இ-ள் :** *செய்தலும்* - அக்கினிதேவன் விஞ்ஞாபனஞ்செய்ய; *இறைவன் நெற்றி செறிதரு விழியில் நின்று மெய்தரு பொறிகள் ஆறு விரைவுடன் நல்கி* - சிவபெருமான் தமது நெற்றிக்கண்களினின்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்மை பொருந்திய ஆறு அக்கினிப் பொறிகளைச் சீக்கிரத்தில் உண்டாக்கி; *அங்கி கைதனில் கொடுப்ப* - அக்கினிதேவனது கையிற்கொடுக்க; *அன்னோன் கருணையால் தாங்கி நொந்து* - அவன் அச்சிவபெருமானது கிருபையினாற் சுமந்து ஆற்றாது வருந்தி; *மை திகழ் உருவம் கொண்ட வாயுவின் கரத்தில் ஈந்தான்* - கருநிறம் பொருந்திய சரீரத்தையுடைய வாயுதேவனது கையிற்கொடுத்தான் எ-று.

சிவபெருமான் ஆறு திருமுகங்கள் பொருந்திய வடிவத்தைக் கொண்டு அம்முகங்கடோறுமுள்ள ஒவ்வோர் நெற்றிக்கண்களினின்றும் ஒவ்வோர் பொறியாக ஆறுபொறிகளையுண்டாக்கி, அவற்றைக் கங்கையிலிடும்படி அக்கினிதேவனிடங்கொடுக்க, அக்கினிதேவனேற்றுச் சிறிது நேரஞ்சுமந்து பின்னர்த் தன்றோழனாகிய வாயுதேவனிடங் கொடுத்தானென்க. இதன் விரிவைக் கந்தபுராணத்துத் திருவவதாரத்துப் படலத்தாலுணர்க சிவனருளில்வழிச் சிறிதுபோதுஞ் சுமத்தலரிதாதலிற் கருணையாற்றாங்கி என்றார். 66

ஈந்தவப் பொழுதிற் கங்கை
யிடைவளி வைப்பக் கங்கை
போந்துநற் சரவ ணத்தி
லுய்த்தனள் பொறிக ளாறும்
வாய்ந்தவா னனமா றுள்ள
மதலையே யாக வாங்கு
நேர்ந்திடு மாரன் மாதர்
நிகழ்முலை யூட்டப் பின்னர்.

**இ-ள்:** *ஈந்த அ பொழுதில் வளி கங்கையிடை வைப்ப* - (அக்கினி தேவன் தன்னிடத்துத்) தந்த அப்பொழுதே வாயுதேவன் (கொண்டு சென்று கங்கைநதியில் இட; *கங்கை போந்துநல் சரவணத்தில் உய்த்தனள்* - கங்காதேவி அவற்றைக்கொண்டுசென்று நல்ல சரவண தடாகத்திற் சேர்த்தாள்; *பொறிகள் ஆறும் வாய்ந்த ஆனனம் ஆறு உள்ள மதலை ஆக* - (அதன்மேல்) அந்த ஆறு அக்கினிப்பொறிகளும் சிறந்த ஆறுமுகமுள்ள புத்திரராக; ஆங்கு நேர்ந்திடும் ஆரல் மாதர் நிகழ் முலை ஊட்ட - அவ்விடத்து (தேவரேவலால்) வந்த கார்த்திகைப்பெண்களறுவரும் விளங்குகின்ற முலைகளினின்றுஞ் சிந்தியபாலை ஊட்டிவளர்க்க; *பின்னர்* - வளர்ந்த பின்பு எ-று.

ஏ அசைநிலை. இதுமுதனான்குசெய்யுளொருதொடர். 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னலஞ் சடைப்பி ரானும்
பிறைநுத லுமையோ டேகி
யன்னபுத் திரனைக் கண்டே
யார்வமாய்க் கரத்தி லேந்திச்
சின்னமெல் லிடையா டானுந்
திருமுலை யமுத மூட்ட
வுன்னரு முருகன் கையி
லொப்பிலா யுதங்க ணல்கி.

**இ-ள் :** *பின்னல் அம் சடை பிரானும் பிறை நுதல் உமையோடு ஏகி* - முறுகிய அழகிய சடைமுடியையுடைய சிவபெருமானும் பானாட் சந்திரனைப்போன்ற நெற்றியினையுடைய உமாதேவியுடனே (அந்தச் சரவணதடாகத்திற்) போய்; *அன்ன புத்திரனைக்கண்டு ஆர்வம் ஆய் கரத்தில் ஏந்தி* - அந்தக் குமாரரைப் பார்த்து ஆசையுற்றுக் கையில் (எடுத்துத்) தாங்கி; *சின்ன மெல் இடையாள் தானும் திருமுலை அமுதம் ஊட்ட:* சின்னமையான மெல்லிய இடையையுடைய உமாதேவியும் தமது திருமுலைப்பாலை ஊட்ட, *உன்ன அரும் முருகன் கையில் ஒப்பு இல் ஆயுதங்கள் நல்கி* - சிவபெருமான் நினைத்தற்கரிய அந்தக் குமாரக்கடவுளது திருக்கரத்தில் ஒப்பில்லாத ஆயுதங்களைக் கொடுத்து எ-று.

உம்மைகளிரண்டும் எச்சங்கள். சின்னமெல்லிடையாடானுந் திரு முலையமுதமூட்ட என்பதை இடைப்பிறவரலாகக்கொண்டு தொடர்த்துக. ஆயுதம் என்றீண்டுச்சுட்டியது பதினொருபடைக் கலங்களை. இதனை ''பொன்றிகழ்சடிலத்தண்ணறன்பெயரும் பொரு விலாவுருவமுந் தொன்னா, ணன்றுபெற்றுடையவுருத்திர கணத்தோர் நவிலருந்தோமரங் கொடிவாள், வன்றிறற்குலிசம்ப கழியங்குசமுமணி மலர்ப்பங்கயந் தண்டம், வென்றிவின்மழுவு மாகிவீற்றிருந்தார்விறன் மிகுமறுமுகன் கரத்தில்'' என்னுஞ் செய்யுளாலுணர்க. 68

நல்கியோர் வேலு மீந்து
நவமணித் தேருந் தந்து
மல்கிய களிப்பி னீபோய்
மறம்பயி லசுரர் மாள
வெல்கெனப் பரமன் சொல்லி
விடைகொடுத் தனுப்ப வேலோன்
பல்கிய தேரி னேறிப்
பதாதியோ டெழுந்து போகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *பரமன்* - சிவபெருமான்; *நல்கி* - ஆயுதங்களைக் கொடுத்து; *ஒர் வேலும் ஈந்து* - ஒரு வேலாயுதத்தையுங் கொடுத்து; *நவ மணி தேரும் தந்து* - நவரத்தினமழுத்திய மனோவேகப் பொற்றேரையுங் கொடுத்து; *நீ மல்கிய களிப்பின் போய் மறம் பயில் அசுரர் மாள வெல்க என சொல்லி* - (குமாரனே) நீ நிறைந்த சந்தோஷத்தோடுபோய்க் கொடுந்தொழிலைப் பயிலுகின்ற அவுணர்களிறக்கும்படி பொருது வெற்றி பெறுவாயாக என்று திருவாய்மலர்ந்தருளி; *விடை கொடுத்து அனுப்ப* - அனுமதி கொடுத்து அனுப்ப; *வேலோன் பல்கியதேரின் ஏறி பதாதியோடு எழுந்து* - வேலாயுதத்தையேந்திய சுப்பிரமணியப்பெருமான் பரந்த (தமது) மனோவேகப்பொற்றேரிலேறிக் காலாட்சேனையாகி பூதர் களுடன் புறப்பட்டு எ-று.

வெல்க என்பதனீறுதொக்கது. போகி என்பதைப் பிற்சேய்யுளோடு சேர்த்துப் பொருளெழுதப்பட்டது. 69

போகிதன் றலையிற் றாங்கும்
புவிதனி லசுரர் கங்கு
லாகிவந் தெதிர்த்த போதி
லறுமுகன் பரிதி போல்வ
தோகையி லவுணர் தம்மை
யொழித்த சுரேசன் மார்பில்
வாகைவேல் விடுத்து வென்றான்
மலர்மழை வானோர் தூவ.

**இ-ள் :** *போகி தன் தலையில் தாங்கும் புவிதனில் போகி* - ஆதிசேடன் தனது தலையாற்றாங்குகின்ற பூவுலகத்திற் போய்; *அசுரர் கங்குல் ஆகி வந்து எதிர்த்த போதில்* - அவுணர்கள் இருளைப்போல வந்து எதிர்த்த சமயத்தில்; *அறுமுகன் பரிதிபோல் வந்து ஓகை இல் அவுணர் தம்மை ஒழித்து* - ஆறு திருமுகங்களையுடைய சுப்பிரமணியக் கடவுள் சூரியனைப்போலத் தோற்றி மகிழ்ச்சியில்லாத அசுரர்களைச் சங்கரித்து; *வானோர் மலர் மழை தூவ அசுரேசன் மார்பில் வாகை வேல் விடுத்து வென்றான்* - தேவர்கள் புஷ்பமாரியைப்பொழிய அசுரராச னாகிய சூரபன்மனது மார்பில் வெற்றிபொருந்திய வேலாயுதத்தைச் செலுத்திச் சங்கரித்து வெற்றிகொண்டார் எ-று.

அவுணர்க்குக் கருநிறமும், சுப்பிரமணியப் பெருமானுக்குச் செந்நிறமும் உண்மையானும், நூற்றெட்டு யுகம்வரையும் குறைவற வளர்ந்த அசுரரது பெருமை இப்பெருமானைக் கண்டமாத்திரத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுதலானும் அவுணர்க்கு இருளையும் பெருமானுக்குச் சூரியனையும் உவமித்தார். தேவர்க்குச்செய்த இடுக்கணால் ஒருங்கே அழிதலின் ஒகையில் என்றார். 70

தூவலோ டமரர் வாழ்த்தச்
சுரர்பதி தனக்கு மோலி
மேவவே சூட்டி விண்ணோர்
வேந்தனாய்த் துறக்க மாளச்
சேவலங் கொடியோன் றானுந்
திருவருள் செய்து பின்னர்த்
தேவகுஞ் சரியை முன்னந்
திருப்பரங் குன்றில் வேட்டே.

**இ-ள் :** *அமரர் தூவலோடு வாழ்த்த* - தேவர்கள் புஷ்பாஞ்சலி யுடனே வாழ்த்தொலிசெய்ய; *சேவலம் கொடியோன தானும் சுரர்பதி தனக்கு மேவ மோலி சூட்டி* - கோழிக்கொடியையுடைய கந்தஸ்வாமியும் தேவேந்திரனுக்குப் பொருந்துமாறு முடிசூட்டி; *விண்ணோர் வேந்தன் ஆய் துறக்கம் ஆள் திருவருள்செய்து* - தேவராசனாச் சுவர்க்க லோகத்தைப் பரிபாலனஞ்செய்யும்படி கருணைசெய்து; *பின்னர்* - அதன் பின்பு; *தேவகுஞ்சரியை முன்னம் திருப்பரங்குன்றில் வேட்டு* - தெய்வ யானையம்மையை முதலில் திருப்பரங்குன்றிலே விவாகஞ் செய்து எ-று.

இது முதலிருசெய்யுளொருதொடர். உம்மை இறந்தது தழீஇயது. ஏகாரங்கள் அசைநிலைகள். 71.

வேட்டன னமர ரூரில்
மேவுபூங் கோயி லெய்தித்
தாட்டுணை பிரியா வீரர்
தன்பெருங் கோயில் காப்ப
வாட்டமி லருளோ டங்கு
மருவுநா ளவனைவெஃகிக்
கோட்டமுற் றமரர் மாதர்
குறைவில்கற் பொருவ லானார்.

**இ-ள் :** *வேட்டனன்* - விவாகஞ்செய்து; *அமரர் ஊரில் மேவு பூங்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோயில் எய்தி* - சுவர்க்கலோகத்திற் பொருந்திய பொலிவார்ந்த ஆலயத்தை அடைந்து; *தாள் துணை பிரியா வீரர் தன் பெரும் கோயில் காப்ப* - இரண்டு பாதங்களையும் நீங்காத (பேரன்பினையுடைய) வீர வாகு முதலிய இலக்கத்தொன்பது வீரர்கள் தமது பெருமைபொருந்திய திருக்கோயிலைக் காவல்செய்ய; *வாட்டம் இல் அருளோடு அங்கு மருவும் நாள்* - சோர்வில்லாத கிருபையோடு அத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் நாட்களிலே; *அமரர் மாதர் அவனை வெஃகி கோட்டம் உற்று* - தேவப்பெண்கள் அப்பெருமானை விரும்பி மன விகாரம் பொருந்தி; *குறைவு இல் கற்பு ஒருவல் ஆனார்* - குறைவில்லாத கற்பு நீங்கப்பெற்றார் எ-று. 72

ஒருவிய நாளி லும்ப
ருமாபதி தன்னை யெய்தித்
திருவடி தொழுது மாதர்
செய்தியிப் படியென் றோதக்
கருதரு சிவனு ளத்திற்
கறுத்திட வேளு ணர்ந்தாங்
கொருவியே தேசம் போக
வுமையுணர்ந் தலக்க ணுற்றாள்.

**இ-ள் :** *ஒருவிய நாளில் உம்பர் உமாபதி தன்னை எய்தி* - கற்பு நீங்கிய அந்நாளில் தேவர்கள் உமாதேவிக்குத் தலைவராகிய சிவபெருமானை அடைந்து; *திருவடி தொழுது மாதர் செய்தி இப்படி என்று ஓத* - அவரது திருப்பாதங்களை வணங்கித் தம்பெண்களது செயல் இவ்வாறென்று சொல்ல; *கருத அருஞ்சிவன் உளத்தில் கறுத்திட* - தியானித்தற்கரிய சிவபெருமான் தம்மனத்திற்கோபிக்க; *வேள் உணர்ந்து ஆங்கு ஒருவி தேசம் போக* - சுப்பிரமணியப் பெருமான் அதனையறிந்து அவ்விடத்தை விட்டு வேறுதேசத்திற் போயுலாவ; *உமை உணர்ந்து அலக்கண் உற்றாள்* - உமாதேவி அதயைறிந்து துயரமுற்றாள் ஏ-று:

ஏ அசை. 73

உற்றவ டுயரங் கண்டே
யுயர்பெருங் கயிலை வாழுஞ்
சிற்பரன் றேவி நெஞ்சந்
தேற்றுவா னெண்ணித் தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்புத மலிசூ தென்னோ
டாடநீ வருக வென்னாச்
சற்பமேற் றுயில்வான் றன்னைச்
சான்றென விருத்தி மன்னோ:

***இ-ள் :*** *உயர்பெரும் கயிலை வாழும் சிற்பரன்* - உயர்ந்த பெரிய திருக்கைலாசமலையில் வாழுகின்ற ஞானமயராகிய சிவபெருமான்; *உற்றவள் துயரம் கண்டு* - தமது வாமபாகத்திலிருக்கின்ற உமாதேவி படும்துன்பத்தைப் பார்த்து; *தேவி நெஞ்சம் தேற்றுவான் எண்ணி* - தன்னை மனைவியின் மனத்தைத் தேற்றும்படி நினைந்து; *தேவி நீ* - நாயகியே! நீ; *என்னோடு அற்புதம் மலி சூது ஆட வருக என்னா* - என்னுடன் அதிசய மிகுந்த சூதை ஆடுதற்கு வருவாயாக என்று கூறி; *சர்ப்பம் மேல் துயில்வான் தன்னை சான்று என இருத்தி* - அனந்தசயனத்தினமேலறிதுயில் செய்கின்ற விஷ்ணுமூர்த்தியை அதற்குச் சாட்சியாக இருக்கச்செய்து எ-று.

இது முதலிருசெய்யுளொருதொடர். தேற்றுவான் வினையெச்சம். ஏ மன் ஒ அசைகள். கற்பம் அடிநோக்கிவந்த விகாரம். 74

மன்னுசூ தாடல் வென்ற
மாதுநான் வென்றே னென்ன
வன்னவா றரனு மோத
வம்மையங் கரியை நோக்கி
யின்னது நீசொல் லென்ன
வெம்பிரான் வென்ற தென்றான்
பின்னைமுன் னவனைக் கண்ணில்
பெரும்பணி யாதி யென்றாள்.

***இ-ள் :*** *மன்னு சூதாடல் வென்ற மாது நான் வென்றேன் என்ன* - நிலைபெற்ற சூதாட்டத்தில் வெற்றிகொண்ட உமாதேவி நான் வென்றேனென்றுகூற; *அரனும் அன்னவாறு கை* - சிவபெருமானும் அவ்வாறே (நான் வென்றேனென்று) சொல்ல; *அம்மை அங்க அரியை நோக்கி நீ இன்னது சொல் என்ன* - உமாதேவி அப்போது சாட்சி யாயிருந்த விஷ்ணுமூர்த்தியைப்பார்த்து நீர் இதன் உண்மையைச் சொல்வீராக என்று கூற; *எம் பிரான் வென்றது என்றான்* - (விஷ்ணு மூர்த்தி) சிவபெருமானே வெற்றிகொண்டது என்று பொய்கூறினார்; *பின்னை முன்னவனை கண் இல் பெரும் பணி ஆகி எஎன்றாள்* - அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் உமாதேவி தமையனாகிய விஷ்ணுமூர்த்தியைக் கண்ணில்லாத பெரிய சர்ப்பமாகுக என்று சபித்தார் எ-று.

பின்னை என்பதற்குத் தங்கையெனினுமியையும். 75

என்றபோ தரனைப் போற்றி
யிறைஞ்சலு மிரங்கல் யானைக்
கன்றையா லடியிற் சென்று
கருதினின் கவலை யெல்லாம்
பொன்றிடுஞ் சாப நீங்கிப்
போமென விழியில் பாம்பாய்ச்
சென்றனன் கரிய மாயன்
சிவசுதன் பதத்தை நாடி.

**இ-ள்:** *என்றபோது அரனை போற்றி இறைஞ்சலும்* - (உமா தேவியார்) இவ்வாறு சபித்தபோது (விஷ்ணுமூர்த்தி) சிவபெருமானைத் துதித்து வணங்குதலும்; *இரங்கல்* - (சிவபெருமான் விஷ்ணுமூர்த்தியை நோக்கி) நீ துயரங்கொள்ளற்க; *ஆல் அடியில் சென்று ஆனைக்கன்றை கருதின் நின் கவலை எல்லாம் பொன்றிடும்* - ஆலமரத்தின் கீழ்ப்போய் யானைமுகத்தையுடைய விநாயகப்பெருமானைச் சிந்திப்பாயாயின் உனது கவலையெல்லாம் ஒழியும்; *சாபம் நீங்கி போம் என* - உனக்கு நேர்ந்த சாபமும் நீங்கிவிடுமென்று கூறியருள; *கரிய மாயன் விழி இல் பாம்பாய் சிவசுதன் பதத்தை நாடி சென்றனன்* - கருநிறத்தையுடைய விஷ்ணுமூர்த்தி குருட்டுப்பாம்பாகச் சிவகுமாரராகிய விநாயகக் கடவுளிருக்குமிடத்தைத் தேடிப்போயினர் எ-று.

சாபமுமென எச்சவும்மை வருவித்துரைக்கப்பட்டது. 76

நாடியூர்ந் தடைந்த நாளி
னம்பிரா னோன்பி னன்மை
சேடன்றாங் கவனி யோர்க்குத்
தெரிவிப்போ மென்று விண்ணிற்
கூடிய வேழு மாதர்
குவலயத்தி றங்கித் திங்கள்
சூடியா லடியில் வைத்த
தும்பிமா முகனைப் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *நாடி ஊர்ந்து அடைந்த நாளில்* - (விநாயகக் கடவுளை)த் தேடி ஊர்ந்து சென்றிருந்த நாட்களிலே; *நம்பிரான் நோன்பின் நன்மை சேடன் தாங்கு அவனியோர்க்கு தெரிவிப்போமென்று* - எம்பெருமானாகிய விநாயகக் கடவுளது விரதத்தினாலுண்டாகும் நன்மையை ஆதிசேடனாற்றாங்கப்படுகின்ற பூமியிலுள்ள மனிதர்க்கு அறிவிப்போமென்று எண்ணி; *விண்ணில் கூடிய ஏழு மாதர் குவலயத்து இறங்கி* - ஆகாயவுலகத்திற் கூடியிருந்தசப்தமாதர்கள் பூவுலகத்திலிறங்கி வந்து; *திங்கள் சூடி ஆல் அடியில் வைத்த தும்பிமாமுகனை போற்றி* - சந்திரசேகரராகிய சிவபெருமான் ஆலமரத்தின்கீழே தாபித்த பெருமைபொருந்திய யானைமுகக்கடவுளைத் துதித்து எ-று.

இது முதலெட்டுச்செய்யுளொருதொடர். சத்தமாதராவார்: பிராமி மாகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வாராகி மாகேந்திரி சாமுண்டி என்பவர்களாம். 77

போற்றியே யன்பு பூண்டு
பொருந்துகார்த் திகையிற் றீப
மேற்றுகார்த் திகையிற் பின்னா
ளியன்றநற் றீர்த்த மாடி
நீற்றனுட் டானம் பண்ணி
நிறைமணி தரித்துக் கோயின்
மேற்றல மென்ன வாங்கு
வியப்புட னமைத்துப் பின்னர்.

**இ-ள் :** *போற்றி அன்பு பூண்டு* - துதித்து அன்புவைத்து, *பொருந்து கார்த்திகையில் தீபம் ஏற்று கார்த்திகையின் பின்னாள்* - இயைந்த கார்த்திகை மாதத்தில் விளக்கீட்டிற்குரிய திருக்கார்த்திகையின் மறு நாளில்; *இயன்ற நல் தீர்த்தம் ஆடி* - தகுந்த புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நாநஞ்செய்து; *நீற்று அனுட்டானம் பண்ணி நிறை மணி தரித்து* - விபூதி தாரணத்துடன் அனுட்டானங்களைச்செய்து நிறைந்த உருத்திராக்கமணியை (விதிப்படி) தரித்து; *ஆங்கு மேற்றலம் என்ன கோயில் வியப்புடன் அமைத்து பின்னர்* - அவ்விடத்தில் சுவர்க்கலோக மிதுவென்று கண்டோர் சொல்லுமாறு அப்பெருமானுடையகோயிலை மகிமையுடன் அமைத்து அதன்பின்பு எ-று.

ஏ அசை. தீபமேற்று கார்த்திகையென்றது பூரணையுடன் கூடிய கார்த்திகையை, கார்த்திகை பிரிந்துவரின், தீபமேற்றுந்தினம் பூரணையாமென்க. 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னருங் கலைமேற் கட்டிப்
பெருகுதோ ரணஞ் சமைத்துக்
கன்னலுங் கமுகு மிக்க
கதலியு நிரையா நாட்டி
யின்னது குறையென் றெண்ணா
விலகுமப் பந்தர் தன்னின்
முன்னவ னாகுந் தந்தி
முகவனை வணக்கஞ் செய்து.

**இ-ள் :** *பின்னு அரும் கலை மேல் கட்டி* - இழைக்கப்பட்ட அரிய வஸ்திரங்களை மேலே விதானமாகக்கட்டி; *பெருகுதோரணம் சமைத்து* - மிகுந்ததோரணங்களையமைத்து; *கன்னலும் கமுகும் மிக்க கதலியும் நிறையா நாட்டி* - கரும்பும் கமுகும் மிகுந்த வாழையும் என்னுமிவற்றை நிரையாகநிறுத்தி; *இன்னது குறை என்று எண்ணா இலகும் அ பந்தர் தன்னில்* - இது இதிலுள்ளகுறையென்று மதிக்கப் படாமல் (எல்லா மமைந்து) விளங்குகின்ற அந்தப்பந்தரின்கண்ணே; *முன்னவன் ஆகும் தந்தி முகவனை வணக்கஞ்செய்து* - முதல்வராகிய யானைமுகக் கடவுளை நமஸ்கரித்து எ-று.

எண்ணா என்பதீண்டுடுப்படுவிகுதிதொக்குவந்தது. முன்னவன் என்பதற்கு முதலிற்பூசிக்கப்படுபவர் எனினுமாம். 79.

செய்துநூன் முறைவ ழாமற்
றெரிந்துநூ லெழுமூன் றெண்ணி
கைதனிற் காப்புக் கட்டிக்
கணபதிப் பொருளை நல்ல
நெய்தயிர் பாலொ டெண்ணெய்
நிறைகரும் பிளநீ ராட்டி
மெய்துடைத் தாடை சாத்தி
வெயின்மணி ப்பணிகள் பூட்டி.

**இ-ள் :** *நூல்முறை வழாமல் தெரிந்து எழுமூன்று நூல் எண்ணி செய்து* - சாஸ்திரவிதிதவறாமல் ஆராய்ந்து இருபத்தோரிழைஎண்ணி முறுக்கி; *கை தனில் காப்புகட்டி* - கையில் அக்காப்பைக்கட்டி; *கணபதி பொருளை நல்லநெய் தயிர் பாலொடு எண்ணெய்நிறை கரும்பு இளநீர் ஆட்டி* - விநாயகமூர்த்தியாகிய பரம்பொருளை நன்மையினையுடைய நெய்யும் தயிரும் பாலும் எண்ணெயும் நிறைந்த கருப்பஞ்சாறும் இளநீரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிய இவற்றால் அபிடேகித்து; *மெய் துடைத்து ஆடைசாத்தி* - திரு மேனியிலுள்ள ஈரத்தைத்துவட்டி வஸ்திரஞ்சாத்தி; *வெயில் மணி பணிகள் பூட்டி* - ஒளிபொருந்திய ரத்னாபரணங்களை யணிந்து எ-று. 80

பூட்டிநற் றிலத மிட்டுப்
புதுமல ரனைத்துந் தூவி
யூட்டிநற் சுவைய னைத்து
முவகையிற் றூப தீபங்
காட்டிநா லைந்து நாளுங்
கருமமிப் படியே முற்றி
நாட்டிய விருபத் தோரா
நாளினில் வடிவ தாக.

***இ-ள் :*** *பூட்டி நல் திலதம் இட்டு புது மலர் அனைத்தும் தூவி* - (ஆபரணங்களைத்) தரித்து நல்ல பொட்டிட்டுப் புதிதாகிய புஷ்பங்க ளெல்லாவற்றையுஞ்சாத்தி; *நல் சுவை அனைத்தும் ஊட்டி* - நல்ல அறுசுவைப் பதார்த்தங்களெல்லாவற்றையும் நிவேதித்து; *உவகையில் தூப தீபம் காட்டி* - மகிழ்ச்சியுடனே தூபதீபாராதனைசெய்து; *நாலைந்து நாளும் கருமம் இப்படியே முற்றி* - விரதாரம்பதினமுதல் இரு பதுநாளும் கிரியைகளை இவ்வாறே முடித்து; *நாட்டிய இருபத்தோராம் நாளினில் வடிவது ஆக* - முன்னே விரததினத்துக்கு விசேடதினமாக நிலைப் படுத்திய இருபத்தோராநாளில் அழகுபொருந்த எ-று.

சுவை ஆகுபெயர், ஏ தேற்றம். அதுபகுதிப்பொருள்விகுதி. 81

வடிவுறு மதியம் விண்ணில்
வளர்ந்தெழு மாறாம் பக்கத்
துடனுறு சதய நாள்வந்
தொன்றிய காலை வேழப்
பிடிநடை யுமையாள் பெற்ற
பிள்ளையார் பிறந்த நாளென்
றடைவுறு நாலைந் நான்கி
லற்றைநா ளதிக மென்றே.

***இ-ள் :*** *வடிவு உறு மதியம் விண்ணில் வளர்ந்து எழும் ஆறாம் பக்கத்துடன் உறு சதய நாள் வந்து ஒன்றியகாலை* - அழகுபொருந்திய சந்திரன் ஆகாயத்திற் கலைவளர்ந்துதிக்கின்ற (பூர்வபக்ஷ) சட்டியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்திக்கின்ற சதயநக்ஷத்திரம் வந்து பொருந்தியகாலமானது; *வேழ பிடி நடை உமையாள் பெற்ற பிள்ளையார் பிறந்த நாள் என்று* - பிடியானைபோன்ற மென்னடையினையுடைய உமாதேவிபெற்ற குமாரராகிய விநாயகக்கடவுள் பிறந்ததினமென்றும்; *அடைவு உறு நாள் ஐந்நான்கில் அற்றை நாள் அதிகம் என்று* - முறைமைபொருந்திய இருபதுநாட்களிலும் அந்தத்தினம் விசேடமென்றும் எ-று.

ஏ அசை. 82

அதிகமாய்ப் பந்தர் பின்னு
மலங்கரித் தபிடே கங்கள்
விதிமுறை யெண்ம டங்கு
வியந்தினி தியற்றி வாச
முதிரகில் சந்த னாதி
முருகவிழ் மாலை சாத்திப்
புதியசெங் கமலங் கோங்கு
புன்னைசம் பகமென் காவி.

**இ-ள் :** *பந்தர் பின்னும் அதிகமாய் அலங்கரித்து* - பந்தலைப் பின்னரும் விசேடமாகச்சிறப்பித்து; *வியந்து விதிமுறை எண்மடங்கு அபிடேகங்கள் இனிது இயற்றி* - புகழ்ந்து விதிப்படியே முற்றினங்களினின்று எண்மடங்கான அபிடேகங்களை நன்றாகச்செய்து; *வாசம் முதிர் அகில் சந்தனாதி முருக அவிழ் மாலை சாத்தி* - சுகந்தமிகுந்த அகில் சந்தனம் முதலிய லேபனவஸ்துக்களையும் வாசனைவிரிந்த புஷ்பமாலையையும் சாத்தி; *புதியசெம் கமலம் கோங்கு புன்னை சம்பகம் மெல்காவி* - புதிதாகிய செந்தாமரைப்புஷ்பமும் கோங்கப்புஷ்பமும் புன்னைப்புஷ்பமும் சம்பகப்புஷ்பமும் மென்மையாகிய குவளைப் புஷ்பமும் எ-று. 83

காவிடை மலர்ந்த பூவின்
கணமெலாங் கொண்ட ருச்சித்
தோவறு மினிமை யான
வுணவெலா மருத்தித் தூபந்
தீவிகை யாதி யேந்தித்
தெண்டனிட் டெழுந்து போற்றி
மாவிர தமுமே முற்றி
மனத்திலெண் ணியதும் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *கா இடை மலர்ந்த பூவின் கணம் எலாம் கொண்டு அருச்சித்து* - நந்தன வனங்களிலேயலர்ந்த பிற புஷ்பக்கூட்டங்களும் ஆகிய இவற்றையெல்லாங் கைக்கொண்டு பூசித்து; *ஒ அறும் இனிமை ஆன உணவு எலாம் அருத்தி* - ஒழிவற்ற மாதுரியம்பொருந்திய உணவுகளெல்லாவற்றையும் நிவேதித்து; *தூபம் தீவிகை ஆதி ஏந்தி* - தூபம் தீபம் முதலியவற்றைத் தாங்கி (ஆராதித்து); *தண்டனிட்டு எழுந்து போற்றி* - நமஸ்கரித்து எழுந்து துதித்து; *மாவிரதமும் முற்றி மனத்தில் எண்ணியதும் பெற்றார்* - பெருமை பொருந்திய விரதத்தையும் நிறைவேற்றி மனத்தில் நினைத்த சித்திகளையும் பெற்றார்கள் எ-று.

எல்லாம் இடைக்குறை. ஏ அசை. எல்லாமென்ற தீண்டுத் தேவர்க்குரிய புஷ்பங்களுள் துளசியொழிந்தவற்றை. தண்டனிடுதல் - தண்டாகிருதியாய் அசைவறவணங்குதல். 84

பெற்றமங் கையரைப் பாம்பின்
 பேருரு வெடுத்த மாயன்
சிற்றிடை மடவீ ரிந்தச்
 சிறுமைதீர்த் தகலு மென்ன
மற்றவ ரவனுக் கிந்த
 மதகரி முகவ னோன்புக்
குற்றது முழுது மன்போ
 டுதவியாங் கவனைக் கொண்டே.

**இ-ள் :** *பாம்பின் பேர் உரு எடுத்த மாயன்* - பெரிய சர்ப்பத்தினது வடிவத்தைக்கொண்ட விஷ்ணுமூர்த்தியானவர்; *பெற்ற மங்கையரை சிறு இடை மடவீர் இந்த சிறுமை தீர்த்து அகலும் என்ன* - சித்திபெற்ற சப்தமாதர்களைநோக்கி நுண்மையான இடையினையுடைய பெண்காள்! நீவிர் எனக்கு நேர்ந்த இந்தப்புன்மையைநீக்கிச் செல்லுங்களென்றுகூற; *அவர் இந்த மத கரி முகவன் நோன்புக்கு உற்றது முழுதும் அன்போடு அவனுக்கு உதவி* - அந்தச் சப்தமாதர்கள் இந்த யானைமுகக் கடவுளது விரதத்திற்கு வேண்டிய உபகரணங்களெல்லாவற்றையும் அன்புடனே அந்த விஷ்ணுவுக்குக்கொடுத்து; *அவனைக்கொண்டு* - அந்த விஷ்ணுவைக்கொண்டு எ-று.

இது முதலைந்து செய்யுளொருதொடர். மற்று ஆங்கு ஏ அசைநிலைகள். சத்தமாதர்கள் விநாயகசட்டிவிரதமனுட்டித்ததையுஞ் சித்திபெற்றதையுங்கண்டமையானே விஷ்ணுமூர்த்தி அவர்களைவினாவினரென்க. 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டநோன் பியற்று வித்துக்
கோதைய ரேழு பேரும்
விண்டனி லடைந்தா ரிப்பால்
விடப்பணி யுருவ மாறி
மண்டல மளந்தோ னத்தி
மாமுகன ருள்பெற் றால
கண்டனை யடைந்து நெஞ்சிற்
களிப்புடன் பணிந்த வேலை.

**இ-ள் :** *கோதையர் ஏழுபேரும் கொண்ட நோன்பு இயற்றுவித்து விண்தனில் அடைந்தார்* - சப்தமாதர்களும் தாங்கைக்கொண்ட விரதத்தை அனுட்டிப்பித்துத் தம் இருப்பிடமாகிய ஆகாயவுலகத்திற் போயினார்; *இப்பால்* - இதன் மேல்; *மண் தலம் அளந்தோன் அத்தி மா முகன் அருள் பெற்று விடபணி உருவம் மாறி* - பூமியை ஓரடியானளந்த விஷ்ணு மூர்த்தி பெரிய யானைமுகக்கடவுளது கிருபையைப்பெற்று நஞ்சைக்காலுகின்ற சர்ப்பத்தின் வடிவம் நீங்கப்பெற்று; *ஆலகண்டனை அடைந்து நெஞ்சில் களிப்புடன் பணிந்த வேலை* - நஞ்சார்ந்த கண்டத்தையுடைய சிவபெருமானைச்சமீபித்து மன மகிழ்ச்சியுடனே வணங்கியபொழுது எ-று.

முற்செய்யுளிலுள்ள அவனைக்கொண்டு என்பது இச்செய்யுளில் இயற்றுவித்து என்பதனோடியைந்தது. விஷ்ணுமூர்த்தி பூவுலகத்தை ஓரடியானளந்ததை "நண்ணுபொற்றுகளெழுநாகர்நாட்டொடு மண்ணகம் பொதிந்ததோர்பதமற்றோர்பதம்விண்ணகங்கடந்து போய்விரிஞ்சனாடுறீஇ யொண்ணிறவண்டமு முடையநீண்டதே" என்னுஞ் செய்யுளா லுணர்க. 86

வேலினைப் பழித்த கண்ணி
மேகவண் ணற்(கி)யா னிட்ட
மாலுடைச் சாபந் தன்னை
வள்ளலே தவிர்த்த தென்றோர்
கோலமண் டபம்பு குந்து
குருமணிக் கதவு சாத்தி
வாலசுந் தரியி ருப்ப
மாயனைப் பரமன் பார்த்து.

**இ-ள் :** *வேலினை பழித்த கண்ணி வாலசுந்தரி* - வேற்படையை வென்ற கண்ணையுடைய உமாதேவி; *மேக வண்ணற்கு யான் இட்ட*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மால் உடை சாபம் தன்னை வள்ளலே தவிர்த்தது என்று* - மேகத்தைப் போன்ற கருநிறத்தையுடைய விஷ்ணுமூர்த்திக்கு நான் சொல்லிய மயக்கத்தையுடைய சாபத்தைச் சிவபெருமானே நீக்கியதென்றெண்ணி; *ஓர் கோல மண்டபம் புகுந்து குரு மணி கதவு சாத்தி இருப்ப* - அழகிய ஒரு மண்டபத்தையடைந்து நிறம் விளங்குகின்ற ரத்தினமழுத்தப் பெற்ற கதவைச் சாத்திக்கொண்டு இருக்க; *பரமன் மாயனை பார்த்து* - சிவ பெருமான் விஷ்ணுமூர்த்தியைத் திருநோக்கஞ் செய்து எ-று.

உடையது என்பது ஈறுதொக்கது. ஏ பிரிநிலை. உருவ முதலியவற்றால் வேலினுஞ் சிறந்ததென்பார் வேலினைப்பழித்த என்றார். வாலசுந்தரி இளமையின் அழகினையுடையாள். 87

பார்த்தசா ரதிநின் றங்கை
பகர்ந்திடு சாபந் தன்னைத்
தீர்த்ததெவ் வாறோ வென்று
தெரிகிலன் போலக் கேட்ப,
மூத்தவ னின்சேய் நோன்பின்
முழுப்பல னிதுவென் றோதப்
பூத்தொடை மவுலி வேணி
புரிகுழல் வருமா றெண்ணி

**இ-ள் :** *பார்த்தசாரதி* - அர்ச்சுனனது சாரதியாகிய விஷ்ணுவே!; *நின் தங்கை பகர்ந்திடும் சாபந்தன்னை தீர்த்தது எவ்வாறு என்று தெரிகிலன் போல கேட்ப* - உனது தங்கையாகிய உமாதேவி சொல்லிய சாபத்தை நீக்கியது எப்படியென்று அறியாதார்போலக் கேட்க; *மூத்தவன் நின் சேய் நோன்பின் முழுபலன் இது என்று ஓத* - உமது மூத்தகுமார ராகிய விநாயகக் கடவுளினது விரதானுட்டானத்தின் முழுதாகிய பலனிதுவென்று விஞ்ஞாபனஞ்செய்ய; *பூ தொடை மவுலி வேணி புரி குழல் வருமாறு எண்ணி* - பூமாலையையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் முறுகிய கூந்தலையுடைய உமாதேவி (வெறுப்பு நீங்கித் தம்மிடத்து) வரும்படி நினைத்து எ-று.

ஒ அசைநிலை. மவுலிவேணி புரிகுழல் அன்மொழித் தொகைகள். 88

எண்ணிலா னந்த மூழ்கி
யிபமுக னோன்பை நோற்றுக்
கண்ணுத லிருப்பத் தேவி
கதவினைத் திறந்து தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யண்ணலை யணுகி யன்பா
லடிதொழு தடியே னிந்த
வண்ணமா ளிகையை விட்டு
வந்தவற் புதமென் னென்றாள்.

**இ-ள் :** *கண்ணுதல் எண்ணில் ஆனந்தம் மூழ்கி இபமுகன் நோன்பை நோற்று இருப்ப* - சிவபெருமான் அளவில்லாத மகிழ்ச்சியில மிழ்ந்தி யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளது விரதத்தை அனுட்டித்துக்கொண்டிருப்ப; *தேவி கதவினை திறந்து தானே அண்ணலை அணுகி அன்பால் அடிதொழுது* - உமாதேவி கதவைத் திறந்து தாமாகவே சிவபெருமானை அடைந்து அன்பினுடனே நமஸ்கரித்து; *அடியேன் இந்த வண்ண மாளிகையை விட்டு வந்த அற்புதம் என் என்றாள்* - சிறியேன் இந்த அழகிய மாளிகையை நீங்கி இங்கே வந்த அதிசயம் என்னவென்று வினாவினார் எ-று.

ஏ பிரிநிலை. 89

என்றலுங் கவுரி நீபெற்
றெடுத்தவ னோன்பி னன்மை
சென்றுனைக் கொணர்ந்த தென்னத்
தெரிவையு மகிழ்ந்தி யானு
மன்றலங் கடம்ப னெம்பால்
வரவருண் மதம்பாய் வேழக்
கன்றினோன் பினிதி யற்றக்
கடவனென் றியற்ற லோடும்.

**இ-ள் :** *என்றலும்* - இவ்வாறு வினாவுதலும், கவுரி-தேவியே!; *நீ பெற்று எடுத்தவன் நோன்பின் நன்மை சென்று உனை கொணர்ந்தது என்ன* - நீ பெற்றெடுத்த வினாயகக் கடவுளின் விரதத்தையனுட்டித்த நன்மையானது வந்து உன்னை அழைத்து இங்கே கொணர்ந்தது என்று கூற; *தெரிவையும் மகிழ்ந்து* - உமாதேவியும் மனங்களித்து; *மன்றல் அம் கடம்பன் எம்பால் வர* - வாசனைபொருந்திய அழகிய கடப்பமாலையை யணிந்த குமாரக்கடவுள் எம்மிடத்தே வரும்படி; *அருள் மதம் பாய் வேழ கன்றின் நோன்பு யானும் இனிது இயற்றக் கடவன் என்ற இயற்றலோடும்* - கருணையாகிய மதஞ்சிந்துகின்ற யானைமுகத்தை யுடைய விநாயகக் கடவுளுடைய விரதத்தை நானும் நன்றாக அனுட்டிக்கக்கடவே னென்றுகூறி அவ்வாறேயனுட்டித்தலும் எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமுதலிருசெய்யுளொருதொடர். 90

இயற்றிய விரத நன்கா
லிளையவன் வள்ளி தன்னை
நயத்தொடு மணந்து தெய்வ
நாகமாந் தைய லோடுஞ்
செயத்தொடு மயிலி லேறித்
தேவர்க டுதிக்க வந்தான்
கயற்கொடி மதனைச் செற்ற
கண்ணுத லுமைகண் காண

**இ-ள் :** *இயற்றிய விரத நன்கால்* - அனுட்டித்த விரதத்தின் நன்மையால்; *இளையவன் வள்ளிதன்னை நயத்தொடு மணந்து* - இளையகுமாரராகிய கந்தசுவாமி வள்ளியம்மை யாரை இன்பத்தோடும் விவாகஞ்செய்து; *தெய்வநாகம் ஆம் தையலோடும் செயத்தொடு மயிலில் ஏறி* - தெய்வயானையாகிய அம்மையாருடனும் வெற்றியுடன் மயில்வாகனத்தெழுந்தருளி; *தேவர்கள் துதிக்க* - தேவர்கள் தோத்திரஞ் செய்ய; *கயற்கொடி மதனை செற்ற கண்ணுதல் உமை கண் காண வந்தான்* - கயல் மற்சக்கொடியினையுடைய மன்மதனை எரித்தழித்த சிவபெருமானும் உமாதேவியும் பார்க்கும்படி வந்தருளினார் எ-று.

விரதநன்கால் வந்தான் என இயையும். வள்ளிதன்னை மணந்து என்றதனால் வள்ளியம்மையாரும் உடன் வந்தாரென்க. 91

காணரும் பொருளா மன்னோர்
கழலிணை கண்டு வாழ்த்தித்
தாணுவைப் பணிந்து தாயைத்
தரிப்பிலா திறைஞ்ச லோடும்
பூணுறு மார்பன் றன்னைப்
புல்லியங் கவருந் தங்கண்
மாணிதிக் குவையீ தென்ன
மருங்கினி லிருத்த வைகி.

**இ-ள் :** *காணரும் பொருள் ஆம் அன்னோர் கழல் இணை கண்டு வாழ்த்தி* - (அஞ்ஞானிகளாற்) காணுதற்கு அருமையான பொருளாயிருக்கின்ற அத்தந்தையாரது இருபாதங்களையுந் தரிசித்துத் துதித்து; *தாணுவை பணிந்து தரிப்பிலாது தாயை இறைஞ்சலோடும்* - நிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாகிய சிவபெருமானை முதல் வணங்கிப் பின்பு தாமதமின்றி உமாதேவியை வணங்குதலும்; *அவரும் பூண் உறு மார்பன் றன்னை புல்லி* - அந்த இரு முதுகுரவரும் ஆபரணம்பொருந்திய மார்பினை யுடைய சுப்பிரமணியப்பெருமானைத் தழுவி; *தங்கள் மாண் நிதிக்குவை ஈது என்ன மருங்கினில் இருத்த வைகி* - தமது மாட்சிமைபொருந்திய திரவியக்குவியல் இது என்று சொல்லும்படி (பெருமைபாராட்டிப்) பக்கத்திலிருத்த (அப்பெருமான்) வீற்றிருந்து எ-று.

அங்கு அசை. இது முதன்மூன்று செய்யுளொருதொடர். 92

வைகொடு சிறந்த வேலோன்
மகிழ்ந்தினி திருந்தா னிப்பாற்
கைகொடு தொழுதெல் லோருங்
கருதிப முகவ னோன்பு
பைகொடு பாந்த டாங்கும்
படியெலாம் பரவ நீதி
மெய்கொடு புரக்க வல்ல
வேந்தன்விக் கிரமா தித்தன்.

**இ-ள் :** *வை கொடு சிறந்த வேலோன் மகிழ்ந்து இனிது இருந்தான்* - கூர்மை பொருந்திச் சிறப்புற்ற வேலாயுதத்தைக் (கையிலே) தரித்த கந்தசுவாமி மனங்களித்து நன்குவீற்றிருந்தார்; *இப்பால்* - இதன் மேல்; *எல்லோரும் கைகொடு தொழுது கருது இபமுகவன் நோன்பு* - யாவரும் கைகளினால் தொழுது தியானிக்கின்ற யானைமுகத்தை யுடைய விநாயகக்கடவுளின் விரதமானது; *பாந்தள் பைகொடு தாங்கும் படி எலாம் பரவ* - ஆதிசேடன் ஆயிரம்பணாமகுடங்களாற் சுமக்கின்ற பூவுலகமெங்கும் பரப்ப; *நீதிமெய் கொடு புரக்க வல்ல வேந்தன் விக்கிரமாதித்தன்* - நீதியை உண்மை தவறாமற் பரிபாலனஞ்செய்ய வல்ல அரசனாகிய விக்கிரமாதித்தனுடைய எ-று.

கொடு நான்கும் இடைக்குறைகள். அரசர்க்கு உண்மை தவறாமையே நீதிபதி வளர்ப்பதென்பதை அரிச்சந்திரன் முதலிய மகாராசாக்களின் சரித்திரங்களாலுணர்க. 93

தன்னிக ரில்லாத் தேவி
சதுரிலக் கணைய னுட்டித்
தந்நெடு விரத முற்றா
தந்தநூற் காப்பை வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்னலு ற்றுலர்ந்த கொவ்வை
யிடத்தெறிந் திடவ தெல்லா
முன்னையிற் றழைத்துக் காய்த்து
முகடெழச் செழித்த தன்றே.

**இ-ள் :** *தன் நிகர் இல்லா தேவி சதுர் இலக்கணை அனுட்டித்து* - தன்னையொப்பார் பிறரில்லாத மனைவியாகிய (சாமர்த்தியமுடைய) இலக்கணசுந்தரியானவள் அனுட்டிக்கத்தொடங்கி; *அ நெடு விரதம் முற்றாது அந்த நூல் காப்பை வாங்கி* - அந்த நெடிய விரதத்தை முடிக்காமல் (கையிற்றரித்த) அந்நூற்காப்பைப் பிடுங்கி; *இன்னல் உற்று உலர்ந்த கொவ்வை இடத்து எறிந்திட* - (நீரின்மையினால்) துன்பமுற்று வாடிய கொவ்வங் கொடியின்மேலெறிய; *அது எல்லாம் முன்னையில் தழைத்து காய்த்து* - அக்கொடிமுழுவதும் முன்போலத் தளிர்த்துக் காய்த்து; *முகடு எழ செழித்தது* - ஆகாயத்தைத் தொடும்படி செழித்து வளர்ந்தது எ-று.

அன்று ஏ அசைகள் இல்லாத என்பதன் ஈறுதொக்கது. 94

செழித்த நாளொருத்தி வேப்பஞ்
சேரியிற் சிறை யிருந்து
பழித்தலுக் கிசைந்தாள் கொவ்வைப்
பழம்பறித் தருந்தும் வேலை
கழித்தகாப் பிழையைக் கண்டு
கைதனி லெடுத்துக் கட்டி
வழித்துணை யிபத்த னோன்பை
மகிழ்ந்துநோற் றிடுக்கண் டீர்ந்தாள்.

**இ-ள் :** *செழித்தநாள்* - தழைத்துநின்றகாலத்தில்; *வேப்பஞ் சேரியில் சிறையிருந்து பழித்தலுக்கு இசைந்தாள் ஒருத்தி* - வேப்பஞ் சேரியிலே சிறையிருந்து இகழ்வதற்குரியவளான ஒரு பெண்; *கொவ்வை பழம் பறித்து அருந்தும் வேலை* - அந்தக் கொவ்வங்கொடியின் பழத்தை ஆய்ந்து பக்ஷிக்கும்பொழுது; *கழித்த காப்பு இழையை கண்டு எடுத்து கை தனில் கட்டி* - விலக்கியெறிந்த அந்தக்காப்புநூலைப்பார்த்து எடுத்துக்கையிற்கட்டி; *மகிழ்ந்து வழித்துணை இபத்தன் நோன்பை நோற்று இடுக்கண் தீர்ந்தாள்* - மனங்களித்து வழிநடக்கும்போது துணையாகின்ற யானைமுகக்கடவுளது விரதத்தை அனுட்டித்துத் தனக்கும் சம்பவித்த இடர்களை நீங்கினாள் எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்மார்க்கமுடையவ ளென்னுங் கருத்தமையப் பழித்தலுக் கிசைந்தாள் என்னுஞ்சொல் ஈண்டுப்பிரயோகிக்கப்பட்டது. 95

தீர்த்தனள் சிறுமை யெல்லாஞ்
சிற்றிடை யவளை மன்னன்
பார்த்தணைத் துயிர்போ லெண்ணிப்
பதிதனிற் கொடுபோய் வைகி
வார்த்தன தடத்தின் மூழ்கி
மயிலுடன் றுயிலும் போது
மூர்த்தியைங் கரத லத்து
முதலெழுந் தருளிப் போந்து.

**இ-ள் :** *சிறுமை எல்லாம் தீர்த்தனள்* - (வேப்பஞ்சேரியிற்சிறை யிருந்த மங்கை) தன்புன்மைகளெல்லாவற்றையும் நீக்கினாள்; இதுநிற்க *மன்னன் சிற்றிடை அவளை பார்த்து அணைத்து* - விக்கிரமாதித்தராசன் சிறிய இடையினையுடைய அவ்விலக்கணசுந்தரியைப் பார்த்துத்தழுவி; *உயிர்போல்எண்ணி* - உயிர் போலக்கருதி பதிதனில் கொடுபோய்வைகி மாளிகையினுட்கொண்டு போய் மஞ்சத்திலிருந்து; *வார் தன தடத்தின் மூழ்கி மயில் உடன் துயிலும்போது* - கச்சினுட்பொருந்திய தனமாகிய தடாகத்திலமிழ்ந்திப் புணர்ந்து அவ்விலக்கணசுந்தரியுடன் நித்திரை செய்யும்பொழுது; *ஐங்கரத்து முதல் மூர்த்தி எழுந்தருளி போந்து* - ஐந்து திருக்கரங் களையுடைய முதற்கடவுளாகிய விநாயகப்பெருமான் எழுந்தருளிவந்து எ-று.

மயில் ஆகுபெயர். 96

போந்தவன் கனவின் மன்ன
புகழிலக் கணையென் றோதுங்
காந்தையை விடுத்தி யென்று
கழறிட வமைச்ச ரோடவ்
வேந்தலு மெண்ணி யீதிங்
கென்கொலென் றிருக்கு நாளின்
மாந்தளிர் மனைநி மித்த
மடிந்தன சிலப தாதி.

**இ-ள் :** *அவன் கனவில்போந்து* - அந்த விக்கிரமாதித்தராசனுடைய சொப்பனத்தின்கண்ணே தோற்றி; *மன்ன புகழ் இலக்கணை என்று ஒதும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காந்தையை விடுத்தி என்றுகழறிட* - அரசனே காந்தியையுடைய இலக்கண சுந்தரியென்று சொல்லப்படும் உனது மனைவியைத் துரத்திவிடு என்று கூற; *அ ஏந்தலும் இங்கு ஈது என்கொல் என்று அமைச்சரோடு எண்ணி இருக்கும் நாளில்* - அந்த விக்கிரமாதித்த ராசனும் இங்கே நிகழ்ந்த இக்கனவுயாதோ என்று மந்திரிமாரோடு ஆலோசித்து இருக்கும்நாட்களில்; *மாந்தளிர் மனை நிமித்தம் சில பதாதி மடிந்தன* - மாந்தளிரைப்போன்ற கால்களையுடைய மனைவியாகிய இலக்கணசுந்தரி செய்த பிழைகாரணமாகச் சிலகாலாட் சேனைகள் இறந்தன எ-று.

கொல் ஐயப்பொருட்டு, மாந்தளிர் ஆகுபெயர். 97

தாதவிழ் தொடையன் மார்பன்
சலித்திலக் கணைமேல் வைத்த
காதலை யொழித்து நீயிக்
கணம்பதி விடுத்துப் போகென்
றோதலும் வெருவி யவ்வி
லொருவியோ ருழவ னில்புக்
கேதமி லோவி யம்போ
லிருந்தன ளிருந்த நாளில்.

**இ-ன் :** *தாது அவிழ் தொடையல் மார்பன் சலித்து* - பராகம்விரிந்த மலர்மாலையையணிந்த மார்பினையுடைய விக்கிரமாதித்தராசன் துன்பங்கொண்டு; *இலக்கணை மேல் வைத்த காதலை ஒழித்து* - (தன் மனைவியாகிய) இலக்கணசுந்தரிமேற் பதித்திருந்த ஆசையை நீக்கி; *நீ இ கணம் பதி விடுத்துபோக என்று ஓதலும்* - நீ இந்தக்ஷணத் திலே இந்நகரத்தைவிட்டுப் போ என்று கூறுதலும், *வெருவி அ இல் ஒருவி* - (அதுகேட்ட இலக்கணசுந்தரி) பயந்து அந்தராசமாளிகையை நீங்கி; *ஓர் உழவன் இல் புக்கு ஏதம் இல் ஓவியம் போல் இருந்தனள்* - ஒரு வேளாளனுடைய வீட்டிற் சென்று குற்றமற்ற சித்திரப் பாவையைப் போலச் செயலற்றிருந்தாள்; *இருந்த நாளில்* - அங்ஙனமிருந்தகாலத்தில் எ-று.

போக என்பதன் ஈற்றகரந்தொக்கது. 98

இருந்தவ ணிமித்த மேழிக்
கிறைபயி ரழிந்து போகப்
பொருந்தில னாகி யன்னோன்
போவென வவளை நீக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திமற் றவளோர் செட்டி
மனைபுக மனையின் முத்தும்
விரிந்தொளிர் மணியுந் தீய
வெகுண்டவ னவளைப் போக்க.

**இ-ள் :** *இருந்தவள் நிமித்தம் மேழிக்கு இறை பயிர் அழிந்துபோக* - இருந்தவளாகிய அந்த இலக்கணசுந்தரியின் காரணத்தினாற் கலப்பைக்குத் தலைவனாகிய அவ்வேளாளனுடைய பயிர்கள் அழிந்துகெட; *அன்னோன் பொருந்திலன் ஆகி அவளை போ என நீக்க* - அவன் சம்மதமில்லாதவனாய் அவ்விலக்கண சுந்தரியைப் போவென்று விலக்க; *அவள் வருந்தி ஓர் செட்டி மனைபுக* - அவள் வருத்தங் கொண்டு ஒரு வைசியனுடைய வீட்டிற்போயிருக்க; *மனையில் முத்தும் விரிந்து ஒளிர்மணியும் தீய* - அவன் வீட்டிலுள்ள முத்துக்களும் பரந்து பிரகாசிக்கின்ற இரத்தினங்களும் அழிந்துபோக; *அவன் வெகுண்டு அவளை போக்க* - அது கண்டு செட்டியுங்கோபித்து அவளைத் துரத்த எ-று.

மற்று அசை.

போக்கலுங் குயவன் வீட்டிற்
புக்கவ ளிருப்ப வன்னோ
னாக்குமட் கலமு டைந்தே
யழிதர வவனு நீக்க
வாக்குரை தளர்ந்து வண்ணான்
மனைபுக வெளுத்த வாடை
தூக்குமு னிழைவே றாகத்
துரத்தின னவளைச் சீறி.

**இ-ள் :** *போக்கலும்* - வைசியன் துரத்துதலும்; *அவள் குயவன் வீட்டில் புக்கு இருப்ப* - அவள் ஒரு குயவனுடைய வீட்டிற் போயிருக்க; *அன்னோன் ஆக்கும் மண் கலம் உடைந்து அழிதர* - அவன் உண்டாக்கு கின்ற மட்பாண்டங்கள் உடைந்து சிதைய; *அவனும் நீக்க* - (அது கண்டு) அந்தக் குயவனும் துரத்த; *வாக்கு உரை தளர்ந்து வண்ணான் மனைபுக* - (எல்லோருந் தன்னைக்கழித்தலாலுண்டாய துன்பமேலீட்டி னால்) பேச்சுத்தடுமாறி ஒரு வண்ணானுடைய வீட்டிற் போயிருக்க; *வெளுத்த ஆடை தூக்கும் முன் இழை வேறு ஆக-* வெளுக்கப்பெற்ற *வஸ்திரங்கள்* கையிலெடுத்தற்கு *முன்னே* இழைகள் வேறாகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிழிந்துவிட; அவளை சீறி துரத்தினன்* - வண்ணானும் அவ்விலக்கணசுந்தரியைக் கோபித்துத் துரத்திவிட்டான் எ-று.

ஏ அசை. 100

சீறலை யென்ற கன்று
சிற்றிடை மாலைக் காரன்
றூறிலிற் புகுந்தி ருப்பத்
தோட்டலர் பணிய தாகத்
தூறின னவளை மாலை
தொடுப்பவன் விடுப்பக் கண்ணீ
ரூறியங் கவள்போ யவ்வை
யுறைமனை யகத்திற் புக்காள்.

**இ-ள் :** *சிற்றிடை* - நுண்ணிய இடையையுடைய இலக்கணை யானவள்; *சீறலை என்று அகன்று* - கோபியாதே என்று கூறி அவனது மனையையும் நீங்கி; *மாலைக்காரன் தூறு இல்லில் புகுந்து இருப்ப* - மாலை கட்டுவானுடைய சிறு செடி பொருந்திய வீட்டிலே போயிருக்க; *தோடு அலர் பணியது ஆக* - இதழ்பொருந்திய மலர்மாலைகள் பாம்புகளாக; *மாலைதொடுப்பவன் அவளை தூறினன் விடுப்ப* - (அதனால்) அந்தமாலைக்காரனும் அவளை ஏசித் துரத்த; *அவள் கண் நீர் ஊறி போய்* - அவள்கண்களினின்றும் நீர் சிந்தப்போய்; *அவ்வை உறை மனையகத்தில் புக்காள்* - அவ்வையார் வசிக்கின்ற வீட்டினுட் பிரவேசித்தாள் எ-று.

அது பகுதிப்பொருள்விகுதி. அங்குஅசை, அலர் ஆகுபெயர். சிற்றிடை அன்மொழித்தொகை. 101.

புக்கவ ளிருப்ப வவ்வை
போமிடந் தோறு முள்ளார்
மிக்கவ ளெனாமற் றள்ளி
வீழ்த்தினர் குத்தி வைதா
ரிக்குறை வருவ தென்கொ
லெனவவ்வை மனையில் மீண்டு
துக்கமித் தனையு மிந்தச்
சுரிகுழ னிமித்த மென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ-ள் :** *அவள்புக்கு இருப்ப* - அவ்விலக்கணசுந்தரி அங்கே போயிருக்க; *அவ்வை போம் இடம் தோறும் உள்ளார்* - அவ்வையார் செல்லுகின்ற இடங்களெங்கும் உள்ளவர்கள்; *மிக்கவள் எனாமல் தள்ளி வீழ்த்தினர் குத்தி வைதார்* - (அவ்வவ்வையாரை) மேன்மையுள்ளவ ரென்று கருதாமல் தள்ளி விழுத்திக் கையினாற்குத்தி ஏசினார்கள்; *அவ்வை இ குறை வருவது என்கொல் என மனையில் மீண்டு* - அவ்வையார் எனக்கு இந்த இழிவுண்டாவது யாது காரணத்தாலோ என்றெண்ணி வீட்டிலே திரும்பிவந்து; *இத்தனை துக்கமும் இந்த சுரிகுழல் நிமித்தம் என்று* - இவ்வளவு துயரமும் இந்தப்பெண்ணின் காரணத்தால் வந்ததென்று நிச்சயித்து எ-று.

இதுமுதல் ஆறுசெய்யுளொருதொடர். ஏ அசை. சுரிகுழல் அன்மொழித்தொகை. 102

என்றகத் தினிலோர்ந் தவ்வை
யிலங்கிழை துயரந் தீர்ப்பா
ளன்றக மெழுக மின்னே
யாமயங் கொணர்தி யென்னச்
சென்றவ ளெடுத்துப் போகத்
திருமெழுக் குழுத்த லாகப்
பொன்றிக ழவ்வை தேடிப்
போயது கொணர்ந்து மன்னோ

**இ-ள் :** *அவ்வை என்று அகத்தினில் ஓர்ந்து* - அவ்வையார் இவ்வாறு மனத்தில் உணர்ந்து; *இலங்கு இழை துயரம் தீர்ப்பாள்* - விளங்குகின்ற ஆபரணங்களைத் தரித்தவளாகிய இலக்கணையினது துன்பத்தை நீக்க எண்ணியவளாய்; *அன்று மின்னே அகம் மெழுக ஆமயம் கொணர்தி என்ன* - அற்றைத் தினத்தில் பெண்ணே! வீடு மெழுகுதற்காகக் கோமயத்தைக் கொண்டுவா என்று சொல்ல; *அவள் சென்று திருமெழுக்கு எடுத்துபோக உழுத்தலாக* - அவ்விலக்கணை போய்க் கோமயத்தை எடுத்துவர அது உழுத்திருப்பதாக; *பொன்திகழ் அவ்வை தேடி போய் அது கொணர்ந்து* - அழகு விளங்குகின்ற அவ்வையார் தேடிப்போய் அந்தக் கோமயத்தைக் கொண்டுவந்து எ-று.

மன் ஓ அசைகள்: உழுத்த கோமயம் மெழுகுதற்கு விலக்காதலின் அதனை நீக்கித் தாமெடுத்துக் கொணர்ந்து மெழுகினாரென்க. 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிய வீட தெல்லாம்
வளம்பெற மெழுகி யெங்கு
மின்னுற விளக்கு வைத்து
விளங்கவீ டலங்க ரித்துப்
பின்னர்புத் தகமெ டுத்துப்
பேதைநீ வருக வென்னக்
கன்னிபோ யெடுக்க முன்னங்
கதமுறு மரவ மாக

**இ-ள் :** *மன்னிய வீடு எல்லாம் வளம்பெற மெழுகி* - நிலைபெற்ற வீடுமுழுவதும் வளப்பம் பொருந்தும்படி மெழுகி; *எங்கும் மின் உற விளக்கு வைத்து* - எவ்விடங்களினும் பிரகாசம் பொருந்தத் தீபமேற்றி; *விளங்க வீடு அலங்கரித்து* - சிறப்புறும்படி அவ்வீட்டை அலங்காரஞ் செய்து; *பின்னர்* - அதன்பின்பு; *பேதை நீ புத்தகம் எடுத்து வருக என்ன* - பெண்ணை! நீ புத்தகத்தை எடுத்துவாவென்று (அவ்வையார்) சொல்ல; *கன்னிபோய் எடுக்க முன்னம் கதம் உறும் அரவம் ஆக* - அவ் விலக்கணை போய் எடுத்தற்கு முன்னரே அப்புத்தகம் வேகம் பொருந்திய சர்ப்பமாக எ-று.

அது பகுதிப் பொருள்விகு. பேதை ஈண்டுப்பருவங்குறியாது பெண்ணென்னும் பொருட்டாய் நின்றது. 104

அரவெனப் பயந்த மாதை
யஞ்சலென் றவ்வை சென்று
பரிவுட னெடுத்து வந்து
பார்த்துவெங் கரிமு கத்து
புரவலன் றிருக்கூத் திந்தப்
பூவையுண் மெலிவ தென்று,
விரைவினி லெழுந்து தையன்
மென்கையிற் காப்புக் கட்டி.

**இ-ள் :** *அவ்வை அரவு என பயந்து மாதை அஞ்சல் என்று* - அவ்வையார் (அப்புத்தகத்தைப்) பாம்பென்றெண்ணி வெருவிய இலக் கணையை நோக்கிப் பயப்படாதே என்று கூறி; *சென்று பரிவு உடன் எடுத்து வந்து பார்த்து* - (தாம்) போய் அன்பினுடனே அப்புத்தகத்தை எடுத்துவந்து அதிலே பார்த்து; *இந்த பூவை உள் மெலிவது வெம் கரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முகத்து புரவலன் திருக்கூத்து என்று* - இந்நங்கை மனம்வாடுவது விரும்பப்படுகின்ற யானை முகத்தையுடைய தலைவராகிய விநாயகக் கடவுளது திருக்கூத்தாமென்றறிந்து; *விரைவினில் எழுந்து தையல் மென் கையில் காப்பு கட்டி* - அதனைத் தீர்த்தற்காகச் சீக்கிரத்திலெழும்பி இலக்கணையினுடைய மென்மையாகிய கையிலே காப்பைக்கட்டி எ-று.

காட்டியானைமுகம்போலாது கருணைமதம்பொழியும் முக மாதலின் வெங்கரிமுகத்து என்பதில் வெம் என்பதற்கு விரும்பப் படுகின்ற எனப் பொருளுரைத்தாம். 105

கட்டிய தாமத் தோடு
கடிமல ரனைத்துந் தந்து
பட்டுடை யவளைக் கொண்டே
பரிந்திப முகனைத் தாபித்
தட்டதிக் கனைத்துங் கந்தித்
தவிரொளி பரப்பித் தீங்கு
விட்டற வருச்சிப் பித்து
விதியினோற் பித்த பின்னர்.

**இ-ள் :** *கட்டிய தாமத்தோடு கடிமலர் அனைத்தும் தந்து* - தொடுத்த மாலையையும் வாசனை பொருந்திய உதிர்புஷ்பவகையனைத்தையும் கொணர்ந்து; *பட்டுடையவளை கொண்டு பரிந்து இபமுகனை தாபித்து* - பட்டு வஸ்திரத்தைத்தரித்தவளாகிய அவ்விலக்கணையைக்கொண்டு அன்புடனே யானைமுகக்கடவுளைத்தாபனஞ்செய்து; *அட்டதிக்கு அனைத்தும் கந்தித்து அவிர் ஒளி பரப்பி* - எட்டுத்திக்குகளெங்கும் வாசனைகமழ்வித்துப் பிரகாசிக்கின்ற சோதியைப் பரப்பி; *தீங்கு விட்டு அற அருச்சிப்பித்து* - தீமைவிட்டு நீங்கும்படி பூசை செய்வித்து ; *விதியின் நோற்பித்த பின்னர்* - விதிப்படி அனுட்டிப்பித்த பின்பு எ-று.

ஏகாரம் பிரிநிலை. அட்டதிக்கனைத்துங்கந்தித்தவிரொளிபரப்பி என்றதனால் தூபதீபங்களால் ஆராதிப்பித்தென்பது பெற்றாம். 106.

பின்னலஞ் சடையோன் பிள்ளை
பெருந்திரு விரத மிவ்வா
றின்னலுற் றிடையூ றெய்தா
தியற்றியே யிருந்த வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னவ ளெதிரீ ரைஞ்ஞூ
றாதபர் குழுவுற் றென்ன
முன்னவ னெழுந்து தோன்ற
முகமலர்ந் தகம கிழ்ந்தாள்

**இ-ள் :** *பின்னல் அம் சடையோன்பிள்ளை பெரும் திருவிரதம்*-முறுகிய அழகிய சடைமுடியையுடைய சிவபெருமானது திருக்குமாரராகிய விநாயகக்கடவுளது மகிமைபொருந்திய சிறந்த விரதத்தை ; *இவ்வாறு* - இப்படியே; *இன்னல் உற்று இடையூறு எய்தாது இயற்றி இருந்த வேலை* - துன்பம்பொருந்தி (முன்போற்) பங்கம் நேரிடாமல் அனுட்டித்திருந்தகாலத்தில்; *முன்னவன்* - முதல்வராகிய விநாயகக் கடவுள்; *அன்னவள் எதிர்* - அந்த இலக்கணையின் முன்னே, *ஈரைஞ் ஞூறு ஆதபர்குழு உற்றென்ன எழுந்து தோன்ற* - ஆயிரஞ்சூரியர்களது கூட்டம் வந்தாற்போல (அத்துணைப்பிரகாசத்துடன்) உதித்துப் பிரசன்னமாக; *முகம் மலர்ந்து அகம் மகிழ்ந்தாள்* - (அதுகண்ட) இலக்கணை முகமலரப்பெற்று மனங்களித்தாள் எ-று.

ஏ அசை. உற்றாலென்ன எனற்பாலது உற்றென்ன என ஆல்கெட்டுநின்றது.

107

மகிழ்ந்தன ளரசே யத்தி
வதனனே போற்றி யென்று
புகழ்ந்தனள் பிழைமுன் செய்தேன்
பொறுத்தியென் றகந்தை யெல்லா
மிகழ்ந்தனள் பணிந்தி றைஞ்சி
யின்பவா ரிதியின் மூழ்கித்
திகழ்ந்தன ளுமையாள் பெற்ற
சிறுவனு மிரங்கிச் சொல்லும்.

**இ-ள் :** *மகிழ்ந்தனள்* - இலக்கணை சந்தோஷங்கொண்டு; *அரசே அத்தி வதனனே போற்றி என்று புகழ்ந்தனள்* - முதல்வரே யானை முகத்தையுடையவரே துதி என்று துதித்து; *முன் பிழை செய்தேன் பொறுத்தி என்று* - முன்னே (அறியாமையினாலே) விரதபங்கமாகிய பிழையைச் செய்தேன் அதனைச் சகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து; *அகந்தை எல்லாம் இகழ்ந்தனள்* - தன்னுடைய கர்வங் களெல்லாவற்றையும் பழித்து; *பணிந்து இறைஞ்சி இன்ப வாரிதியில் மூழ்கி திகழ்ந்தனள்* - தாழ்ந்து வணங்கிச் சந்தோஷசாகரத்திலமிழ்ந்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசித்தாள்; *உமையாள்பெற்ற சிறுவனும் இரங்கி சொல்லும்* - உமாதேவிபெற்ற புத்திரராகிய விநாயகக்கடவுளும் அப்போது இரங்கிச் சொல்லுவார் எ-று.

மகிழ்ந்தனள் என்பதுமுதலிய வினைமுற்றுக்களை எச்சமாக்கிப் பொருள் கொள்ளப்பட்டது. 108.

சொல்லரும் பிழைக டீர்த்தேஞ்
சுடர்முடி யரசன் பாரி
வல்லசெந் திருவைப் போனீ
வாழியென் றருளிச் செய்து
செல்வனங் ககன்று போகத்
திசைதொழு மரிவை யவ்வை
நல்லபொற் பதத்தில் வீழ்ந்து
நயந்தினி திருந்த காலை

**இ-ள் :** *சுடர் முடி அரசன் பாரி* - ஒளிபொருந்திய கிரீடத்தை யுடைய விக்கிரமாதித்தராசனது மனைவியே!; *சொல்ல அரும் பிழைகள் தீர்த்தேம்* - (நீ முன்செய்த) சொல்லுதற்கரிய தவறுகளை நீக்கினோம்; *நீ வல்ல செம் திருவைபோல வாழி என்று அருளிச்செய்து* - நீ வலிய சிவப்பு நிறத்தையுடைய இலக்குமியைப்போல இனி வாழ்ந்திருப்பாய் என்று அனுக்கிரகஞ்செய்து; *செல்வன் அங்கு அகன்று போக* - அருட் செல்வராகிய விநாயகப்பெருமான் அவ்விடத்தை நீங்கி அந்தர்த் தானமாக; *திசை தொழும் அரிவை* - திக்கிலுள்ளார்களால் வணங் கத்தகுந்த இலக்கணசுந்தரி; *அவ்வை நல்ல பொன் பதத்தில் வீழ்ந்து* - அவ்வையாருடைய நல்ல அழகிய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து; *நயந்து இனிது இருந்த காலை* - விரும்பி நன்றாக அங்கே இருந்த காலத்தில் எ-று.

அழகினால் மற்றைப்பெண்களை வென்றமையின் வல்ல என்று இலக்குமியை விசேடித்தார். இது முதலிருசெய்யுளொருதொடர். திசை ஆகுபெயர். பாரி அண்மையினியல்பு. 109.

காலனை யுதைத்தோன் காலைக்
கருதுவிக் கிரமா தித்த
னீலவெற் பனைய கானி
னிறைதரு வேட்டை யாடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலவு மிளைத்து வெற்றித்
தானையோ டுதகம் வேட்டுச்
சீலமா ரியல்சே ரவ்வை
திருத்தலை வாயில் வந்தான்

**இ-ள் :** *காலனை உதைத்தோன் காலை கருது விக்கிரமாதித்தன்* - யமனை உதைத்தழித்த சிவபெருமானுடைய பாதங்களைத் தியானிக்கின்ற விக்கிரமாதித்தராசன்; *நீல வெற்பு அனைய கானில் நிறைதரு வேட்டைஆடி* - நீலநிறமான மலையைநிகர்த்த காட்டிலே நிறைந்த வேட்டையை ஆடி; *சாலவும் இளைத்து* - மிகவுங் களைத்து; வெற்றி தானையோடு உதகம் வேட்டு - வெற்றியையுடைய சேனை களோடும் நீரைப்பருக விரும்பி; *சீலம் ஆர் இயல் சேர் அவ்வை திரு தலை வாயில் வந்தான்* - சிறப்பமைந்த இயல்பு பொருந்திய அவ்வை யாருடைய சிறந்த தலைவாயிலிலே வந்தான் எ-று. 110

வந்தவ னழைப்பித் தவ்வை
மலரடி தொழுது தெண்ணீர்
தந்தரு ளென்னச் செம்பிற்
சலமுட னப்ப மொன்று
பந்தமி லரசன் கையிற்
பாவைசென் றளித்தி யென்ன
வந்தமன் னவன்பாற் சென்றே
யன்புடன் கொடுத்து மீண்டாள்

**இ-ள் :** *வந்தவன் அழைப்பித்து அவ்வை மலர் அடிதொழுது* - வந்த அரசன் வருவித்து அந்த அவ்வையாருடைய செந்தாமரை மலர்போன்ற பாதங்களை வணங்கி; *தெள் நீர் தந்தருள் என்ன* - (எங்கள் தாகத்தை நீக்குதற்குத்) தெளிந்த சலத்தைத்தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க; *பாவை* - (அவ்வையார் இலக்கணையைப்பார்த்து) நங்கையே!; *சென்று செம்பில்சலமுடன் அப்பம் ஒன்று பந்தம் இல் அரசன் கையில் அளித்தி என்ன* - நீ போய்ச் செம்பிலுள்ள தண்ணீரையும் ஒரு அப்பத்தையும் கட்டுப்பாடில்லாத அரசனது கையிற் கொடுப்பாயாக என்றுசொல்ல; *அந்த மன்னவன் பால் சென்று அன்புடன் கொடுத்து மீண்டாள்* - (இலக்கணை) அந்த அரசனிடத்துப் போய் (அப் பொருள்களை) அன்பினுடன் கொடுத்துத் திரும்பினாள் எ-று.

ஏ அசை, தன்னின் மிக்கார்பிறரில்லாத மண்டலேசுவரனாதலின் பந்தமிலரசனென்றார். 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவை யரச னுண்டுங்
குறைவிலா தமையா லன்ன
வடுத்தமந் திரிமு தற்கொண்
டமைந்தநால் வகைச் சேனைக்கு
மெடுத்தெடுத் துதவ முன்போ
லிருந்தன வொருவன் றன்னை
விடுத்துமை யனையா டன்னை
விரைந்தழைத் திறை கொண்டாடி.

**இ-ள் :** *கொடுத்தவை* - இலக்கணை கொடுத்தசலமும் அப்பமும்; *அரசன் உண்டும் குறைவு இல்லாதமையால்* - விக்கிரமாதித்தராசன் உட்கொண்டும் குறையாததன்மையினால்; *அன்ன அடுத்த மந்திரி முதல் கொண்டு அமைந்து நால்வகை சேனைக்கும் எடுத்து எடுத்து உதவ* - அவற்றைப் பக்கத்தினின்ற மந்திரிமுதலாக அமைந்த சதுரங்க சேனைகளுக்கும் எடுத்தெடுத்துக்கொடுக்க; *முன்போல் இருந்தன* - (அவ்வாகாரங்கள்) முன்போலவே நிறைவாயிருந்தன, *இறை ஒருவன் றன்னை விடுத்து* - (அதனைக்கண்ட) அரசன் ஒரு ஏவலாளனை அனுப்பி; *உமை அனையாள் தன்னை விரைந்து அழைத்துக் கொண்டாடி* - உமாதேவியைநிகர்த்த அந்த அவ்வையாரைச் சீக்கிரத்தில் அழைத்துக்கொண்டாடி எ-று.

முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்த தாய் உமையாகலின், அவரை ஒரு சலபாத்திரத்தையும் அப்பத்தையும் எல்லாருக்குங் குறைவறப் பெருக்கியூட்டிய அவ்வையாருக்கு உவமித்தார். 112.

ஆடியற் புதங்கொண் டன்னா
யன்புட னீய னுப்பு
மாடவ ளன்பிற் றந்த
வப்புட னப் பமொன்று
வாடிய படைக்கு மெற்கும்
வளர்ந்ததெந் நிமித்த மென்னப்
பாடிய தமிழ்ப்பி ராட்டி
பரிந்துள மகிழ்ந்து கூறும்.

**இ-ள் :** *ஆடி அற்புதங்கொண்டு* - கொண்டாடி அதிசயமுற்று; *அன்னாய்* - தாயே; *நீஅன்புடன் அனுப்பும் ஆடவள் அன்பில் தந்த அப்புடன் அப்பம் ஒன்று* - நீ அன்போடனுப்பிய பெண்ணானவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத் துடனே தந்த சலமும் ஒரு அப்பமும்; *வாடிய படைக்கும் ஏற்கும் வளர்ந்தது எ நிமித்தம் என்ன* - சோர்வடைந்த சேனைகளுக்கும் எனக்கும் (உட்கொள்ளுந்தோறுங்குறைவின்றி) விருத்தியாயது யாது காரணத்தாலென்று வினாவ; *தமிழ் பாடிய பிராட்டி* - தமிழ்நூல் சில வற்றைப் பாடிய பெருமாட்டியாகிய அவ்வையார்; *பரிந்து உளமகிழ்ந்து கூறும்* - இரங்கி மனமகிழ்ந்து சொல்லுவார் எ-று. 113

கூறுமின் னிடைநின் றேவி
குஞ்சர முகவ னோன்பின்
பேறிகழ்ந் ததனான் முன்னர்ப்
பெருமித மிழந்தா ளீண்டு
வீறுபெற் றனள வன்றன்
விரதத்தை யிங்கு நோற்றாண்
மாறிலப் புடனோ ரப்பம்
வளர்ந்தது விரத நன்கால்

நன்குட னரச நீதி
நடத்தவல் லவனே யென்ன
மின்கிளர் மகுட வள்ளல்
வியந்துகைம் மலர்கு வித்து
முன்குரு குலத்தார் காதை
முற்றுமோர் மருப்பி னாலே
பொன்கிளர் வரையின் மீது
பொறித்தகற் பகமே போற்றி.

**இ-ள் :** *நன்குடன் அரசநீதி நடத்த வல்லவனே* - நன்மையுடன் இராசநீதியைத் தவறாது நடத்தவல்ல அரசனே!; *கூறும் மின் இடை நின் தேவி* - (உன்னாற்) சொல்லப்பட்ட பெண் உன்னுடைய மனைவியேயாம்; *குஞ்சர முகவன் நோன்பின் பேறு இகழ்ந்ததனால் முன்னர் பெருமிதம் இழந்தாள்* - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளின் விரதப் பேற்றை நிந்தித்ததனால் (தனது) பழைய பெருமையை நீங்கினாள்; *அவன்றன விரதத்தை இங்கு நோற்றாள் ஈண்டு வீறுபெற்றனள்* - அந்த விநாயகக்கடவுளது விரதத்தைப் (பங்கமின்றி) இங்கே அனுட்டித்து முன்னிருந்த பழமையைப் பெற்றுக்கொண்டாள்; *விரதநன்கால் மாறு இல் அப்புடன் ஓர் அப்பம் வளர்ந்தது என்ன* - (அவளனுட்டித்த) விரத நன்மையினால் ஒப்பில்லாத ஜலமும் ஒரு அப்பமும் (குறையாது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகியதென்று அவ்வையார் கூற; *மின் கிளர் மகுட வள்ளல்* - ஒளி விளங்குகின்ற கிரீடத்தைத் தரித்த விக்கிரமாதித்தராசன்; *வியந்து கை மலர் குவித்து* - அதிசயித்துக் கைதொழுது; *முன் குருகுலத்தார் காதை முற்றும் பொன் கிளர் வரையின் மீது ஓர் மருப்பினால் பொறித்த கற்பகமே போற்றி* - முற்காலத்திலே குருவம்சத்தாரது சரித்திரமாகிய மகாபாரதமுழுவதையும் பொன் மயமாகிய உயர்ந்த மேருமலையின் மேல் ஒற்றைக் கொம்பினாலெழுதிய கற்பக விருக்ஷம்போன்ற அருள் வள்ளலேதுதி எ-று

மருப்பினாலே என்பதிலேகாரம் அசை. குருஎன்னும் அரசனது குலமாதலின் குருகுலம் எனப்பெயராயது. 114,115.

போற்றருங் கடவுள் கையிற்
பொருந்துமாங் கனியைத் தம்பி
நாற்றிசை முழுதுஞ் சுற்றி
நயந்துபெற் றிடமுன் பெற்றோய்
மாற்றலர் புரங்க டீய
மலைச்சிலை கொண்டு தாதை
வீற்றிருந் திடுதே ரச்சை
விரைந்தறுத் தருளென் கோவே.

**இ-ள் :** *போற்ற அரும் கடவுள் கையில் பொருந்தும் மாங்கனியை* - (அஞ்ஞானிகளால்) தியானித்தற்கரிய சிவபெருமானது கையிலுள்ள மாம்பழத்தை; *தம்பி நால் திசை முழுதும் சுற்றி நயந்து பெற்றிட முன்பெற்றோய்* - தம்பியாகிய சுப்பிரமணியக்கடவுள் கிழக்கு முதலிய நான்கு திக்குகளையும் பிரதக்ஷிணஞ்செய்து விரும்பிவாங்குதற்கு முன்னே (சிவபெருமானையும் உமாதேவியையும் வலம்வந்து) பெற்றுக் கொண்டவரே; *மாற்றலர் புரங்கள் தீய மலை சிலை கொண்டு தாதை வீற்றிருந்திடு தேர் அச்சை* - பகைவருடைய (இருப்பிடமாகிய) முப் புரங்களும் எரியும்படி மேருமலையாகிய வில்லைக் கைக்கொண்டு பிதா வாகிய சிவபெருமான் ஏறியிருந்த (பூமியாகிய) தேரினுடைய அச்சை; *விரைந்து அறுத்து அருள் என்கோவே* - விரைவில் முரித்த எந்தலைவரே எ-று.

விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் என்னுமிரு புத்திரரும் தங்கையிலுள்ள மாம்பழத்தை விரும்புவதையறிந்த சிவபெருமான் உங்களுள் உலகத்தை முதலிற்சுற்றிவந்தார்க்கே இப்பழத்தைக் கொடுப்பேனென்று திருவாய்மலர்ந்தருள, அதுகேட்ட விநாயகக்கடவுள் உலகமாயிருப்பது சிவமும் சத்தியுமேயென்று நிச்சயித்து, தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியாகிய சுப்பிரமணியக்கடவுள் உலகத்தைவலஞ்செய்துவரமுன், பிதாமாதாக்களை வலம்வந்து மாங்கனியை வாங்கினார் என்பது இச் செய்யுளின் முற்கூற்றிற்குறித்த சரித்திரமாம். இதனை "புலவைச்சுவை க்கும்வேன்முருகன்புனிதன்கரமாங்கனிகவர்தற, குலவைக்கதிபோலொரு நொடியினுலகைவலமாய்வருவதன்முன், கலவைக்கலச முலைக்கவுரி கணவற்சூழ்ந்தக்கனிகவர்ந்தோன், வலவைக்குரியோனீடியமூடிக வாக னத்தில்வந்தடைந்தான்" என்னுஞ்செய்யுளாலுமுணர்க. 116

கோவையங் குமுதச் செவ்வாய்க்
குறத்திவே லவனைப் புல்லப்
பூவுளோ ரஞ்சும் யானைப்
பொருப்பென வந்தாய் போற்றி
யாவலோ டுனைக்கா ணாத
வன்பர்கூ வென்னக் கூவென்
றேவல்செய் தவனே போற்றி
யிறைவனே போற்றி யென்றான்

**இ-ள் :** *கோவையம் குமுத செவ் வாய் குறத்தி வேலவனை புல்ல* - கொவ்வங்கனியையுடைய செவ்வாம்பன் மலரொன் றுண்டேலகனை நிகர்த்த சிவந்த வாயையுடைய வள்ளியம்மையார் கந்தஸ்வாமியைத் தழுவும்படி; *பூ உளோர் அஞ்சும் யானை பொருப்ப என வந்தாய் போற்றி* - பூவுலகத்துள்ளோரஞ்சத்தக்க மலைபோலும் யானையாக வந்த வரேதுதி; *உனைகாணாத அன்பர் ஆவலோடு கூ என்ன* - தேவரீரைக் காணாக அடியாரொருவர் மனஆசையோடும் கூ என்றழைக்க; *கூ என்று ஏவல் செய்தவனே போற்றி* - கூவென்று ஏவல் செய்தவரே துதி; *இறைவனே போற்றி என்றான்* - என்றலைவரேதுதி என்று துதித்தான் எ-று.

கோவை குமுதம் ஆகுபெயர்கள். கோவையையுடைய குமுதம் போன்ற சிவந்தவாய் எனவிரிக்க. ஒரு குருட்டுவித்துவான் விநாயகக் கடவுளுடைய திருவுருவைக்கொணர்ந்து ஒரு தடாகக் கரையில் வைத்துத் தடாகத்தில் ஸ்நானம்செய்து மீண்டு வந்துதான் முன்வைத்த மூர்த்தியைத் தேடிக் காணாமையாற் கூவென்று விளிக்க, விநாயகப் பெருமானும் ஈண்டுளேனென்றுணர்த்தற்காகக் கூவென்று பிரதிசப்தஞ் செய்தார் என்க. 117.

என்றுபி னவ்வை தன்னை
யிறைஞ்சிநின் னருளா லென்றன்
மன்றலங் குழலாட் குற்ற
மனத்துய ரகன்ற தென்னாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்றிரள் கொடுத்து மற்றப்
பூவையைக் கொடுதன் கோயில்
சென்றிருந் தனனம் மாலுஞ்
செழுந்திரு மகளு மென்ன.

**இ-ள்:** *என்று பின் அவ்வைதன்னை இறைஞ்சி* - (விநாயகக் கடவுளை இவ்வாறாகத் துதித்துப்) பின்பு அவ்வையாரை வணங்கி; *என்றன் மன்றல் அம் குழலாட்கு உற்ற மனத்துயர்* - வாசனையூட்டிய அழகிய கூந்தலையுடைய எனது மனைவிக்கு வந்த மனத்துக்கம்; *நின் அருளால் அகன்றது என்னா* - உமது அனுக்கிரகத்தினால் நீங்கியதென்று கூறி; *பொன் திரள் கொடுத்து* - (உபகாரமாகப்) பொற்குவியலைக் கொடுத்து; *அ பூவையை கொடு தன் கோயில் சென்று* - அந்த இலக் கணையாகிய பெண்ணை அழைத்துக்கொண்டு தனது மாளிகைக்குப் போய்; *அ மாலும் செழும் திருமகளும் என்ன இருந்தனன்* - அந்த விஷ்ணுமூர்த்தியையும் செழுமையாகிய இலக்குமியையும் போல (இன்புற்று) இருந்தான் எ-று.

பூவை ஆகுபெயர். அ பண்டறிசுட்டு. 118.

மகபதி மருகன் முன்னோன்
மலரடி வணங்கி யேத்தி
யகமகிழ் நோன்ப னுட்டித்
தவர்களி லொருவ ரேனு
மிகபர வின்பு றாதோ
ரிலையஃதி யற்றுந் தன்மை
சகமதிற் படிப்போர் கேட்போர்
தழைத்தினி திருப்ப ரன்றே.

**இ-ள்:** *மகபதி மருகன் முன்னோன் மலர் அடி வணங்கி ஏத்தி* - தேவேந்திரனது மருகராகிய சுப்பிரமணியக்கடவுளின் தமையனாராகிய விநாயகக்கடவுளினது செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை நமஸ் கரித்துத் துதித்து; அகம் மகிழ் நோன்பு அனுட்டித்தவர்களில் - மனமகிழு கின்ற (அப்பெருமானது) விரதத்தை அனுட்டித்தவர்களுள்ளே; *இக பர இன்பு உறாதோர் ஒருவரேனும் இலை* - இம்மை மறுமைச் சுகங்களைப் பெறாதவர்கள் ஒருவர்தாமும் இல்லை; *அஃது இயற்றும் தன்மை* - அவ்விரதத்தையனுட்டிக்கு முறைமையை; *சகமதில் படிப்போர் கேட்போர் தழைத்து இனிது இருப்பர்* - பூவுலகத்திற் படிப்பவர்களும் கேட்பவர்களுஞ் செழித்துச் சிறப்புடன் வீற்றிருப்பார்கள் எ-று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃதியற்றுந்தன்மை என்றது அவ்விரதானுட்டானத்தை யுணர்த்தும் இந்நூலையென்க. அன்று ஏ அசைகள். 119

இருப்பினுள் வலிய ரேனு
மெழுத்தறி வில்லா ரேனு
மருப்பினாற் பார தத்தை
வரைதனிற் பொறித்தான் றன்னை
விருப்பொடர்ச் சனையி யற்றி
விரதமு மனுட்டித் தன்னோன்
றிருப்பத மறவா ரென்றுந்
திருவருள் பெறுவர் தாமே.

**இ-ள் :** *இருப்பின் உள் வலியரேனும்* - இரும்பைப்போல் மன வைராக்கியமுடையவராயினும்; *எழுத்தறிவு இல்லாரேனும்* - கல்வியறி வில்லாதவராயினும்; *மருப்பினால் வரைதனில் பாரதத்தை பொறித்தான் தன்னை* - (தங்கையிலுள்ள) கொம்பினால் மேருமலையிற் பாரதசரித்தி ரத்தை எழுதிய விநாயகக்கடவுளை; *விருப்பொடு அர்ச்சனை இயற்றி விரதமும் அனுட்டித்து* - சிரத்தையுடனே பூசைசெய்து விரதத்தையும் அனுட்டித்து; அன்னோன் திருபதம் மறவார் என்றும் திருவருள் பெறுவர் - அப்பெருமானுடைய திருவடிகளை மறவாதவர்கள் எப்போதும் அவருடைய கருணையைப் பெறுவார்கள் எ-று.

இருப்பு வலித்தல்விகாரம். இருப்பினுள் வலியரெனப்பாடமாயின் உலகத்தில் வசிப்பவர்களெல்லோரினும் வறியவரென்க. தாம் ஏ அசைகள். 120

## *வேறு*

*(கலி விருத்தம்)*

ஆரண முதற்கலை யாக மம்பரி
பூரண மலிசிவ போதம் வாழியே
நாரண னளந்தபூ நாடு வாழியே
வாரண முகனருள் வாழி வாழியே.

**இ-ள் :** *ஆரணமுதற்கலை* - வேதங்களாகிய முதனூலும்; *ஆகமம்* - *ஆகம சாத்திரங்களும், பரிபூரணம் மலி சிவபோதம் வாழி* - எங்கும் நிறைவுபெற்றுச் சிறந்த சிவஞானமும் வாழுக; *நாரணன் அளந்த பூ நாடு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழி* - விஷ்ணுமூர்த்தியால் ஓரடியாக அளக்கப்பட்ட இப்பூவுலகமும் வாழுக; *வாரணமுகன் அருள் வாழி வாழி* - யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுடைய கருணையும் வாழுக வாழுக எ-று.


ஆகமம் மிருதி புராணம் முதலிய எல்லா நூல்களுக்கும் முதநூல் வேதமாதலின் ஆரணமுதற்கலை என்றார். இதனை ''அறையு மெந்நூற்கு மறை பிரதானமாகிய பெரும் பிரமாணம், பொறைதரு மிருதி புராணங்களுப புராண மற்றுள்ள சாத்திரங்கள், நிறைதரு மறைக்கு விரோதமாகாது நிகழ்ந் திடுமனுகுணமாகி, யுறைதரு மறைக்கு விரோதமா நூல்க ளொருவர்க்கும் பயன்படாதனவே'' என்னுஞ் செய்யுளாலுணர்க. அளந்த என்பது படு விகுதி தொக்கு நின்றது. 121

பிள்ளையார் புராணம் முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் புராணம்



சிவதொண்டன் நிலையம்
செங்கலடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org